# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

நவம்பர் - 2016
பருவம் 3 புனல் 26

தனிச்சுற்று
நன்கொடை ரூ 20



## இந்துச் சமூகத்தை சீர்திருத்துவது எங்கள் கடமையும் அல்ல; நோக்கமும் அல்ல!







காட்டாறு

# ‘திராவிடர் பேலியோ’ அறிமுகவிழா

பேலியோ டயட்

கருத்துரைகள்

அனுபவப் பகிர்வுகள்

கேள்வி – பதில்கள்

கருத்துரை:

இதழியலாளர் செந்தில்

டாக்டர் பெரியார்செல்வி

11.12.16

ஞாயிறு மாலை

4 மணி,

வி.ஜி.எஸ். அரங்கு,

திண்டுக்கல்.

சிறுதானிய–

நவதான்யங்களால்

நலிந்தது போதும்!

புலால் புரட்சியால்

புதிதாவோம்!



ஒருங்கிணைப்பு

காட்டாறு

97868 89325

தலித் முரசு

# “நான் ஓர் இந்துவாகச் சாக மாட்டேன்”

## தோழர் அம்பேத்கரின் மதமாற்ற உரைகள்

## நூல் அறிமுகவிழா

கருத்துரை:

தோழர் புனிதப்பாண்டியன்

டாக்டர் தாயப்பன்

இதழியலாளர் சுகுணா திவாகர்

‘‘தாங்கள் புத்திசாலித்தனமான முடிவுக்கு வந்தது பற்றி வாழ்த்து கூறுகின்றேன். தங்களது முடிவை எக்காரணத்தாலும் மாற்ற வேண்டாம். அவசரப்பட வேண்டாம். முதலில் குறைந்தது 10 லட்சம் பேரையாவது மதம் மாற்ற வேண்டும். பிறகே தாங்கள் மதம் மாறுவது பிரயோஜனமாக இருக்கும். மலையாளம் உட்பட தென்னிந்தியா தங்களது முடிவுக்கு பலத்த ஆதரவு அளிக்கும்.’’

*– 13.10.1935 அன்று இயோலா மாநாட்டில் ‘நான் ஓர் இந்துவாக சாக மாட்டேன்’ என்று டாக்டர் அம்பேத்கர் அவர்கள் அறிவித்ததற்கு பேராதரவு தெரிவித்து, பெரியார் 20.10.1935 அன்று அனுப்பிய தந்தி*




ஒருங்கிணைப்பு

காட்டாறு

97868 89325

11.12.16 ஞாயிறு மாலை 6 மணி, வி.ஜி.எஸ். அரங்கு, திண்டுக்கல்.




# Periyar ke Pratinidhi Vichar

‘பெரியார் எழுத்தும் பேச்சும்’ Periyar ke Pratinidhi Vichar (Periyar’s Representative Thoughts) என்ற இந்திப் புத்தகம் இந்த ஆண்டு (2016) செப்டம்பர் மாதம் 17 ஆம் நாள் தோழர் பெரியாரின் பிறந்த நாள் அன்று புதுடெல்லி ஜவகர்லால்நேரு பல்கலைக்கழகத்தில் வெளியிடப்பட்டது.



திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் மானமிகு தோழர் வீரமணி அவர்களிடம் Periyar ke Pratinidhi Vichar இந்தி நூலை காட்டாறு குழு தோழர்கள் நேரில் வழங்கினார்கள்

240 பக்கங்கள் கொண்ட இந்த இந்தி நூலை புதுடெல்லியிலுள்ள Forward Press ஏடும், காட்டாறு ஏடும் இணைந்து வெளியிட்டன. விற்பனையிலும் வரலாறு படைத்த அந்த இந்தி நூலை 19.11.16 சனிக்கிழமை காலை 11 மணியளவில், சென்னை பெரியார் திடலில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் மானமிகு தோழர் வீரமணி அவர்களிடம் காட்டாறு குழு தோழர்கள் நேரில் வழங்கினார்கள். திராவிடர் கழகத் துணைத்தலைவர் கவிஞர் கலி.பூங்குன்றன் அவர்களிடமும் நூலை வழங்கினார்கள். காட்டாறு குழு தோழர்கள் தி.தாமரைக்கண்ணன், ஒட்டன்சத்திரம் பெரியார்நம்பி, திருப்பூர் இராவணன், பல்லடம் வடிவேல் ஆகியோர் பெரியார் திடலுக்குச் சென்றிருந்தனர். திராவிடர் கழகத் தலைவர் பெரும் மகிழ்ச்சியுடன் நூலைப் பெற்றுக்கொண்டு, பெரியார் திடலில் உள்ள நூல் விற்பனை நிலையத்திற்கும் இந்த இந்திப் புத்தகத்தை விற்பனைக்கு அனுப்புங்கள் என்று தெரிவித்தார். மறுபதிப்பு வந்தவுடன் அனுப்புவதாகத் தெரிவித்து தோழர்கள் விடைபெற்று வந்தனர்.



# காவிப்பயங்கரவாதிகளுக்கு எதிராக போபாலில் பாம்செ:.ப் மாநாடு

பாம்செஃப் அமைப்பின் 33 வது வது அகில இந்திய அளவிலான தேசிய மாநாடு 2016 ம் ஆண்டு நவம்பர் 13 முதல் 17 வரை மத்தியப் பிரதேச மாநிலம் போபாலில் நடைபெற்றது. பா.ஜ.க ஆட்சியில் இருக்கும் மத்தியப் பிரதேச மாநிலத்தில் இலட்சக்கணக்கான மக்கள் திரண்டு மாநாட்டை வெற்றிபெறச் செய்தனர். கடந்த 2012 ம் ஆண்டு இதே போபால் நகரில் பாம்செஃப் அமைப்பின் தேசிய மாநாடு நடைபெற்ற போது, ஆர்.எஸ்.எஸ் காவிப் பயங்கரவாதிகள் மாநாட்டைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். மாநாட்டுப் பந்தலை நெருப்பு வைத்துக் கொளுத்தினர். எனவே, நான்கு ஆண்டுகள் கழித்து, மீண்டும் அதே போபால் நகரில், அதே பா.ஜ.க ஆட்சிக்காலத்தில் மீண்டும் ஒரு தேசிய மாநாட்டை நடத்தி, காவிப் பயங்கரவாதி களுக்குச் சரியான எதிர்வினையாற்றியது பாம்செஃப் அமைப்பு.

நவம்பர் 13 முதல் 15 வரை பாம்செஃப் அமைப்பின் தேசிய மாநாடும், நவம்பர் 16, 17 ஆகிய நாட்களில் பாம்செஃப் அமைப்பின் போராட்டங் களுக்கான முன்னணி அமைப்பான பாரத விடுதலை முன்னணி (பாரத் முக்தி மோர்ச்சா) யின் 6 வது தேசிய மாநாடும் வெற்றிகரமாக நடந்தேறியது. போபாலில் பாரத மிகுமின் நிறுவனத்தின் ஜம்பூரி திடலில் மாநாடு நடைபெற்றது.

பல்வேறு தலைப்புகளில் இந்தியா முழுவதிலும் இருந்து வந்திருந்த பேராசியர்கள், அறிஞர்கள், சமூகசெயல்பாட்டாளர்கள் கருத்துரை யாற்றினர். நவம்பர் 17 மாலை 3 மணியளவில் ‘கருப்புப்பணம்’ என்ற தலைப்பில் பொலிவியாவில் வாழும் டாக்டர் சத்யபால், காட்டாறு குழு தோழர் தாமரைக்கண்ணன் ஆகியோர் கருத்துரையாற்றினர். 5 நாள் மாநாட்டில் பங்கேற்றுக் கருத்துரையாற்றிய அனைவருமே பார்ப்பன எதிர்ப்பு, மனுசாஸ்திர எதிர்ப்பு, வர்ணாசிரம எதிர்ப்பு ஆகிய அடிப்படைத் தளங்களில் நின்று தகவல்களைத் தெரிவித்தனர் என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்க செய்தி.

பல தோழர்கள், தோழர் பெரியாரின் பணி களைக் குறிப்பிட்டு உரையாற்றினர். 1951 ல் நடந்த இந்திய அரசியல் சட்ட முதல் திருத்தம் பற்றியும், அந்தத் திருத்தத்தால் தான் இந்தியா முழுவதும் உள்ள தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் கல்வி, வேலை வாய்ப்புகளில் கால் வைக்க முடிந்தது என்பதையும், அதற்காகத் தமிழ்நாட்டில் தோழர் பெரியார் மேற்கொண்ட போராட்டங் களையும், பாராளுமன்றத்தில் தோழர் அம்பேத்கர் ஆற்றிய பணிகளையும் நினைவுகூர்ந்து உரையாற்றினர்.

1 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் திறந்தவெளி மாநாட்டில் பங்கேற்றனர். உள் அரங்கத்தில் நடைபெற்ற கருத்தரங்குகளில் 5000 த்துக்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றனர். உள் அரங்கத்தில் பங்கேற்றவர்கள் ஒவ்வொருவரும் 2000 ரூபாய் நுழைவுக்கட்டணம் செலுத்தி, 5 நாட்களும் மாநாட்டுத் திடலிலேயே தங்கியிருந்து கருத்துக் களைக் கேட்டுச் சென்றனர். கடும் பனி பொழியும் இந்த நேரத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் திடலிலேயே தங்குவதற்கும், உணவிற்கும் உரிய முன்னேற்பாடுகளை பாம்செஃப்பின் முழுநேரப் பணியாளர்கள் சிறப்பாகச் செய்திருந்தனர்.

80 களில் திராவிடர் கழக மாநாடுகளில் பார்த்தது போல குழந்தைகள், பெண்கள் என குடும்பம் குடும்பமாக தோழர்கள் பங்கேற்றனர். முதல் இரண்டு நாட்களில் போபாலில் உள்ள ஆர்.எஸ்.எஸ். காவிகள் மாநாட்டுத் திடலின் அருகிலேயே சிறு சிறு சலசலப்புகளை உண்டாக் கினர். ஆனால் நூற்றுக்கணக்கான பாம்செஃப் முழுநேரத் தொண்டர்களால் அந்தச் சலசலப்புகள் முறியடிக்கப்பட்டன.

நவம்பர் 17 மாலை 6 மணியளவில் பாரத விடுதலை முன்னணியின் தேசியப் பொதுச் செயலாளர் பேராசிரியர் விலாஸ் காரத் அவர் களுக்கு காட்டாறு குழுவினர் நினைவுப்பரிசினை வழங்கினர். இந்தி மொழியில் வெளியாகி விற்பனையிலும் வரலாறு படைத்த பெரியார் கே பிரதிதி விச்சார் என்ற நூலை, காட்டாறு குழு தோழர்கள் தாமரைக்கண்ணன், பொள்ளாச்சி விஜய ராகவன், திருப்பூர் இராவணன், ஒட்டன்சத்திரம் பெரியார்நம்பி, பல்லடம் வடிவேல், தருமபுரி இளையகுமார் ஆகிய தோழர்கள் மேடையில் பெரியார் நூலை வழங்கினர்.

திட்டமிடல், செயல்படுதல், விவாதித்தல் என்ற முறையில் மிகச்சரியாக திட்டமிட்டு காவிகளின் கோட்டை என வர்ணிக்கப்பட்ட மத்தியப்பிரதேசத்தின் போபால் இனி, காவிகளின் கோட்டை அல்ல, அம்பேத்கர், பெரியார், பூலே ஆகியோரின் கோட்டை என்பதை உறுதிப்படுத்திய பாம்செஃப் தோழர்களுக்கு வாழ்த்துக்கள்.




தோழர் பெரியார்

# அரசியல் சட்ட எரிப்பு ஏன் ?

**‘பிராமணன் என்று ஒரு சாதி சட்டத்தில் இருக்க அனுமதிக்க மாட்டோம். அப்படி இருந்தாலும், அவன் பிராமணனாக வாழ அனுமதிக்க மாட்டோம் என்று அரசாங்கம் சொல்லட்டும்’.**

தோழர்களே!

இந்த மாதம் 26 ஆம் தேதிக்குள், பிராமணன் என்ற ஒரு சாதி கிடையாது.சட்டத்தில் அந்த மாதிரிக் கருதமாட்டோம்’ என்று அறிக்கை வராவிட்டால் அரசாங்கச் சட்டப்புத்தகத்தை நாங்கள் கொளுத்தப் போகிறோம். இதை நாங்கள் வருத்தத்துடனேயே சொல்கிறோம், வெறும் குறும்புக்காகவோ, விளம்பரத்திற்காகவோ, ஜெயிலுக்குப் போய் வந்ததைக் காட்டி ஓட்டு வேட்டையாடவோ நாங்கள் அந்தக் காரியம் செய்யவில்லை.

எனக்கு 79 வயதாகிவிட்டது. நம் மக்களுக்கு ஏதாவது காரியம் செய்துவிட்டு நான் சாக வேண்டும்.இல்லையென்றால், நம் மக்களுக்கு உணர்ச்சியுட்டுவிட்டுச் சாகவேண்டும். இன்றைய தினம் எல்லாப் பார்ப்பனப் பத்திரிக்கைகளும் கட்டுப்பாடாக, நான் பார்ப்பனரை வெட்டச் சொன்னேன், குத்தச் சொன்னேன் என்று கூப்பாடு போடுகின்றன! எந்தப் பார்ப்பானிடம் எனக்கு விரோதம்? யார்மீது துவேஷம்?நேற்று எனக்கு நடைபெற்ற விழாவுக்குப் பார்ப்பனர் பணம் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் கொடுத்த ‘செக்’ என்னிடம் இருக்கிறது. ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், எனக்குத் தனிப்பட்ட முறையில்யார்மீதும் துவேஷம் இல்லை என்பதைக் காட்டவே!

நான் ஏன் ஒரு கூட்டமே ஒழிய வேண்டு மென்று சொல்லுகிறேன்? நம் சமுதாயத்திற்கே களை மாதிரி இருந்துகொண்டு வளரவொட்டாமல் செய்கிறது அந்தக்கூட்டம். வெட்டுகிறேன் என்று சொன்னேன். குத்துகிறேன் என்று சொன்னேன் என்று புச்சாண்டி காட்டுகின்றனர். அப்படிச் சொல்லுவதன் மூலம் அந்த நாளையே அவர்கள் விரிவுபடுத்துகின்றனர்.

‘காந்தியார் படத்தை எரித்தால் தலைகள் உருளும். இரத்த ஆறு ஓடும், அதற்கு 20,000 பேர் தயார்’ என்று சொன்னார்களே, அவர்களை நீ என்ன செய்தாய்? நான் சொல்லுகிறேன் ‘சாதி ஒழியா விட்டால் இரத்த ஆறு ஓடும்’ என்று. ‘சாதி இருக்கத்தான் வேண்டும்’ என்று நீ சொல்லேன்!

இந்த மாதிரிக் கூப்பாடு போட்டால் அரசாங்கம் பிடித்து எங்களை ஜெயிலில் போடும், நாங்கள் பயந்துகொள்வோம் என்பது பார்ப்பனர் கள் நினைப்பு. இது யாரிடம் பலிக்கும்? நான்தான் உயிரைவிடத் தயாராயிருக்கிறேனே! என்னுடைய தொண்டர்களும் தயாராயிருக் கிறார்களே!

வேண்டுமானால், இந்தப் பார்ப்பன சமுதாயத்திற்கு நான் வாய்தா கொடுக்கிறேன், தன்னை அது மாற்றிக் கொள்ளட்டும்!

இன்றைய தினம் அரசாங்கத்திற்கு வாய்தா கொடுத்திருக்கிறேனே! சாதி ஒழிப்புக்குப் பரிகாரம் கிடைக்காவிட்டால் அரசியல் சட்டத்தைக் கொளுத்தப் போகிறோம். அதிலும் முடியா விட்டால் காந்தியார் சிலையை உடைக்கப் போகிறோம். வேண்டுமானால் என்னை ஜெயிலில் போடட்டும், வெளியே இருந்துகொண்டு கொடுமைச் சகித்துக்கொண்டிருக்க எங்களால் முடியாது.

இதற்கு முன்பே 1950இலேயே நான் சொன்னேன், 'இது மநுதர்ம சாத்திரத்தின் மறுபதிப்பு. ஆகவே, இதைக் கொளுத்தவேண்டும்' என்று!

இந்தச் சட்டம் எழுதியவர்கள் ஆறு பேர்கள், அதில் நூறு பேர் பார்ப்பனர்கள். அல்லாடி கிருணணசாமிஅய்யர், முன்ஷி, டி.டி.கிருஷ்ண மாச்சாரி, கோபால்சாமி அய்யங்கார் ஆகிய பார்ப்பனர்கள் எழுதினார்கள்.மற்றவர்கள் இரண்டு பேரில் ஒருவர் அம்பேத்கர், மற்றவர் ஒரு சாயபு.

அம்பேத்கர் கொஞ்சம் நம் உணர்ச்சியுள்ளவர். அவர் என்னைக் கேட்டார், 'உன்னுடைய மக்களுக்கு என்ன செய்யவேண்டும்? என்று. நிறைய விவரங்கனையெல்லாம் அவரிடம் கொடுத்தேன். அதையெல்லாம் அவர் பேச ஆரம்பித்தார். உடனே பார்ப்பனர்கள் அவருக்கு விலை கொடுத்து விட்டார்கள்.

அது என்ன விலையென்றால், அவர் தன்னுடைய மக்களுக்கு 100க்கு 10 இடம் கல்வி வசதியில், கேட்டார். அவன், '15 ஆகவே எடுத்துக்கொள்' என்று சொல்லிவிட்டார்! அவனுக்குத் தெரியும், 25 இடம் கொடுத்தால்கூட அவர்களில் மூன்று அல்லது நான்கு பேர்கூட வரமாட்டார்கள் என்பது. பார்ப்பான் எழுதிக் கொடுத்த சட்டத்தில் அவர் கையெழுத்துப் போட்டுக் கொடுத்துவிட்டார். மற்றவர்களுடைய சங்கதியைப் பற்றி அவர் சிந்திக்கவில்லை. ஒரு சட்டம் எல்லோருக்கும் சமம், சமவாய்ப்பு என்று சொல்லிக் கொண்டு பார்ப்பனருடைய உயர்வைக் காப்பாற்றி அவர்களுடைய ஏகபோக அனுபவத்திற்குக் கல்வியையும், உத்தியோகத்தையும் தருகிற தென்றால், அது எந்த வகையில் நீதியான, நேர்மையான சட்டம்?

இத்தகைய மோசடிச் சட்டம் ஒழிக்கப் பட்டே ஆகவேண்டும். அந்த முயற்சியாக, 26ஆம் தேதியன்று இந்தச் சட்டத்தைத் தீயிலிட்டு பொசுக்கப் போகிறோம்.

- தோழர் பெரியார்,

'விடுதலை' அறிக்கை - 16.11.1957

## ஜாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப்பிரிவுகள்

1. அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் (பார்ப்பனர்)
2. டி.டி கிருஷ்ணமாச்சாரி (பார்ப்பான்)
3. என்.கோபால்சாமி அய்யங்கார் (பார்ப்பான்)
4. கே.எம். முன்ஷி (வடநாட்டுப் பார்ப்பான்)
5. டாக்டர் பி.ஆர் அம்பேத்கர் (ஆதி திராவிடர்)
6. முகமுது சாதுல்லா (முஸ்லீம்)

1. 1077 நாள் செலவுசெய்து உருவாக்கிய இந்தச் சட்டத்தில் வெகு ஜாக்கிரதையாகப் பார்ப் பனர்(ஆகிய பிராமணர்) உயர்வும், பார்ப்பனரல்லாத மக்கள் (திராவிடர் 'சூத்திரர்') இழிவும் சாத்திரப் படிக்குக் கொண்ட இந்து மதத்தைக் காப்பது, மத உரிமை அளிப்பது என்கிற தன்மையில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்தத் தகுந்தபடி பாதுகாப்புச் செய்து கொண்டார்கள்.

2. மேலும், 'சூத்திர' என்ற கூறப்படுகின்ற மக்களின் பிரதிநிகள் அறவே இல்லாமல்,6 பேர்களின் 4 பேர் பார்ப்பனர்களாகவே கொண்டு மற்றும் இரு இனத்தின் பிரதிநிகளுக்கும்கூட விலை கொடுத்துவிட்டுச் செய்து கொண்டதுதான் இந்திய அரசியல் சட்டம் என்ற இந்த அரசியலமைப்பாகும்.

3. இந்த நாட்டு வாக்காளர்களின் உண்மை யான பிரதிநிகளைக் கொண்டல்ல, இந்தச் சட்டம் செய்யப்பட்டது எவ்வாறெனில், 1946 ல் நடைபெற்ற தேர்தலின்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண சட்டசபை அங்கத்தினர்களால் ஓட் செய்யப்பெற்று, அரசியல் நிர்ணயசபை அங்கத் தினர்கள், தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பிரிடிஷார் அளித்த இந்திய சுதந்திரச் சட்டமே (Indian Independence Act) 1947 இல்தான் நமக்குக் கிடைத்தது! நாடு இரண்டாகப் பிரிந்து பிற்பாடு எஞ்சியிருந்த உறுப்பினர்களால், மாகாணங்களிலிருந்து 235 பேர்களும், சமஸ்தானங்களிலிருந்து 72 பேர்களு மாக மொத்தம் 307 பேர்கள்தான் அப்போது இருந்தார்கள்.

அப்போது ஓட்டு உரிமை பெற்றிருந்த வாக்காளர் எண்ணிக்கை இன்றைய வாக்காளர் களின் எண்ணிக்கையில் பண்ணிரண்டு சதவிதத்தின ரேயாவார்.எனவே, இது எப்படி மக்கள் பிரதி நிதிகளால் உருவாக்கப்பட்டதாகும்? நாடு 'சுதந்திர' மடையாத காலத்தில் நடந்த எலக்ஷன் பிரதி நிதிகளால் காங்கிரசுப் பார்ப்பனப் பிரதிநிகளால் ஏற்படுத்தப்பட்ட இந்தச் சட்டம் நம்மை அதாவது பார்ப்பன ஆதிக்கத்தினின்று விடுதலை பெறுவதைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கிற நம்மை எப்படிக் கட்டுப்படுத்தமுடியும்?

4. மற்றும், மொழி சம்பந்தமாகவும், வரி சம்பந்தமாகவும் பொருளாதார உரிமை சம்பந்தமாகவும், வெளி நாட்டார் சுரண்டுதல்

சம்பந்தமாகவும் அதிகாரங்களைத் தங்களுக்கே வைத்துக்கொண்டு எந்த வகையிலும் மாற்ற முடியாத அளவுக்கு இரும்புக்கூட்டுப் பாதுகாப்பை இந்தச் சட்டத்தில் மூலம் பார்ப்பனர்களும் வடநாட்டார்களும் ஏற்படுத்திக் கொண்டுள்ளார் கள். அதிலிருந்து விடுபட ஆசைப்படுகிறோம் என்பதைக் காட்டுவதற் காகத்தான் ‘ அரசியல் சட்ட எரிப்பு’ என்பதாகும்.

### இந்திய அரசியலமைப்புப் பீடிகை

இந்தியாவின் மக்களாகிய நாம், இந்தியாவை ஒரு சம்புரண அதிகார ஜனநாயகக் குடிமகள் அனைவருக்கும் சமூகம், பொருளாதாரம், ராஜீயம் இவற்றில் நீதியும் எண்ணம், வெளியீடு கோட்பாடு, மதம், வழிபாடு இவற்றில் சுதந்திரமும், அந்தஸ்து, வாய்ப்பு இவற்றில் சமத்துவமும் கிடைக்குமாறு செய்யவும் தனியொருவரின் கண்ணியமும், தேசமுதாயத்தின் ஒருமைப்பாடும் நிலைபெறும் வண்ணம் அவர்கள் அனைவரிடமும் சகோதரத் துவம் ஓங்குமாறு செய்யவும் மனப்பூர்வ மாகச் சங்கற்பம் செய்து கொண்டமையால், நமது அரசியல் நிர்ணயசபையிலே 1949ஆம் வருடம் நவம்பர் மாதம் இருபத்தாறாம் தேதியாகிய இன்று, இதனால் இந்த அரசியலமைப்பை ஏற்றுக்கொண்டு, சட்டம் இயற்றி நமக்கு நாமே வழங்கிக் கொள்கிறோம்.

### அடிப்படை உரிமைகள்

13, (2) இப் பாகத்தால் அளிக்கப்படுட உரிமைகளைப் பறிகும் அல்லது சுருக்கும் எதையும் ஒரு இராஜ்யம் இயற்றாலாகது. இப் பகுதியை மீறி இயற்றப்படும் சட்டம் எதுவும் அப்படி மீறிய அறிவிற்குப் பயனற்றதாகும்.

### மத சுதந்திர உரிமை

25 ,(1) அமைதி, நல்லொழுக்கம், ஆரோக்கியம், இவற்றிக்கும் இந்தப் பாகத்திலுள்ள மற்றைய ஷரத்துக்களுக்கும் உட்பட்டு, மக்கள் அனைவரும், மனசாட்சி சுதந்திரத்திற்கும் தடையின்றி எம் மதத்தையும் தழுவுதல், அனுஷ்டித்தல், பரவச் செய்தல் இவை பற்றிய உரிமைக்கும் சமமான பாத்தியதை உடையவராவார்.

### பண்பாடு, கல்வி இவை பற்றிய உரிமைகள்

29, (1) தனிப்பட்ட மொழி, லிபி, அல்லது பண்பாடு இவற்றை ஏற்கெனவே உடையவராய், இந்தியாவின் ஆட்சிப் பரப்பின் அல்லது அதன் ஒரு பாகத்தில் வசிக்கும் குடிகளின் எப் பிரிவினரும் அவற்றைச் சிதையாமல் காக்க உரிமை உள்ளவர் ஆவார்.

(2) மதம், இனம், சாதி, மொழி இவை காரணமாக அல்லது இவற்றுள் எவையேனும் காரணமாக இராஜ்யத்தினால் பராமரிக்கப்பட்ட அல்லது இராஜ்ய நிதிகளிலிருந்து உதவி பெறுகின்ற எந்தக் கல்வி ஸ்தாபனங்களிலும் சேருவதற்கு எக் குடியும் மறுக்கப்படலாகாது.

### அரசியலமைப்பின் திருத்தம்

368. இந்த அரசியலமைப்பின் திருத்தம் அதற்கெனப் பார்லிமெண்ட் சபை ஒன்றில் ஒரு மசோதாவைக் கொண்டுவருவதால் மட்டுமே ஆரம்பிக்கப்படலாம். அச்சபை ஒவ்வொன்றிலும் அம்மசோதா அச்சபையின் மொத்த அங்கத்தினர் களில் பெரும்பான்மையோராலும், வந்திருந்து ஓட்டுச் செய்யும் அச்சபை அங்கத்தினர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத பெரும் பான்மையோராலும், நிறை வேற்றப்பட்டால், அது இராஷ்டிரபதியிடம் அவர் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்படவேண்டும், அம் மசோதாவிற்கு அனுமதி அளிக்கப்பட்டது இந்த அரசியலமைப்பு அம்மசோதாவின் ஷரத்துக்களின் படி திருத்தம் பெற்றதாகும். இவைபோன்ற இன்னும் பல அனுமதிகள் உள்ளன.

**குறிப்பு:** இந்த அரசியல் சட்டத்தை உருவாக்கின ஆறு பேர்களில் நான்கு பேர் பார்ப் பனர், இதை நிறைவேற்றிய அரசியல் நிர்ணயசபை என்பது வயது வந்தோரின் வாக்குரிமை பெறாதவர் களை பெரும்பாலும் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களே கொண்டதாகும்.

இந்தச் சட்டத்தில் இந்தமதத்துக்குப் பாது காப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்து மதத்தில் சாதிக்குப் பாதுகாப்பு இருக்கிறது. சாதியைக் காப்பாற்றத்தான் இடமிருக்கிறது. இதை எளிதில் திருத்தியமைப்பதற்கும் சாதி ஒழிப்புக்காரருக்கு வசதியில்லை, வாய்ப்பு இல்லை (368 ஆவது பிரிவைப் படியுங்கள்)

ஆதலால், சாதியை ஒழிக்க விரும்புகிறவர்கள், தனித் திராவிட நாடு பெற விரும்புகிறவர்கள், தமிழ்நாடு சுரண்டப்படுவதைத் தடுக்க விரும்புபவர்கள் என்ன செய்வது? இதை எரிப்பதன் மூலம் நம் எதிர்ப்பதைக் காட்டிக்கொள்வதைத் தவிர வேறு வழி என்ன?

- தோழர் பெரியார், ‘விடுதலை’ 17.11.1957

## 26 ஆம் தேதி கிளர்ச்சயில் நீதிமன்றத்தில் கூறவேண்டியவை

நான் சாதி ஒழிப்புக் கிளர்ச்சிக்காரன். இந்திய அரசியல் சட்டத்தில் சாதிக்கும், அதை உண்டாக்கிய மதத்துக்கும் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அரசியல் சட்டம் தமிழர் நலனுக்காக வகுக்கப் படவுமில்லை, அச்சட்டத்தைத் திருத்தக்கூடிய வசதி தமிழர்களுக்கும் இல்லை.

ஆதலால், என் எதிர்ப்பைக் காட்டிக் கொள்ளும் அறிகுறியாக இச்சட்டத்தைக் கொளுத்தினேன். இப்படிக் கொளுத்துவதற்கு எனக்கு உரிமை உண்டு. இதனால் எந்த உயிருக்கும், எந்தப் பொருளுக்கும் சேதமில்லை.ஆதலால், நான் குற்றவாளி அல்ல. இந்த நீதிமன்ற நடவடிக்கையில் நான் கலந்துகொள்ள விரும்பவில்லை. நான் எதிர் வழக்காட விரும்பவில்லை.நான் குற்றவாளி என்று

கருதப்பட்டால், அதற்குரிய தண்டனையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

- 'விடுதலை' அறிக்கை 21.11.1957

## சட்டத்தைக் கொளுத்துங்கள்!

நான் மூன்று ஆண்டுக்கோ, பத்து ஆண்டுக்கோ நாடு கடத்தலுக்கோ, தூக்குத் தண்டனைக்கோ, ஆளாக்கப்பட்டாலும், மற்றும், பிரிட்டிஷ்காரன் காங்கிரசுக் கிளர்ச்சியின்மீது கையாண்ட எந்த விதமான கொடிய, தீவிரமான அடக்கு முறைகளை நம்மீதும், கழகத்தின்மீதும் பிரயோகித்தாலுங்கூட, அவைகளுக்குப் பயப்பட்டு என் இலட்சியத்தையோ, திட்டத்தையோ, மாற்றிக்கொள்ளப் போவதில்லை.

கழகத் தோழர்களே! தீவிர இலட்சிய வாதிகளே! நீங்கள் மூன்று ஆண்டு தண்டனைக்குப் பயந்துவிட வேண்டியதில்லை, பயந்துவிட மாட்டீர்கள்! சட்டத்தைப் பார்த்துப்பயந்து விட்ட தாக பெயர் வாங்காதீர்கள்! ஆகவே, இஷ்டப் பட்டவர்கள் தஞ்சை மாநாட்டுத் தீர்மானத்தை நிறைவேற்ற பெயர் கொடுங்கள்!

-'விடுதலை' அறிக்கை 11.11.1957

## சட்டத்தைக் கொளுத்துங்கள்! சாம்பலை மந்திரிக்கு அனுப்புங்கள்!!

சட்டத்தை நிறைவேற்றிவிட்டதன்மூலம், அரசாங்கத்தினர் 'சாதியைக் காப்பாற்றித்தான் தீர வேண்டும்' என நமக்குச் சவால்விட்டு இருக்கின்றனர்.இந்தச் சவாலுக்கு, நீங்கள் சட்டம் கொளுத்தாவிட்டால் மனிதர்கள்தானா? சட்டம் கொளுத்திச் சாம்பலைச் சட்டம் செய்த மந்திரிக்கு அனுப்பிக் கொடுங்கள்! சட்டம் கொளுத்தின மக்கள் இந்த நாட்டில் இருக்கிறார்கள் என்பதை அதன்மூலம் கொஞ்சமாவது தெரிந்துக் கொள்ளட்டும்!

'விடுதலை' அறிக்கை 15.11.1957

## சிறை செல்லும் முன் பெரியார் வேண்டுகோள்

நவம்பர் 25ஆம் தேதி நடக்கும் விசாரணையில் எனது 'முச்சலிக்காபாண்டு' கேன்சல் ஆகி என்னைச் சிறைப்படுத்தும்படியான நிலைமை பெரும்பாலும் ஏற்படலாம்.இந்தச் சமயத்தில் பொதுமக்களுக்கு ஏதாவது சொல்ல வேண்டியது அவசியமாகும்.

நான் சிறைப்படுத்தப்பட்டு விட்டேன் என்பதாலேயோ, அல்லது பொதுமக்கள் கொளுத்துவார்கள் என்கிற எண்ணத்தால் அதைத் தடுக்க அரசாங்கத்தார் ஏராளமான மக்களைக் கைதுசெய்து விட்டார்கள் என்ற எண்ணத் தாலேயோ, புதிய சட்டத்தின்படி நீண்டநாள் தண்டிக்கப்பட நேரிடும் என்ற அச்சத்தினாலேயோ யாரும் அதாவது கொளுத்த வேண்டிது அவசியந்தான் என்று கருதுகிறவர்கள், எந்தவிதமான தயக்கமும் இல்லாமல், அரசியல் சட்டத்திலிருந்து பொறுக்கி எடுத்துப் போட்டிருக்கிற, நமக்குக் கேடான நாலைந்து பிரிவுகளைக் கொண்ட பிரசுரத் தொகுப்பைக் கொளுத்தியே தீர வேண்டியதே முக்கியமான காரியம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இதைவிட முக்கியமான காரியம் ஒன்றை வணக்கமான வேண்டுகோளாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.அதை அவசியம் ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டியது.

என்னை 'ரிமாண்டு' செய்வதனாலேயே மற்றும் இப்பொழுது 'செஷன்சில்' நடைபெறும் வழக்கின் பெயரால் என்னை நீண்ட நாள் அரசாங்கத்தார் தண்டனைக் குள்ளாக்கி விடுவ தாலேயோ பொதுமக்கள் யாரும் ஆத்திரப் படுவதற்கோ. "நிலை குலைந்து விடுவதற்கோ ஆளாகாமல் மிக்க மகிழ்ச்சியோடு அச் செய்தியை வரவேற்க வேண்டும். எந்தவிதமான கலவரமோ, பலாத்காரமோ பார்ப்பனச் சமுதாயத்தைச் சேர்ந்த ஆண்களுக்கோ, பெண்களுக்கோ, குபந்தை களுக்கோ துன்பம் வேதனை உண்டாக்கக்கூடிய தான எப்படிபட்ட பலாத்காரமான செய்கையையும் நஷ்டம் உண்டாக்கக் கூடியதான செய்கையையும் அதாவது ஆயுதப்பிரயோகமோ, அடிதடியோ, நெருப்புக் கொளுத்ததலோ முதலிய ஒரு சிறுகாரியம்கூட நடத்தாமலும், நடைபெறாமலும் இருக்கும்படி ஒவ்வொருவரும் நடந்துக்கொள்ள வேண்டும். நான் ஆயுதப் பிரயோகம் செய்ய வேண்டும்.என்றும் அக்கிரகாரங்கள் கொளுத்தப்பட வேண்டுமென்று சொன்னதும், சொல்லிவருவதும் உண்மை.

ஆனால், இவை இப்பொழுது அல்ல. அதற்கான காலம் இன்னும் வரவில்லை வரக்கூடாதென்றே ஆசைப்படுகிறேன். அப்படிப் பட்ட காரியங்களில் ஈடுபடுவற்குக் காலம் எப்போது வரும் என்றால் அரசியல் சட்டத்தைக் கொளுத் துவது முதலிய இன்னும் நான்கைந்து கட்டங்கள் நடத்தி, அவைகளில் ஒன்றும் பயனில்லை, வெற்றிக்கு அவை பயன்படவில்லை என்று கண்டு, பலாத்காரத் தைத் தவிர வேறு வகையில்லை என்ற முடிவுக்கு வந்தபிறகுதான் நாம் அவற்றில் இறங்க வேண்டியவர் களாக இருக்கின்றோம்.

ஆனதால், இந்த என்னுடைய தாழ்மையான வேண்டுகோளை ஒவ்வொருவரும் கருத்தில் வைக்கவேண்டும். இப்பொழுது எனக்கு ஏற்படக்கூடும் என்று எதிர்பார்க்கப்படும் தண்டனையானது நம்முடை அடுத்த திட்டங் களுக்கு வலுவான ஆதாரவுகளையும், உணர்ச்சியையும், ஊக்கத்தையும் துணிச்சலோடும் வேகத்தோடும் ஈடுபடுத்துவதற்கு வலிமையான சாதனமாக அமையும், பொது மக்கள்மீது எனக்குப் பலமாக ஆதிக்கம் இருக்கிறது என்று அரசாங்கமும்,

இந்தியாவில்லுள்ள மற்ற மக்களும் எண்ணியிருக்கிற ஓர் எண்ணத்திற்குப் பாதகம் ஏற்படாமல் பொதுமக்கள் நடந்துகொள்ள வேண்டுமென்றால் நான் மேலே வேண்டியிருக்கிறபடி எந்தவிதமான தண்டனைக்குப் (ஏற்பட்டால்) பிறகு பொது மக்களிடையில் மேற்சொன்னபடி எந்தவிதமான கலவரமும், செய்கையும் ஏற்படாமல் மரியாதை யாகவும், கட்டுப்பாடாகவும் நடந்து கொள்ள வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன்.

தோழர் பெரியார் -

*'விடுதலை '- தலையங்கம் 25.11.1957)*

## சிறைக்கு வெளியே அனுப்பினால் மீண்டும் கொளுத்துவேன்!

திருச்சி வாளாடியைச் சேர்ந்தவன் சிறுவன் பெரியசாமி. அவனுடைய தாய்க்கு ஒரே மகன். பதினெட்டு வயது கூட நிறையாத (16 வயது) பெரியசாமி தீவிரமான கருஞ்சட்டைத் தொண்டன். பெரியாரின் கூட்டங்கள் எங்கு நடந்தாலும், தவறால் கலந்து கொள்ளும் போர் வீரன். பெரியாரின் ஆணையை ஏற்று அவனும் சட்ட நகலை எரித்தான். இரண்டாண்டுகள் கடும் காவல் தண்டனை விதிக்கப்பட்ட அவன் பதினெட்டு வயதிற்கு உட்பட்டவன் ஆனதால் தூத்துக்குடி தட்டப்பாறை சிறுவர் சிறையில் அடைக்கப்பட்டான். ஏழ்மையின் காரணமாய் நெடுந்தொலைவு பயணம் செய்ய வசதியில்லாத அவனுடைய தாய், அவனைக் கடைசி வரையில் உயிரோடு பார்க்கவே இல்லை.

ஒருநாள் தட்டப்பாறை சிறையில் பார்வையிட வந்தார் தமிழக கவர்னர் விஷ்ணுராம் மேதி. எல்லோரையும் கேட்டதைப் போலவே பெரிய சாமியையும் கவர்னர் விசாரித்தார். பெரியாரின் தொண்டன், அவர் ஆணை கேட்டுப் போராடிச் சிறுவர் சிறைக்கு வந்த ஒரே அரசியல் கைதி என்ற முறையில் அவனிடம் பெருமதிப்புக் காட்டிய கவர்னர் மேதி, 'உன்னை மன்னித்து விடுதலை செய்கிறேன். இனிமேல் இது போன்ற காரியம் செய்ய மாட்டாயல்லவா' என்றார்.

மொழி பெயர்ப்பாளர் மூலம் உரையாடல் நடைபெற்றது. சட்ட எரிப்பிற்கான காரணத்தைக் கவர்னரிடம் தெளிவாய் விளக்கிய பெரியசாமி, 'வெளியே அனுப்பினால், மீண்டும் கொளுத்து வேன்' என்றான்.

கவர்னர் மேதி அதிர்ச்சியும், ஆச்சிரியமும் அடைந்தார். பெரியசாமியைத் தட்டிக் கொடுத்த கவர்னர் 'கடவுள் உன்னை ஆசீர்வதிப்பாராக' என அவருடைய நம்பிக்கைப்படிக் கூறிச் சென்றார்.

கவர்னர் சொன்னபடியே கடவுளின் ஆசிர் வாதம் வெகு விரைவிலேயே பெரியசாமிக்குக் கிடைத்தது. கடுமையான கோடைக்காலம் - பழக்கமில்லாத புழு புழுத்த சோளக்கஞ்சி இரண்டும் ஒப்புக் கொள்ளாமல் பெரியசாமிக்கு வயிற்று கடுப்பில் தொடங்கி சரியான மருத்துவ வசதி இல்லாமல் ரத்தம் ரத்தமாய் பேதியாகிப் பெரியசாமி நினைவு தடுமாறலானான். சிறை அதிகாரிகள், விடுதலை செய்கிறோம். வெளியே போகிறாயா? என்று கேட்க, மௌனமாய்க் கையை அசைத்து மறுத்து விட்டான். சில மணி நேரம் தான், இறந்து போனான். அந்த இளம் போராளிக்கு திருச்சி லால்குடி சாலையில் இன்றும் ஒரு நினைவுச் சின்னம் இருக்கிறது.

### மண்மேடான மணவாழ்க்கை!

திருச்சியைச் சேர்ந்த இன்னொரு தீவிரத் தொண்டன் ஓராண்டுத் தண்டுனை பெற்ற மாணிக்கம்! திருமணமான ஒரே வாரத்தில் போராட்டத்தில் கலந்து கொண்டு தண்டனை அடைந்தார். அடுத்தடுத்த நேர்காணல்கள் இளம் மனைவியின் கண்ணீர், திருமணமாகி ஒரே வாரம்! மாணிக்கத்தின் மனதில் சலனம்!

ஆனாலும், தன்னை திடப்படுத்திக் கொண்ட மாணிக்கம் கோழையாய் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு மனைவியுடன் மணவாழ்க்கை வாழ்வதை விட வீரனாகச் செத்துப்போவதே மேல் என்ற தன் முடிவை மனைவியிடம் நான் விடுதலையாகி வரும் வரையில் என்னைப் பார்க்க வராதே, என் மனம் சலனப்பட்டு நான் மன்னிப்புக் கேட்டு விடுதலை யாகி வெளியே வரக்கூடாது. மனதைக் கல்லாக்கிக் கொள்.போய்வா' என்றார்.

மாணிக்கம் சொன்னபடியே அவருடைய மனைவியின் மனம் கல்லாகத்தான் ஆகிவிட்டது. கணவன் லட்சியவெறியோடு உறுதியாய் இருக்கிறான் என்று அந்தப் பேதைப் பெண்ணால் உணர முடியவில்லை. தன்னை உதறிவிட்டான் என்று எண்ணி சித்த பிரமை பிடித்தவர் போல் சில நாள் இருந்து பின்னர் முழுப்பைத்தியமாகவே ஆகிவிட்டாள். ஓராண்டுக்குப் பின்னர் விடுதலையான மாணிக்கம் அந்த ஒரே வாரக்கால இனிய மண வாழ்வின் நினைவுகளுடனேயே மனநோயாளியாகி விட்ட மனைவியுடன் வாழ்ந்து அவருக்கு முன்னாலேயே மடிந்து போனார்.

**1957 நவம்பர்-26 59 ஆம் ஆண்டு 2016**

# அரசியல் சட்ட எரிப்பு நாள்



# கிறித்துதாஸ் காந்தி மீதான வழக்கை ரத்து செய்!

ஓய்வு பெற்ற ஐ ஏ எஸ் அதிகாரி கிறித்துதாஸ் காந்தி மீதான வழக்கை ரத்து செய்யக்கோரி தமிழக முற்போக்கு இயக்கங்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், பத்திரிகையாளர்கள் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். அறிக்கையின் விவரம் வருமாறு:

தொலைக்காட்சி (தந்தி) விவாதம் ஒன்றில் முன்னாள் கூடுதல் தலைமைச்செயலாளர் கிறித்து தாசு காந்தி அவர்கள் கூறிய கருத்துக்காக, பார்ப்பனிய இந்துத்துவ சக்திகள் அவர் மீது தனிப்பட்ட தாக்குதலில் இறங்கியுள்ளன. அந்த நிகழ்ச்சியில் அவர் தெளிவாக, "தனிப்பட்ட ஒருவர் எந்த மத நிகழ்ச்சியிலும் பங்கேற்கலாம்; ஆனால் முதலமைச்சராகவோ பிரதமராகவோ குறிப்பிட்ட ஒரு மத நிகழ்ச்சியில் மட்டும் கலந்துகொள்வது, மதச்சார்பற்ற நாட்டில் தவறானது. ஒன்று எல்லா மதத்தினரின் நிகழ்வுகளிலும் பங்கேற்கலாம் அல்லது அனைத்து மதநிகழ்வுகளையும் புறக்கணிக் கலாம்"என்று விளக்குகிறார்.

அதற்குப் பதில்கூற வேண்டிய பா.ஜ.க.பிரமுகர் இராகவன் என்பவர், "திமுக தலைவர் கருணா நிதியிடம் போய் இதைக் கூறுங்கள்" என்க, தொடர்ந்த விவாதத்தில், "இந்த நாட்டில் கடவுள்மறுப்புக் கொள்கையும் உண்டு; இதுதான் மதச்சார்பின்மை அப்புறம் யாரையோ.." எனச் சொன்ன காந்தி, "இராமனைச் செருப்பால் அடிப்பேன் எனக் கூறவும் மதச்சார்பின்மை நாட்டில் உரிமை உண்டு; அதை எப்படி தப்புனு சொல்வீங்க; எனக்கு அதற்கு உரிமை இருக்கு.."என்ற பொருளில் பேசிக்கொண்டிருந்தபோதே, அவரின் பேச்சு தடுக்கப்பட்டது.

கடைசிவரை அதில் அவர் பேசிமுடிக்க விடாமல் பா.ஜ.க பிரமுகர் கூச்சலிட்டபடி இருந்தார். அவரின் நியாயமான கேள்விக்குக் கடைசிவரை பதிலளிக்கப்படாதது பற்றிப் பேசாமல், அவரின் ஒரு வாசகத்தை மட்டும் பிடித்துத் தொங்கிக்கொண்டு, பிரச்னை ஆக்கினர். அவர் அதற்காக மன்னிப்பு கேட்டபிறகும் விடவில்லை! இதுதான் நடந்தது!

முன்னாள் கூடுதல் தலைமைச்செயலர் என்ற அனுபவத்திலும் ஒடுக்கப்பட்ட, அடித்தட்டு மக்களுக்கான செயல்பாட்டின் மூலமான சமூக அறிவைக் கொண்டு, இரண்டு ஆண்டுகளாகத் தொலைக்காட்சி உரையாடல்களைப் பொருள் கொண்டவையாகச் செய்துவருகிறார். குறிப்பாக, மைய, மாநில அரசின் செயல்பாடுகள், நிர்வாகம் பற்றிய அவருடைய கருத்துகள் குறிப்பிடத்தக்கவை.

இந்த நிலையில், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமையான கருத்துரிமை யின் வரம்புக்கு உட்பட்டு அய்யா காந்தி பேசி யதற்கே,அவர் மீது பார்ப்பனிய இந்துத்துவ சக்திகள், தினமலர் போன்ற ஊடகங்களைப் பயன்படுத்தி, அவரின் முகவரி, தொலைபேசி எண்ணை வெளியிட்டு, சாதிய சக்திகள்- முகம்காட்டத் திராணியற்ற கோழைகளை ஏவி விட்டு மிரட்டுவது, காந்திக்கும் அவரின் குடும்பத்தாருக்கும் உளைச்சலை உண்டாக்குவது, இதன் மூலமாக பொதுசமூகத்தில் அவரைச் செயல்படவிடாமல் தடுப்பது என பாசிசத்தை அரங்கேற்றியுள்ளன.

குறிப்பாக, காந்தி அவர்களை கிறித்துவர் எனப் பொய்கூறி, சாதியசக்திகளிடம் மதவாதத்தைத் தூண்டிவிடும் பெரும் சதியிலும் பார்ப்பனிய இந்துத்துவ சக்திகள் ஈடுபட்டுள்ளன. இதைக் கடுமையாகக் கண்டிக்கிறோம்.

இது தனியொரு காந்தி மீது நடத்தப்படும் தாக்குதல் அல்ல; பொதுச்சமூகத்தில் மதம் எனும் பெயரால் முன்வைக்கப்படும் அனைத்துக்கும் இதே சமூகத்தில் மாற்றுக்கருத்தை வைக்கவும் அனை வருக்கும் உரிமை உண்டு என்பதை நாம் இந்த நேரத்தில் மீண்டும் வலியுறுத்துகிறோம். எனவே, கிறித்துதாசு காந்தி அவர்கள் மீது புனையப் பட்டுள்ள வழக்கை ரத்துசெய்யவேண்டும்.

* சனநாயகரீதியில் நடந்த உரையாடலை, பார்ப்பனிய இந்துத்துவ சக்திகளின் புகாரைப் பெற்றுக்கொண்டு, ஒரு குற்றமாக எடுத்து, வழக்காகப் பதிவுசெய்த போலீசு அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும். இப்படிச் செய்தால்தான் இனி இது போன்ற தவறுகளை உடந்தையாகக்கூட செய்வதற்கு மற்றவர்கள் தயங்குவார்கள் எனும் நிலை உறுதிசெய்யப்பட வேண்டும்.

* தொலைக்காட்சிகளில் நடப்பாய்வுகளில் பங்கேற்கும் கருத்துரையாளர்கள் மீது இவ்வாறு சட்டரீதியிலான, சமூகவிரோத, சட்டவிரோத தாக்குதல்கள் நடத்தப்படும்போது குறிப்பிட்ட ஊடகங்கள் இதை எதிர்த்து நிற்க வேண்டும். இது, நான்காவது தூண் எனக் கூறப்படும் ஊடகங்களின் கடமை என்பதையும் அழுத்தமாக சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

**இயக்கங்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள்,**
**செயற்பாட்டாளர்களின் கூட்டறிக்கை – 01.11.2016**

# குழந்தை வேண்டாம்!

## திருமணத்துக்கு முன்பே முடிவெடுத்தோம்...

**தோழர் சண்முகவேணி-ஆல்பர்ட்**



நேர்காணல்:
பல்லடம் நாராயணமூர்த்தி,
தீபா,
திருப்பூர் வேணி.

என்னுடைய பெயர் சண்முகவேணி.நான் தாராபுரத்தில் பிறந்து வளர்ந்தேன். நான் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிகிறேன்.

**குழந்தை வேண்டாம் என்று ஏன் முடிவு செய்தீர்கள்?**

குழந்தை பெறுவது என்பது பெண்ணை அடிமையாக்குவதற்குப் பெரிதும் காரணமாக அமைவதால் குழந்தை வேண்டாம் என்று முடிவு செய்தோம். நாங்கள் இருவரும் திருமணத்திற்கு முன்பே பேசிக் கொள்ளும்போது எடுத்த முடிவு. அப்படி ஒருவேளை குழந்தை வேண்டும் என்றால் ஒரு குழந்தையை தத்து எடுத்து வளர்த்துக் கொள்வோம்.

**கணவன், மனைவி நமக்காக ஒரு வாரிசு தேவை என்பது பொது நலமா?சுயநலமா? இதை எப்படி உங்கள் வாழ்க்கையில் எடுத்துக் கொள்கிறீர்கள்?**

வாரிசு தேவை என்பது மதவாதிகளுக்கு சுயநலமாகவும், இயக்கவாதிகளுக்கு பொது நலமாகவும் இருக்கும்.(வளர்ப்பு முறையை பொறுத்து) ஒரு வேளை எங்கள் வாழ்க்கையில் குழந்தை இருந்தால் பொது நலத்திற்காக வளர்த்திருப்போம்.

**பெண்களின் வாழ்நாளில் ஒரு பிள்ளை பெற்று வளர்க்க எவ்வளவு நாட்கள் செலவிடுகிறார்கள்?**

ஒரு தாய் கருவுற்ற நாள் முதல் பிள்ளையைப் பெற்றெடுத்து வளர்த்து பள்ளிக்கு அனுப்பும் வரையில் குறைந்தது 5ஆம் வகுப்பு படிக்கும் வரையிலாவது ஒரு தாயின் கண்முன்னே பாதுகாப்பாக பார்த்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலை உள்ளது. குறைந்தது 10 வருடங்கள் செலவிடுகிறார்கள். இந்த 10 வருடங்களில் அந்த பெண்ணின் தனிப்பட்ட வருவாய் முற்றிலும் பாதிக்கப்படும். அதுமட்டுமின்றி உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் அதிகமான துன்பங்கள் ஏற்படுகிறது. உலக நன்மைக்காக எத்தனையோ பெண்கள் திருமணம் செய்யாமலும், பிள்ளை பெறாமலும் வாழ்ந்து இருக்கிறார்கள்.

**பெண் குழந்தை பிறப்பதை மகிழ்வாக ஏற்றுக்கொள்ள முடியாத மனநிலையில் தான் சமூகம் இருக்கிறது. இந்நிலை மாற என்ன செய்யலாம்?**

இந்துமதம் ஏற்படுத்திய பொது புத்தியால் அவைத்து மதத்திலும் ஆண் தான் வாரிசு என்று ஆகிவிட்டது. ஆனால் எங்களைப் பொறுத்தவரையில் இரண்டு குழந்தையுமே வாரிசுதான். ஆனால் இன்றும் நமது சமூக மக்களின் மனநிலையில் இருப்பது என்னதான் இருந்தாலும் ஒரு ஆண் குழந்தை இருப்பது போல் இருக்குமா? என்பதுதான். இந்த மனநிலை மாறவேண்டும் என்றால் இப்போது உள்ளாட்சித் தேர்தலில் எப்படி 50 சதம் பெண்களுக்கு இடஒதுக்கீடு செய்ததோ அதுபோல எல்லாத்துறைகளிலும் சமமாகக் கொடுத்துவிட்டால் பெண் குழந்தையைப் பெறுபவர்களுக்குப் பெரிதும் சுமையாக இருக்காது.

நமது இந்து மதத்தில் சடங்குகள் பெண்களுக்கு அதிகமாக இருக்கும். ஆனால் ஆண்களுக்கு ஒன்றோ,

அல்லது இரண்டோ மட்டும் இருக்கும். ஆகவே பெண் குழந்தைகளுக்குச் செய்யும் செலவுகள் காரணமாகவே பெற்றோர்கள் பெண் குழந்தை பிறந்தால் செலவு என்றும், ஆண் குழந்தை பிறந்தால் வரவு என்றும் நினைக்கிறார்கள். ஆகவே இந்த தேவை இல்லாத சடங்குகளையும், செலவுகளையும் விட்டுவிட்டு இருவரையும் சமமாக படிக்க வைத்து எல்லாத் துறைகளிலும் சமபங்கு கொடுத்து விட்டால் நமது நாடும் நல்ல முன்னேற்றம் அடையும்.

**பாமரப் பெண்கள் கடவுள் நம்பிக்கையுள்ளவர்கள், குழந்தை பிறப்பது கடவுள் தந்த வரம் என்று சொல்கிறார்கள் இது சரியா?**

முற்றிலும் தவறு. அறிவியல் உலகில் குழந்தைப்பேறு இல்லாதவர்களுக்கு Test tupe Baby வாடகைத் தாய் மூலம் Cloning முறை எல்லாம் இருக்கிறது. குழந்தை பிறக்கும்போது கடவுள் நம்பிக்கையுள்ள பெண்கள் மூடத்தனத்தில் மூழ்கிக்கிடக்கின்றார்கள். குழந்தை பிறந்த பிறகு முறைப்படி கருத்தடை அறுவை சிகிச்சை செய்த பிறகு அதையும் தாண்டி குழந்தை பிறந்தால் மட்டுமே ஏற்றுக்கொள்ள முடியும். அறிவியல் மனப்பான்மை ஏற்படாததே இந்த மூடநம்பிக்கைக்குக் காரணம்.

**அடித்தட்டு மக்கள் அதிகக் குழந்தையைப் பெற்றுக் கொள்வதால் யாருக்கு இலாபம்?**

அடித்தட்டு மக்கள் அதிகமாகக் குழந்தைகள் பெறுவதால் குடும்பச் சூழல் காரணமாகப் பள்ளிக்குச் செல்ல முடியாமல் போய்விடுகிறது. அதனால் சிறு வயதிலேயே குழந்தைத் தொழிலாளர்கள் ஆக்கப்படுகிறார்கள். இதனால் அந்தக் குழந்தைகளின் வாழ்நாள் பெரிய முதலாளிகளுக்குத்தான் இலாபமாக அமைகிறது. அவர்கள் வளர்ந்த பிறகு அரசியல்வாதிகளுக்கு ஓட்டு எண்ணிக்கை அதிகமாக இருக்க ஒரு நபராக பயன்படுகிறார்கள்.

**2015 இறுதியில் பா.ஜ.க.எம்.பி சாக்ஸி மகராஜ் என்பவர் சொன்னர், "நமது நாட்டு இந்துப் பெண்கள் 4 குழந்தைகள் பெற்றுக்கொள்ள வேண்டும்.ஒரு குழந்தை இராணுவத்திற்கும்,ஒரு குழந்தை மதத் துறவறத்திற்கும் தரவேண்டும். இரண்டு குழந்தைகளை குடும்பத்திற்கு வைத்துகொள்ளவும்" என்று சொன்னார் இதை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

இருக்கும் குழந்தைகள் போதாதா நாட்டிற்கு? பெண்கள் நான்கு குழந்தைகள் பெற்று அவர்கள் கஷ்டப்படவேண்டுமா? இதனால் நாட்டில் மக்கள்தொகைதான் அதிகமாகும். இப்பொழுது உள்ள மதவாதிகள் பெண்களின் மனநிலையை உணராமல் பிள்ளைபெறும் இயந்திரமாகப் பார்க்கிறார்கள்.




## வடக்கேயும் பறக்கும் கொடி!

இந்திப் புத்தக உலகில் சமீபத்திய பெஸ்ட் செல்லர் யார் என்று சொன்னால் நம்ப மாட்டீர்கள். ஆம்! "பெரியார் கே ப்ரதிநிதி விசார்" என்ற நூல் கடந்த மாதம் பெரியார் பிறந்தநாள் அன்று ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் வெளியிடப்பட்டது. புதுடெல்லியில் 'ஃபார்வர்ட் ப்ரஸ்', 'காட்டாறு' இதழ் இரண்டும் இணைந்து வெளியிட்ட இந்த நூல் ஒரே மாதத்தில் இரண்டாயிரம் பிரதிகள் விற்றுத் தீர்ந்திருக்கிறது. பெரியார் ஒட்டு மொத்த இந்தியாவுக்கும் தேவைப்படுகிறார். பகுத் அச்சா!

இந்தச் செய்தி தி இந்து, தமிழ் நாளிதழில் (29.10.2016) வெளியாகி உள்ளது. தமிழ் இந்து நாளிதழின் செய்தியை அப்படியே விடுதலை ஏடும் (31.10.16) முதல்பக்கத்தில் வெளியிட்டுள்ளது.

## நன்கொடை

காட்டாறு ஏட்டிற்கு திண்டுக்கல் பொறியாளர் தோழர் சௌந்தரராஜன் ரூ.2000 வழங்கியுள்ளார்.

திருப்பூர் தோழர் வேணி - இராவணன் இணையரின் மகள் கி.மதுமிதா அவர்களின் பிறந்தநாள் நவம்பர் 17. பிறந்தநாள் நினைவாக காட்டாறுக்கு ரூ 1000 நன்கொடை வழங்கியுள்ளார்.

தேனி மாவட்டம் பெரியகுளம் தோழர் விரிவுரையாளர் செ.உதயசங்கர் - தி.சுதனா ஆகியோரது வாழ்க்கைத் துணை ஏற்பு விழா நினைவாக காட்டாறு ஏட்டிற்கு ரூ 2000 வழங்கினார்கள். மணவிழாவில் தேனி மாவட்டம், போடி தோழர் சரவணன் அவர்கள் காட்டாறு ஏட்டிற்கு ஆண்டுச்சந்தாவாக ரூ 5000 நன்கொடை வழங்கினார்.

கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரத்தைச் சேர்ந்த டாக்டர் ஜஸ்டின் அவர்கள் காட்டாறு ஏட்டிற்கு ரூ 1500 நன்கொடை வழங்கினார். காட்டாறு வெளியீடான ஆர்.எஸ்.எஸ் ஆல் ஆபத்து என்ற நூலை 100 வாங்கி அவரது நண்பர்களுக்கு வழங்கி வருகிறார்.

பல்லடம் விஜயன், தீபா, நாராயணமூர்த்தி






# ‘மாடு’ பாதுகாப்பின் அரசியலும் வணிகமும்

**கோவை மாவட்ட மாட்டுக்கறி வியாபாரிகள் சங்கத் தலைவர் நிம்மதி இஸ்மாயில் - முனிரா இணையரின் நேர்காணல். 2016 செப்டம்பர் இதழின் தொடர்ச்சி...**

**கோசாலைகள் தொடங்கப்பட்டால் யாருக்கு லாபம் விவசாயிகளுக்கா,அல்லது அரசியல் தொழில் அதிபருக்கா?**

கோசாலை நிறுவனங்களை அரசே உருவாக்கவேண்டும். ஆனால் அதை அரசு உருவாக்க வில்லை. தனிநபர்கள்தான் அதை எடுத்து நடத்துகிறார்கள். இப்பொழுது இந்தியாவின் முதுகெலும்பு விவசாயின்னு சொல்கிறார்கள். ஆனால் விவசாயிகள் பொருளாதாரம் சீர்குலைந்து பெரும்பாலான விவசாயிகள் தற்கொலைதான் செய்து கொள்கிறார்கள்.

விவசாயி ஒரு மாட்டை வளர்த்து பால் கறந்து விற்கப்படுகிறது. இனி இந்த மாடு பால் தராது என்று தெரிந்த பின் அதைச் சந்தையில் விற்பனை செய்து அந்த விற்பனை செய்த பணத்தில் கொஞ்சம் முதலீடு போட்டால்தான், வேறு ஒரு மாட்டை வாங்கமுடியும். அப்படி இருக்கும்போது இந்த மாதிரிச் சட்டம் கொண்டு வந்தால் விவசாயி களுக்குத்தான் பாதிப்பு ஆகும்.

இதனால் பொருளாதாரம் நசிவடைகிறது. இதுவே விவசாயிகளை மேலும், மேலும் தற்கொலைக்குத் தூண்டுதல் ஆகிறது. வெளி நாடுகளைப் பொறுத்த வரையில் விவசாயிகளுக்கு எல்லாச் சலுகைகளும் இருக்கிறது. ஆனால் நம் நாடுகளில் விவசாயத்திற்கு உண்டான சலுகைகள் மிகவும் குறைவு. இந்த மாதிரியான பிரச்சனை களுக்கு எல்லாம் ஒரு தீர்வும் இல்லாமல் பசுவதைத் தடைச்சட்டம் கொண்டுவர வேண்டும் என்கிறார் கள்.விவசாயிகளுக்கு எந்த ஒரு நிவாரணமும், சலுகை களும் இல்லை. எந்த ஒரு முடிவும் இல்லாமல் சட்டம் கொண்டுவருகிறார்கள். கோசாலைகளும், டிரஸ்ட்டுகள் நேரடியாக விவசாயிகளிடம் கொள்முதல் செய்தால் அதனை நாங்களே வரவேற்கிறோம்.

**கோசாலைகளுக்கு பி.ஜே.பி அரசு பண்டு ஒதுக்குகிறார்கள் என்கிறார்கள் அது உண்மையா?**

உண்மைதான் டிரஸ்ட் ஆரம்பிக்கிறார்கள் N.R.I. பண்டு இருக்கிறது. டிரஸ்ட் மூலமாக வசூல் செய்யப்படுகிறது.

**மாடு வியாபாரம் சம்பந்தமான சட்ட ரீதியான சிக்கல்கள் பற்றி சொல்லுங்கள்**

நாம் வண்டியில் மாடுகளை ஏற்றிக் கொண்டு போகும்போது வண்டியை பிடிப்பது R.T.O. அதிகாரிகள், காவல்துறை இவர்கள்தான் வண்டியை பிடிக்கவேண்டும். ஆனால் கோசாலை நிறுவனங்களை ஆரம்பித்தால் அதில் இருப்பவர்கள் வண்டியை தடுக்கிறார்கள். வண்டி ஓட்டுனரை அடிக்கிறார்கள். வண்டிசாவி, கைப்பேசி எல்லா வற்றையும் எடுத்துவைத்து கொள்கிறார்கள். அவர்கள் சட்டத்தைக் கையில் எடுக்கிறார்கள். அதன் பிறகுதான் காவல்துறை அதிகாரிகள் வருகிறார்கள்.

பின்பு அவர்களிடம் வண்டி ஒப்படைக்கப் படுகிறது. ஆனால் காவல்துறை மாடுகளைப் பராமரிக்க முடியாமல் கோசாலைகளுக்கு அனுப்பி வைக்கிறார்கள். பின்பு வழக்குத் தொடரப்படுகிறது. வழக்குத் தொடர்ந்தாலும் நாங்கள் தான் வெற்றியடைகிறோம். மாட்டின் உரிமையாளர் நாங்கள்தான் அதனால் மாட்டை எங்களிடம் ஒப்படைக்கவேண்டும் என்று நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கிறது.

ஆனால் கோசாலை நிறுவனங்கள் மாடுகளை ஒப்படைப்பது கிடையாது. நீதிமன்ற ஆணையை மதிப்பது கிடையாது. அதனை அவமதிப்பு செய்கிறார்கள். நாங்கள் போய் மாடுகளைக் கேட்டால் கோசாலையின் உரிமையாளர் இல்லை என்பதும், மேனேஜர் இல்லை என்றும் கூறி எங்களை திருப்பி அனுப்பி வைத்து விடுகிறார்கள். அதற்கு இடையில் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின்படி இல்லாமல் மேல் நீதிமன்றத்துக்குப் போய் இடைக்கால உத்தரவு பிறப்பித்து விடுகிறார்கள்.

நாங்கள் மாடுகளை இத்தனை நாட்கள் கோசாலை நிறுவனத்தில் வைத்து பராமரித்தோம். அதற்கு எங்களுக்கு பராமரிப்புச் செலவு வேண்டும் என்று கூறிவிடுகிறார்கள். இதன் காரணமாக நாட்கள் இழுத்தடிக்கப்படுகிறது. பின்பு நீதிமன்றமும் பராமரிப்புச் செலவைக் கொடுக்க வேண்டும் என்று சொல்லப்படும்போது ஒரு மாட்டின் விலையைவிடக் கூடுதலாக விலை கொடுத்து வாங்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாக்கப்படுகிறோம்.

இதனால் நாங்கள் நினைப்பது என்னவென்றால் ஒரு மாட்டை விலை கொடுத்து வாங்க வழக்குத் தொடர்ந்து, நீதிமன்றம் சென்று காவல்துறையிடம் சென்று அலைவதைவிட மாடுகளைப் பிடித்தாலே இந்த தொழிலே ஆகாது என்று செல்லி அப்படியே விட்டு, விட்டு போய் விடுகிறார்கள். இதனால் நிறைய குடும்பங்களுக்குப் பாதிப்பு ஏற்படுகிறது. வியாபாரிகள் கடன்வாங்கி இந்தத் தொழிலை நடத்தலாம் என்று நினைப்பார்கள். ஆனால் நிறையப் பிரச்சனைகள் இருப்பதால் அப்படியே விட்டுவிட்டு சென்றுவிடுகிறார்கள்.

**மாடு வியாபாரம் சம்பந்தமாக இருக்கும் அரசியல் சிக்கல்களை பற்றி சொல்லுங்கள்**

கோவை மாவட்டத்தில் வெள்ளிங்கிரி கோசாலை நடத்தப்பட்டு இருந்தது. அதனுடைய உரிமையாளர் ஸ்ரீதேவி டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் சிவகணேசன். அவர்தான் கோயம்புத்தூரில் பிரச்சனை ஏற்படக் காரணமாக இருந்தார். அவர் கோயம்புத்தூரில் 'கேட்டில்கேர்' என்ற அமைப்பை உருவாக்கினார். 40 இலட்சம் ரூபாய் குடுத்து உருவாக்கினார். அதனால் நிறையப் பிரச்சனைகள் ஏற்பட்டது.

அப்பொழுது அரசு அதிகாரிகள் வந்து பார்த்துவிட்டு இதை இப்படியே விட்டுவிட்டால் மதக்கலவரம் ஆகிவிடும் என்று நினைத்து அதிகமான முயற்சிகளை மேற்கொண்டு இனிமேல் நீங்கள் எந்த கோசாலைகளையும் தன்னிச்சையாக செயல்படுத்தக்கூடாது. எதுவாக இருந்தாலும் நீங்கள் அரசு அதிகாரிகளிடம்தான் சொல்ல வேண்டுமே தவிர சட்டத்தை நீங்கள் கையில் எடுக்கக்கூடாது என்று அறிக்கை விட்டது.

இனிமேல் நீங்கள் செய்தால் உங்கள் மேல் நடவடிக்கை எடுப்போம் என்று கூறிவிட்டார்கள். நாங்கள் எங்களுடைய வாழ்வாதாரத்திற்காகப் போராட வேண்டியிருக்கிறது. ஏனென்றால் எங்களுடைய மூதாதையர் காலத்திலிருந்து இந்த தொழிலைச் செய்து வருகிறோம். அதனால் நாங்கள் போராட வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

நாங்கள் எந்த ஒரு கோசாலையும் ரோட்டில் வந்து மாடுகளை பிடிக்கக்கூடாது என்று சொல்லி அரசு அதிகாரிகளின் பார்வைக்கு எடுத்துச் சென்றோம். அதிகமான போராட்டங்களை நடத்தினோம். இதற்குக் கொள்கை ரீதியாக நிறைய அமைப்புகள் எங்களுக்கு உதவி செய்தன. அதில் குறிப்பாக பெரியார் தி.க. இராமகிருஷ்ணன் அவர்கள், த.மு.மு.க, தலித் இயக்கம்,

சிறுத்தைகள்கட்சி, செங்கோட்டையன், ஆதித் தமிழர் பேரவை என 17 இயக்கங்கள் உதவியாக வந்தன. எங்களுடைய உயிருக்குக் கூட நிறைய அச்சுறுத்தல்கள் ஏற்பட்டது. இந்த இயக்கங்கள் எல்லாம் ஒன்று திரண்டதால் எங்களுடைய உயிருக்குப் பாதுகாப்பு ஏற்பட்டது. எங்களால் வெற்றியடைய முடிந்தது.

**மாட்டுக்கறி கடைகளுக்கு வங்கிகள் மூலமாக கடனுதவி அளிக்கப்படுகிறதா?**

மாட்டுக்கறிக் கடைகளுக்கு Naboard Bank of India, இதன் தலைமை அலுவலகம் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா இதன் மூலமாக கடனுதவி அளிக்கப் படுகிறது. இதில் ஒரு குழு அமைத்துள்ளார் கள். அதில் 3 ஆண்கள், 2 பெண்கள். இவர்கள் ஏரியா வாரியாக ஒவ்வொரு கடைகளுக்குப் போகிறார்கள். கடைகளில் கடையின் சதுர அடியைப் பொறுத்துக் கடனுதவி செய்கிறார்கள் 7. 5 சதம் மாதாமாதம் செலுத்துவது கடனும் வட்டியுமாக 36 மாதங்களில் கடனைக் கட்டாயமாகத் திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற விதத்தில் கடன் அளிக்கப்படுகிறது.

எப்படியெனில் கடைக்குத் தேவையான அனைத்தையும் அவர்களே நமக்குக் கொடுத்து விடுவார்கள். நாங்கள் முதலில் அயன்ராடு வைத்து இருந்தோம். ஒரு வேளை அது துருப்பிடித்துப் போனால் பயன்படுத்துவதில் சிரமம் ஏற்படும் என்று மெட்டல் ராடு குடுத்து இருந்தார்கள். அந்த மெட்டல் ராடுகளில் தான் வளையங்களை பயன்படுத்த வேண்டும்.



அந்த ராடு கூட துருப் பிடிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அந்த ராடுக்கும் நாம் நிற்கும் இடத்திற்கும் குறிப்பிட்ட இடைவெளி இருக்க வேண்டும்.

கடையில் டைல்ஸ் கற்கள்தான் ஒட்டப் பட்டிருக்க வேண்டும். இதை வந்து அந்த ஏரியா மேனேஜர் பார்வையிடுவார். அதன் பிறகு 1 மாதத்தில் படிப்படியாகக் கடன் தொகை அளிக்கப்படும். அந்த கடன் தொகை முடிந்து 3 மாதத்தில் இன்னொரு தொகை அளிக்கப்படும். 36 மாதத்தில் கடனை எந்த ஒரு நிலுவைத் தொகையும் இல்லாமல் திரும்பச் செலுத்த வேண்டும். இது வங்கியின் நிபந்தனை. இந்த வங்கியின் கிளை அலுவலகம் கோவையில் உள்ள தேர்முட்டி வீதியில் உள்ளது.

**மாடுகளைப் பிடிப்பது போன்ற சூழ்நிலை இப்பொழுதும் இருக்கிறதா?**

இப்பொழுதும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. கருமத்தம்பட்டியில் கூட வண்டியை பிடித்து இருக்கிறார்கள். ஆனால் நாங்கள் சட்டத்திற்கு உட்பட்டு அதன்படி நடந்து கொண்டு தான் இருக்கிறோம். 'கியூரல் ஆக்ட்' என்று சொல்லு கிறார்கள். அது மாடுகளுக்கு மட்டும்தானா? எல்லா உயிரினத்திற்கும் இருக்கிறது. ஒரு வண்டியில் நிறைய கோழிகள் ஏற்றப்படுகிறது. ஆடுகள் ஏற்றப் படுகிறது. மனிதர்களையே நிறைய ஏற்றிக்கொண்டு போகிறார்கள்.

60 பேர் போகும் ஒரு பேருந்தில் 100 பேர் போகிறார்கள். இதை எல்லாம் இவர்கள் கண்டு கொள்வதில்லை. மாட்டை வைத்து மட்டும் தான் அரசியல் நட்த்துகிறார்கள். மாடுகள் போனால் மட்டும்தான் கோசாலைக்கு எடுத்துச் சென்று விடுகிறார்கள். அதனுடைய மதிப்பு 10 லட்சம். அனால் கோர்ட் கேஸ்னு யார் அலைவதுன்னு என்று சொல்லி அப்படியே விட்டுவிடுகிறார்கள்.

கோர்ட், கேஸ்னு அலையும் போது வியாபாரிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும். மாடுகளை பிடிக்கின்ற கோசாலைகளுக்குப் பெருங்கொண்ட இலாபம் ஏற்பட்டு விடுகிறது. இப்பவும் வெள்ளியங்கிரி கோசாலையில் எங்களுடைய மாடுகள் இருக்கிறது. இப்பொழுது தான் வெள்ளியங்கிரி கோசாலை உரிமையாளர் மீது நிறைய பிரச்சனைகள் வருகிறது என்று சொல்லி இனிமேல் மாடுகளை நாங்கள் பிடிக்க மாட்டோம் என்று சொல்லி ஒதுங்கி இருக்கிறார்கள்.

ஒரு யானையின் எடை 2000 கிலோ இருக்கிறது. அந்த யானையை வண்டியில் ஏற்றிக்கொண்டு போகிறார்கள். ஆனால் மாடுகளை ஏற்றும் போது மட்டும் வண்டிகளைப் பிடிக் கிறார்கள். ஒரு மாட்டின் எடை 40 கிலோ முதல் 50 கிலோ வரைதான் இருக்கும். குறைந்தது ஒரு வண்டியில் 10 முதல் 12 மாடுகளை மட்டும்தான் ஏற்றிச் செல்கிறோம். இந்த 12 மாடுகளின் மொத்த எடையே 600 முதல் 800கிலோ வரை தான் இருக்கும். அதனை அதிகாரிகள் பிடிக்கிறார்கள். யானை ஏற்றிக்கொண்டு போவதற்கு அரசே ஏற்பாடு செய்து தருகின்றது. இது எந்த விதத்தில் சரியானதாக இருக்க முடியும்?

- நிறைவு



# புதிய குரல் 9 வது சந்திப்பு

புதியகுரல் 9 வது சந்திப்பு சேலம் மாவட்டம் மேட்டூரில் உள்ள தாய்த் தமிழ்பள்ளியில், வருகின்ற 24, 25.12.2016 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது.

'பெண்கள் - ஒரு நூற்றாண்டுப் பார்வை' என்னும் தலைப்பின் கீழ் பெண்களும் இந்து மதமும், பெண்களும் கிறித்துவமும், பெண்களும் இஸ்லாமும், பெண்களும் பிற மதங்களும், பெண்களும் அரசியலும், இன்றைய சூழலில் பெண்கள் சந்திக்கும் புதிய நெருக்கடிகள், சமீபத்திய திரைப்படங்களில் பெண்கள் குறித்த சித்தரிப்பு ஆகிய தலைப்புகளில் பல்வேறு அமர்வுகள் திட்டமிடப்பட்டுள்ளன.

கலந்துக்கொள்பவர்கள் ரூபாய் 500 மட்டும் செலுத்தி முன்பதிவு செய்யக் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். முதல்நாள், கூட்டமும், மறுநாள் சுற்றுலாவும் என ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

டிசம்பர்
24-25
2016
மேட்டூர்
ரூ 500

தோழமையுடன்,
தோழர் திண்டுக்கல் விஜி, புதியகுரல்
94862 27822, 94897 03989

# அடுத்த தலைமுறையை அழிக்கும் கலைக்குடும்பங்கள்

700 வருடங்களுக்கு முன்பு ஒரு மன்னனுக்குத் துரோகம் செய்து, அவரைக் கொன்று, அவரது மகள் ஆற்றலரசி நயன்தாராவை அவரது விருப்பத்திற்கு மாறாகத் திருமணம் செய்ய முயற்சி செய்கிறார் படைத்தளபதி (ராஜ்நாயக்) கார்த்தி. அந்த முயற்சியில் இருவருமே கொல்லப் படுகிறார்கள்.

700 ஆண்டுகளாக ஆத்மா சாந்தி அடையாமல் அலையும் கார்த்தி பேய்க்கும், அடுத்தடுத்த பிறவிகள் எடுத்து கார்த்தியைப் பழிவாங்கும் நயன்தாரா பேய்க்கும் நடக்கும் சண்டைதான் காஷ்மோரா.




தமிழ்த்திரையுலகில் பேய் பிசாசு பில்லி சூனியம் செய்வினை - ஏவல் ஆகியவற்றின் மோசடித்தனத்தையும்,அவற்றின் பின்னால் உள்ள மூடநம்பிக்கைகளையும் அம்பலப் படுத்தும் விதமாக வந்துள்ளது. மூடநம்பிக்கைகள்+சாமியார்கள்+ வணிகம் + மத அரசியல் என்ற வெளி உலகுக்குத் தெரியாத கூட்டணியை மிகத் தெளிவாக விளக்குகிறது காஷ்மோரா.

"பேய்-பிசாசு- பில்லி சூனியங்களை விரட்டுவேன்" என்று சொல்பவர்கள் அனைவருமே பித்தலாட்டக்காரர்கள் என்பதை அழுத்தமாகச் சொல்லும் அதே வேளையில், பேய், பிசாசுகளை - அந்தப் பேய், பிசாசுகள் மட்டுமே விரட்ட முடியும் என்பதையும் கூறி, பேய்-பிசாசு-ஆத்மா நம்பிக்கைகளை உறுதிப்படுத்துகிறது காஷ்மோரா.

நடிகர் சிவக்குமார் அவர்களின் குடும்பத்தினர் தமிழ்நாட்டைக் குட்டிச்சுவர் ஆக்குவது என முடிவுகட்டி வேலை செய்கிறார்கள் போலத் தெரிகிறது. நடிகர் சிவக்குமார் இராம்ராஜ் காட்டன் கம்பெனியோடு சேர்ந்து மிகப்பெரும் அளவில் இராமாயணம், மகாபாரதச் சொற்பொழிவுகளைத் தொடங்கியுள்ளார்.

மூத்தவர் சூர்யா மாஸ் என்ற படம் எடுத்து, அதில், ஈழத்தமிழ்ப் பேயாக வந்து மிரட்டினார். பெயரில் மட்டுமே அந்த மாஸ் இருந்தது. அடுத்ததாக பேய்க் கதையையும், ஆங்கிலப் படத்தையும் இணைத்து 24 என்று ஒன்றைக் கொடுத்தார். அதுவும் எடுபடவில்லை. இப்போ தம்பி கார்த்தி, 14 ஆம் நூற்றாண்டுப் பேய்களை அறிமுகப்படுத்துகிறார்.

ஆணவப்படுகொலையை எதிர்த்துப் படமெடுக்கும்போதுகூட, அதையும் அரண்மனை 2 என்ற பேய்ப்படமாகத்தான் எடுக்கவேண்டும் என்ற பேய் ட்ரெண்டில், இனமான நடிகர் புரட்சித் தமிழன் சத்யராஜ் அவர்களே, 'ஜாக்சன்துரை' என்ற படத்தில் குடும்பத்தோடு பேயாக நடித்துவிட்டார். அந்த சத்யராஜை உருவாக்கிய சிவக்குமாரிடமும் அவரது குடும்பத்தினரிடமும் நாம் வேறு என்ன எதிர்பார்க்க முடியும்?

'சிகரம்' அறக்கட்டளை மூலமாக அடித்தட்டிலிருந்து வரும் மாணவர்களுக்குக் கல்விச் சேவையை வழங்குவோர், அந்த இளந்தலைமுறையினரை மூடநம்பிக்கையாளர்களாக - அறிவைப் பயன்படுத்த இயலாதவர்களாக உருவாக்குவது முரண்பட்ட போக்காகும். ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவிப்பதைக் காட்டிலும், மானமும், அறிவும் உள்ள மனிதனாக்குவதே மிகச்சிறந்த சமுதாயத் தொண்டு. மானமும், அறிவும் இருந்தால் இன்றைய கல்வியும், வேலை வாய்ப்பும் எவரையும் எளிதாகச் சென்று சேரும்.

அடுத்த தலைமுறை மானமும், அறிவுமற்ற தலைமுறையாக உருவாவதற்கு அடிப்படைக் காரணமாய் இருக்காமல், பேய்ப்படங்களை எடுக்காமல் இருக்க வேண்டுமென - திரைத்துறையினருக்கு ஒட்டுமொத்தமாக வேண்டுகோள் விடுக்க நினைக்கவில்லை. மேடைகளில் பகுத்தறிவையும், சமூகநீதியையும் உரக்கப்பேசும் சமுதாய அக்கறையுள்ள இயக்குநர்களுக்கும், நடிகர்களுக்கும், கலைக்குடும்பங்களுக்கும் வேண்டுகோள் விடுக்கிறோம்.




மே.கா.கிட்டு

# சமஸ்கிருதம்: மொழி மட்டுமே ! ...?

மோடியின் ஆட்சி நாட்டை மீண்டும் வேத காலத்துக்கு அழைத்துச்செல்ல உறுதி ஏற்றிருப்ப தாகவே தெரிகிறது. 14,135 பார்ப்பனர்கள் மட்டுமே தாய்மொழியாகப் 'பதிவு செய்துள்ள' (பேசுகிற அல்ல) சமஸ்கிருதத்தை இந்தியாவின் அனைத்து மாநில C.B.S.E. பள்ளி களிலும் வார விழாக்களாகக் கொண்டாடி போட்டிகள் நடத்தி அனைத்து மொழிகளுக்குமே 'சமஸ்கிருதமே தாய்' என்பதை உறுதி செய்ய வேண்டும் என்று மனிதவளத் துறை சுற்றறிக்கை அனுப்பியது. இதைத் தொடர்ந்து ஓம் பிரகாஷ் என்ற பா.ஜ.க நாடாளுமன்ற உறுப்பினர் கடந்த 6-6-14. ல் நாட்டிலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் சமஸ் கிருதத்தைக் கட்டாயப்பாடமாக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி நாடாளுமன்றத்தில் தனிநபர் மசோதா ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

'சமஸ்கிருத மேம்பாட்டுச்சட்டம்' என்று வெளியிடப்பட்டுள்ள அந்த மசோதா, மத்திய, மாநில அரசுப்பள்ளிகள் அனைத்திலும் சமஸ் கிருதத்தைக் கட்டாயப் பாடமாக்குவதோடு, செயல் படுத்தாத பள்ளிகளின் அங்கிகாரத்தை நீக்கம் செய்ய வேண்டும் என்று கோருகிறது. இதை நடைமுறைப் படுத்துவதற்கு நான்கு உறுப்பினர் களுக்கு மேல் இல்லாத ஒரு குழுவையும் அதற்குத் தலைவரையும் நியமித்து (அதாவது பார்ப்பனர் களைக் கொண்ட குழு) அவர்களுக்கான ஊதியத் தையும் வரையறை செய்து, முழு அதிகாரம் வழங்கி உடனடியாக அரசிதழில் அறிவிக்க வேண்டும் என்று மசோதா கூறவதோடு மாநில அரசுகளை இதற்குத் தேவையான அளவு மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்யவும் வலியுறுத்துகிறது.

பி.ஜே.பியின் மொழிக்கொள்கை என்ன வென்றால்,அது R.S.S. இன் மொழிக் கொள்கைதான். R.S.S. என்ற இந்த அமைப்புக்கு மற்றொரு நோக்கம் 'இந்து அரசாங்கத்தினை அமைப்போம்' என்ற முழக்கத்தின் மீது ஆரிய வர்ணாசிரம தர்மத்திற்குப் புது மெருகு கொடுத்து வலிவும், பொலிவும் கொள்ளச் செய்வது; அதற்காக சமஸ்கிருதத் தினையும் இந்தியையும் பரப்புவது என்பதாகும். தொடர்பு மொழியாக இந்தி தான் இருக்க வேண்டும் என்று 1957ல் குருஜி கோல்வால்கர் கூறியுள்ளார்.

"மேல் படிப்பு, ஆராய்ச்சி எல்லாவற்றிலும் பொருத்தமான ஒரு பொது மொழி உண்டு என்றால் அது சமஸ்கிருதமேயாகும்! அதன் புனிதத் தொடர்பும், சிறப்பான வளமும் அதுவே நமது தேசிய மொழி என்பதற்குத் தகுதியானதாகும். நாட்டின் ஒற்றுமைக்குச் சமஸ்கிருதம் என்பது ஒரு கட்டாயம் ஆகும்." என்கிறார்.

**மக்கள் பயன்பாட்டில் இல்லாத சமஸ்கிருதம்**

1921 ஆம் ஆண்டில் இந்தியா முழுவதும் சமஸ்கிருதம் பேசியோர் 356 பேர். அதில் 315பேர் தமிழ் நாட்டில் மட்டுமே இருந்தார்கள். தமிழ்நாடு பார்ப்பனர்களின் ஆதிக்கக் கோட்டையாக இருந்தது என்பதற்கு இது ஒரு உதாரணம். 2001ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் சமஸ்கிருதம் பேசத் தெரிந்தவர் ஒருவர் கூட இல்லை. இது பெரியார் இயக்கத்திற்குக் கிடைத்த வெற்றி. தமிழ்நாட்டில் மட்டுமல்ல வடகிழக்கு மாநிலங்கள், மத்திய பிரதேசத்திற்கு அப்பால் உள்ள கிழக்கு மாநிலங்கள், ஜம்மு காஷ்மீர், கேரளா, குஜராத் மாநிலங்களிலும் 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி சமஸ்கிருதம் பேசுவோர் ஒருவர் கூட இல்லை.

1981-ல் 6106 நபர்களாக இருந்தவர்கள் 1991-ல் 49,376 நபர்களாக அதிகரித்து, 2001-ல் 14,135 நபர்களாகக் குறைந்தனர். இதிலிருந்தே பதிவுகள் உண்மையானவை அல்ல என்பதைப் புரிந்து கொள்ள முடியும். இது கணக்கெடுப்பில் நிகழ்ந்த கோளாறுகள் அல்ல. அரசியல் சூழலுக்கு ஏற்றவாறு அவ்வப்போது தங்கள் 'மொழி அடையாளத்தை' மாற்றிக் கொள்கிறார்கள் என்பதையே காட்டுகிறது, என்கிறார் இந்திய மக்கள் மொழியியல் கணக்கெடுப்புத் துறைப் பேராசிரியர் கணேஷ்தேவி.

"சமஸ்கிருதம் இப்போது எவருக்கும் தாய் மொழியாக பயன்பாட்டில் இல்லை என்றாலும், அரசியல் சட்ட உரிமையையும் அந்த மொழியின் சமூக மேலாதிக்கம் கருதியும் அதைத் தாய் மொழியாகப் பதிவு செய்கிறார்கள்" என்கிறார், செம்மொழி மய்யத்தைச் சார்ந்த ஆய்வாளர் பி.மல்லிக்கார்ஜூன்.

"சமஸ்கிருத கிராமம் என்று அழைக்கப்படும் கர்நாடகத்திலுள்ள மாத்தூரிலேயே அந்த மொழி

தெரிந்தவர்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில்தான் உள்ளனர். பயன்பாடு இல்லாமலேயே சமஸ்கிருதம் தனது செல்வாக்கைச் செலுத்திக் கொண்டிருக்கிறது. நாட்டில் எங்கோ ஒரு மூலையில் சமஸ்கிருதம் பேசப்படுவதாக நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் அது எங்குமே பேச்சு வழக்கில் இல்லை. அது ஒரு கருத்து என்ற அளவிலேயே நம்மிடம் இருக்கிறது" என்கிறார், இந்திய மொழியியல் கணக்கெடுப்புத் துறைப் பேராசிரியர் கணேஷ்தேவி.

**சமஸ்கிருதமும் தமிழறிஞர்களும்**

சென்னை பிரசிடென்சி கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராக வேலை பார்த்த கா.நமச்சிவாயம் (முதலியார்) அவர்களுக்கு மாதச் சம்பளம் ரூ.81ஆகவும், அதே நேரத்தில் அக்கல்லூரியில் சமஸ்கிருதப் பேராசிரியராக வேலை பார்த்த குப்புசாமி சாஸ்த்திரிக்கு மாதச்சம்பளம் ரூ.300 ஆகவும் இருந்த கொடுமையை எதிர்த்து தந்தை பெரியார் அவர்கள் தனது குடி அரசில் எழுத, அதன் அடிப்படையில் நீதிக்கட்சி ஆட்சியில் முதலமைச்சராக இருந்த பனகல் அரசர் அந்த வேறுபாட்டை நீக்கி உத்தரவு பிறப்பித்தார் என்பது கடந்த கால வரலாறு.

"இராமலிங்க அடிகள் வரலாறு" என்ற நூலை எழுதியவர் சன்மார்க்க தேசிகன் என்னும் ஊரன் அடிகளார் ஆவார். இந்த வாழ்க்கை வரலாற்றிலே சுவையான செய்தி ஒன்று சுட்டிக்காட்டப் படுகிறது.

> "சென்னையில் சங்கராச்சாரிய சுவாமிகளுடன் அளவளாவ நேரிட்ட போது, சங்கராச்சாரிய சுவாமிகள் சமஸ்கிருதமே எல்லா மொழிகளுக்கும் தாய்மொழி எனக் கூறினாராம். அடிகளார் அஃதுண்மை அன்றென மறுத்து சம்ஸ்கிருதம் எல்லா மொழிகளுக்கும் தாய்மொழியாயின் தமிழ் தந்தை மொழி எனக்கூறி தமிழின் சிறப்பை விரிவாக விளக்கி, ஆரிய அரசன் பிரகத்தனுக்கு தமிழறிவுறுத்துவான் வேண்டிக் கபிலர் 'குறிஞ்சிப் பாட்'டினைப் பாடியதனை நிகர்ப்ப, ஆரியம் மட்டுமே நன்குணர்ந்த ஆச்சாரியராகிய சங்கராச்சாரியாருக்குத் தென்மொழிக் கடலும் வடமொழிக் கடலும் நிலைகண்டுணர்ந்த மொழிப்புலமையோடன்றித் திருவருட்புலமையால், உலகத்து மொழி அனைத்தும் முட்டற உணர்ந்த முற்றறிவினராகிய பெருமானார் தமிழ் என்னும் சொல்லுக்கு ஓர் உரையும் அப்போதே செய்து சங்கராச்சாரியாருக்குத் தமிழின் செவ்வியை செவியறிவுறுத்தியருளினார்" என்று இருக்கிறது.

எனவே சங்கராச்சாரியார் நினைத்தால் எது வேண்டுமானாலும் சொல்லுவார். சமஸ்கிருதம் அப்போது தாய்மொழி. இப்போது சமஸ்கிருதம் தந்தைமொழி என்கிறார். இதிலே கூட முரண்பாடற்ற சிந்தனை இல்லை. நேரத்திற்கும், காலத்திற்கும் தகுந்தாற்போல மாற்றிச் சொல்லுகின்றார்.

மேலும் சமஸ்கிருதத்தைப் பற்றி விளக்கம் சொல்லும் போது சமஸ்கிருதம் படித்தால் நரம்புக்கு மிகவும் நல்லது என்று சங்கராச்சாரியார் சொல்லுகிறார்.

சங்கராச்சாரியாருடைய சமஸ்கிருத அறிவை விட, மறைமலை அடிகளாருடைய சமஸ்கிருத அறிவு குறைவானதல்ல. மறைமலை அடிகள் எழுதியிருக்கிற 'அறிவுரைக்கொத்து' என்ற நூலில் "உடல் நலம் கருதி யாரும் சமஸ்கிருதம் படிக்கக்கூடாது. அதிலும் குறிப்பாகப் பிள்ளைகளுக்கு அது இருக்கக்கூடாது. வயிற்று வலியைத் தான் அது உண்டாக்கும்" என்று எழுதினார்.

அதை 1967ஆம் ஆண்டு அண்ணா அவர்கள் ஆட்சியில் எஸ்.எஸ்.எல்.சி வகுப்புக்குப் பாடமாக வைக்கப்பட்டது. அதை எதிர்த்து 'இந்து' பத்திரிக்கை, 'எக்ஸ்பிரஸ்' பத்திரிக்கையெல்லாம் கூப்பாடு போட்டன. வேண்டுமென்றே சமஸ்கிருதத்தை இழிவுபடுத்துவதற்காகவே இது தி.மு.க ஆட்சியிலே பாடமாக வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்ல - உடனே அண்ணா அவர்கள் இதை ஆய்வு செய்ய டாக்டர்.மு.வ. அவர்கள் தலைமையில் ஒரு குழுவை நியமித்தார். "மறைமலை அடிகளாருடைய கருத்து மொழியியல் படி கூறப்பட்டிருக்கின்ற கருத்தாகும். இதிலே மறுப்பதற்கு ஒன்றும் இல்லை" என்று தெளிவாக அக்குழு சொல்லியது. அண்ணா அவர்கள் "இந்து"விற்கோ "எக்ஸ்பிரஸி"ற்கோ பயந்து எடுக்க மாட்டேன் அது பாடமாக இருக்கும் என்று சொன்னார்.

> "யான் இதுகாறும் எடுத்துக்காட்டியவற்றால் சமஸ்கிருதம் எந்த வகையிலும் தமிழ்மொழியோடு உறவுடைய மொழியல்ல என்பது தெளிவாகப் புரியும். தமிழுக்கும் தமிழனுக்கும் வேறுபட்டது சமஸ்கிருதம். ஆகவே அது தமிழனுடைய மொழி ஆகாது, தொன்று தொட்டுவரும் தமிழ் மொழியைவிட ஆரிய மொழியாகிய சமஸ்கிருதம் உயர்ந்த மொழியா? வடமொழி பேச்சிழந்து போனதற்குக் காரணம், செயற்கையான அதன் ஒலிப்பு முறையாகும் என்றும் மேலும், "நான் ஆயுள் முழுவதும் சமஸ்கிருத மொழியைப் பயின்று கொண்டிருக்கிறேன், எனினும் எனக்கே ஒவ்வொரு தடவையும் புதியதாகத் தோன்றுகிறதெனில், சாதாரான மக்களுக்கு அவற்றைப் பயில்வது எவ்வளவு சிரமாயிருக்கும். எனவே இவ்வெண்ணங்கள் பொதுமக்களுடைய சொந்த மொழியில் மொழிபெயர்க்கப் படவேண்டும்."

என்று 'இந்திய பிரசங்கங்கள்' என்ற நூலில் விவேகானந்தர் கூறியிருக்கிறார்.

### சமஸ்கிருதம் பற்றி பெரியார்

"சமஸ்கிருதம் பரவினால்தான் பார்ப்பான் வாழமுடியும், சுரண்டமுடியும், நம்மைக் கீழ்சாதி மக்களாக ஆக்க முடியும். அவன் 'பிராமணானாக' இருக்க முடியும். சமஸ்கிருத்தின் நலிவு பார்ப்பன ஆதிக்கத்தின் நலிவு. அதை உணர்ந்துதான் ஒவ்வொரு பார்ப்பனரும் சர்வசாக்கிரதையாகக் காரியம் ஆற்றுகின்றார்." - விடுதலை 15.02.1960

"சமஸ்கிருதத்தினால் தமிழர்களும், தமிழ்நாடும் இன்று என்ன நிலைமைக்குத் தாழ்ந்து தொல்லையும், மடமையும், இழிவும் அனுபவிக்கிறோம் என்பதைச் சிந்திக்கவேண்டும்." - விடுதலை 05.08.1963

"பார்ப்பனர்கள் செத்த பாம்பான சமஸ் கிருதத்தை எடுத்து வைத்துக் கொண்டு எவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்? பொதுப் பணம் சமஸ்கிருதத்தின் பேரால் எவ்வளவு செலவா கின்றது? பொதுமக்களின் வரிப்பணம் சமஸ் கிருதத்துக்கு ஆக ஏன் ஒரு பைசாவாவது செலவாக வேண்டும். தமிழ் மக்கள் யாரும் இதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை." – விடுதலை 28.06.1964

"வடமொழியை நமது படுக்கை வீட்டுக்குள் விட்டுக் கொண்டு மதம், கலாச்சாரம், கடவுள், ஆத்மார்த்தம், நாகரிகம், இலக்கியங்கள் பேச்சு வழக்கு முதலியவைகளில் தன்னிகரில்லா ஆதிக்கம் செலுத்த விட்டுக் கொண்டு இருப்பவர்கள் இந்தி வெறுப்பு, இந்தி எதிர்ப்புகள் நடத்துவது வெக்கக் கேடான காரியம் ஆகும்." – விடுதலை 17.07.1964

"இந்நாட்டில் வந்து குடியேறிய ஆரியப் பார்ப்பனர்கள் தங்கள் மொழிக்குக் (சமஸ் கிருதத்துக்கு) கடவுள் பேரால் பல மகத்துவங்களைக் கூறி நம்மக்களைக் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சமஸ்கிருதச் சொற்களை அதிகமாக உபயோகிக்கச் செய்து அதன் மூலமே தங்கள் கலை, ஆசார அனுஸ்டானங்களைப் புகுத்தி விட்டனர். அந்த வேற்று மொழிக்குச் தனிச்சிறப்பு எதுவு மில்லை. –விடுதலை 09.07.1965

### ஆர்.எஸ்.எஸ். ஸின் மொழிக்கொள்கை

ஆர்.எஸ்.எஸ். அமைப்பு 1952ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் டாக்டர் முகர்ஜி தலைமையில் நடந்த ஜனசங்க மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானமானது, 'நாடு முழுவதும் சமஸ்கிருதத்தைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும். அதே நேரத்தில் சமஸ்கிருத எழுத்துக்களை பிரபலப்படுத்த வேண்டும்; எல்லா இந்திய மொழிகளுக்கும் சமஸ்கிருத எழுத்துக்களையே பொது எழுத்தாக அறிவிக்க வேண்டும். உபநிடதங்கள், பகவத்கீதை, இராமாயணம், மகாபாரதம் ஆகியவைகளே இந்தியாவின் இலக்கியங்கள்' என்று கூறுகிறது

ஆர்.எஸ்.எஸ். சட்ட திட்டங்களில் 'விதிகளும் ஒழுங்கு முறைகளும்' என்ற தலைப்பில் மூன்றாவது பிரிவு கீழ்கண்டவாறு கூறுகிறது

"இந்து சமாஜத்தில் பல்வேறு வகையில் பிரிந்து கிடக்கும் குழுக்களை ஒன்றுசேர்த்து அவர்களுக்கு எழுச்சி ஊட்டி இளமை இரத்தம் பாயச்செய்ய வேண்டும். இந்து தர்மம், மற்றும் சமஸ்கிருத அடிப்படையில் இது செய்யப்பட வேண்டும். இதன் மூலம் பாரதத்தின் எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி பெற முடியும்" இது தான் இந்த அமைப்பின் நோக்கமும் கொள்கையும் ஆகும்.

> **வடமொழியை நமது படுக்கை வீட்டுக்குள் விட்டுக் கொண்டு மதம், கலாச்சாரம், கடவுள், ஆத்மார்த்தம், நாகரிகம், இலக்கியங்கள் பேச்சு வழக்கு முதலியவைகளில் தன்னிகரில்லா ஆதிக்கம் செலுத்த விட்டுக்கொண்டு இருப்பவர்கள் இந்தி வெறுப்பு, இந்தி எதிர்ப்புகள் நடத்துவது வெக்கக்கேடான காரியம் ஆகும்.**



மொழிப்பிரச்சனையில் குருஜி கோல் வால்க்கரின் பார்வை என்னவென்றால்,

"இனைப்பு மொழி என்கிற பிரச்சனைக்கு ஒரு தீர்வாக அந்த இடத்தைச் சமஸ்கிருதம் பெறுகிற வரை வசதி காரணமாக இந்திக்கு நாம் முன்னுரிமை கொடுக்க வேண்டும். இந்தியானது இதர பாரதீய மொழிகளைப்போல சமஸ்கிருதத்திலிருந்து வந்தது. அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் என்ற நவீன அறிவின் அனைத்து துறைகளிலும் எதிர்கால வளர்ச்சியை அது சமஸ்கிருதத்திலிருந்து பெறுகிறது என்கிறார்.

சைவ, வைணவ சமயஞ்சார்ந்த திருநாவுக் கரசர், நம்மாழ்வார் போன்றவர்கள் அகம் பற்றிய சங்க இலக்கிய மரபுகளைப் பின்பற்றி நூற்றுக் கணக்கான பாடல்களைப் பாடியுள்ளனர். பரஞ்ஜோதி முனிவர் - சிவப்பிரகாசர் - சேக்கிழார் போன்றோர் வடமொழியைத் தமிழினின்றும் வேறுபடுத்திக் குறைத்து மதிப்பிட்டுள்ளனர். தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை என்று கூறப்படும் ஆங்கிலம் - ஆரியம் - தீந்தமிழ் மூன்றிலும் பெரும்புலமை பெற்றிருந்த மறைமலை அடிகளார், கா.சுப்பிரமணியம் (பிள்ளை), எம்.எஸ். பூரணலிங்கம்(பிள்ளை), பேராசிரியர் சுந்தரம் (பிள்ளை), பொறியாளர் பா.வே.மாணிக்க (நாயக்கர்), சூர்ய நாராயண (சாஸ்திரியார்), பண்டித நா.மு. வேங்கடசாமி (நாட்டார்), பண்டித கதிர்வேல் (பிள்ளை), மொழிஞாயிறு நா. தேவநேயப்பாவாணர் இன்னும் எண்ணற்ற தமிழர்கள் வடமொழியை வெறுத்து ஒதுக்கியே வந்துள்ளனர்.

– தொடரும்

## இராமர் வெடி

நீங்க என்னப்பா எப்பவுமே ஊரோட ஒத்து வாழ மாட்டீங்கறீங்க? வருசம் பூராவும் இப்படி இருக்கறீங்கனா தீபாவளி அன்னிக்குமா? ஏன் தீபாவளிக்குப் பட்டாசு வெடிக்க மாட்டீங்கறீங்க? என்றபடி வந்தான் நண்பன் கொங்குக்குலச் சிங்கம். பேச ஆரம்பிக்கும் முன் மறித்து இந்த சுற்றுப்புறச் சூழல் கெட்டுப் போகுது பறவைகள், விலங்குகளுக்கு தொந்தரவா இருக்குது, ஓசோனில் ஓட்டை விழுகுது, அப்படின்னு தேஞ்சு போன ரெக்காடு மாதி திரும்ப திரும்ப பேசக் கூடாது

சரிடா, நானும் பட்டாசு வெடிக்கிறேன். அதுக்கு முன்னாடி சில சந்தேகங்கள் இருக்கு. தீர்த்து வை என்றவனிடம், ஓ ஆரம்பிச்சுட்டே கேளு சொல்றேன், தெரியலையின்னா வழக்கம் போல நீயே சொல்லிடு என்றான் கொ.கு.சி.

எதுக்கு தீபாவளி கொண்டாடுறீங்க என்ற கேள்விக்கு, இதெல்லாம் என்னடா கேள்வி? நரகாசூரன் அப்படிங்கற கொடிய அரக்கன் செத்துப் போன நாளில் நாமெல்லாம் வெடி வெடிச்சுக் கொண்டாடி மகிழ்கிறோம். அது மட்டுமில்லாமல் சிவகாசியில் உள்ள எத்தனை ஏழைத் தொழிலாளிகள் வீட்டில் அடுப்பெறியுது தெரியுமா?

ஓ...தெரியுமே, அடுப்பு மட்டுமில்லை, பட்டாசு விபத்துகளால் வீடே எரியுது...நீங்க வெடி வெடிக்கறதுக்கு ஏண்டா அவர்களின் ஏழ்மையைக் குறியீடா மாத்தறீங்க? உடனடியா பதில் தந்தான் கொ.கு.சி. ஓ...அப்படின்னா உங்கள மாதிரி கருப்புச்சட்டைக்காரர்களுக்கு சிவகாசிப் பட்டாசு தொழிலாளிகள் பற்றிக் கவலையில்லை?

போன ஆண்டு நீங்கெல்லாம் போராடினீங்களே? அது என்ன போரட்டம் என்றேன் நண்பனிடம், அட இது தெரியாதா பூரண மதுவிலக்குக் கோரி போராடினாம். அப்படின்னா, மது ஆலைகளில் ஏழைத் தொழிலாளர்கள் வேலை செய்யலீங்களா ஆபிசர்? என்றேன். அடுத்ததா போன வாரம் ரங்கசாமி அய்யன் இறந்து போனப்ப, அவரு இறுதி ஊர்வலத்தில் பிணத்துக்கு முன்னாடி 1000 வாலா சரவெடி நீதானே வெடிச்ச? அப்ப அவரென்ன நரகாசூரனா?

பார்த்தியா ஆரம்பிச்சுட்ட உங்கூடெல்லம் பேச முடியாது. நீ பட்டாசு வெடிப்பியா? மாட்டியா? உனக்கு நான் வாங்கித் தரேன், என்ன வெடி வேணும் கேளு என்றான்.

சரிடா, நீ இவ்வளவு தூரம் சொல்றதாலே நண்பனுக்காக வெடிக்கிறேன். எனக்கு 2 பாக்கெட் இராமர் வெடி, கூடவே பத்த வைக்கறதுக்கு அனுமான் மார்க் தீப்பெட்டி வாங்கித்தாடா என்றேன்.

உனக்கெல்லாம் கொழுப்புடா இராமர் எங்க சாமிடா என்றவனிடம், சரி இருக்கட்டும் இலட்சுமி யாரு அவங்க உங்க சாமியில்லையா? இலட்சுமி படத்தப் போட்டு அது தூள் தூளாகப் போகிற மாதிரி வெடி வைக்கற உங்களுக்கு இராமர் வெடி கேட்டால் மட்டும் மனசு புண்படுதா?

கருப்புச்சட்டை காரர்கள் சார்பில் கேட்கிறேன். அடுத்த வருசம் இராமர் வெடி தயாரிச்சு மார்கெட்டில் வையுங்க. எப்படி வெடிக்கிறோமுன்னு மட்டும் பாருங்க. இந்தியா முழுக்கக் கேட்கும். எங்க வெடிக்கடைக்குப் போயிட்டு வர்றேன்னு சொன்னவன் இன்னும் ஆளைக் காணோம்..



## சீனா தானா அட்ரஸ் ..

சம்பளம், போனஸ் அப்படின்னு மண்டையைப் பிச்சுட்டுத் திரிகையில் வந்தது அந்த அழைப்பு. கலைக்குழு நாராயணனிடமிருந்து. ஏங்கீங்க என்றவரிடம், வீட்டில் என்றவுடன் இதோ வந்தாச்சு என் பதிலுக்குக் கூடக் காத்திராமல் அழைப்பைத் துண்டித்து விட்டார். சரி ஏதோ முக்கியமான விசயம் போல என்றபடி காத்திருந்தேன். பத்து நிடங்களில் வந்து நின்றார். தேநீர் பருகிய படித் தொடர்ந்தார்.

எனக்கு ஒரு அட்ரஸ் வேணுங்க. யாரு அட்ரஸ் என்ன விசயம் என்றேன். அன்னிக்கு உங்க வீட்டில் தான் வசூல் ராஜா படத்தோட சிடியை பார்த்தேன். அதனால் உங்கக் கிட்ட தான் கிடைக்குமுன்னு வந்தேன். யாருங்க கமலுதா, இல்லை சரண் முகவரியா என்றேன். அட இல்லீங்க நாராயணன் முடிக்கும் முன், அப்புறம் என்ன சினேகா முகவரியா என்றேன். அவசரப்படாதீங்க. எனக்கு சீனா தானா முகவரி தான் தேவை என்றார். இதென்ன புது ஏழரை என்றபடி நான் முழிக்க நாராயணன் தொடர்ந்தார்.

உங்கள மாதிரி படிப்புக் குறைவான ஆட்களுக்குத் தெளிவா சொல்லோனும், சீனா தானா என்ன சொல்லியிருக்குது தெரியுமா? அது தான் படிப்புக் குறைவு அப்படின்னு சொல்லியாச்சே அதையும் நீங்களே சொல்லிடுங்க என்றேன்.

விரிவாக விளக்கினார் கலைக்குழு நாராயணன். அதாவதுங்க சீனா தானா என்ன சொல்லியிருக்குதுன்னா, “அர்த்தமில்லா வார்த்தை களின் அர்த்தங்களை அறியணுமா... அதுக்கு இது தாண்டா ஸ்கூலு”

ஆக ஆர்த்தமில்லாத வார்த்தை ஒண்ணு இருக்கு. அதுக்கு அர்த்தம் வேணும், சொல்லிக் கொண்டிருக்கும் போதே கண்ணைக் கட்டியது எனக்கு .

கொஞ்சம் புரிகிற மாதிரிச் சொல்லுங்க. தலையும் இல்லாமல், வாலும் இல்லாமல் என்றேன். ஆமாங்க அப்படித்தான் ஆகிப்போச்சுங்க. மத்தியப் பிரதேசத்துல இருந்து சந்திரசேகர் அப்படிங்கிறவர் ஒரு வார்த்தைக்கு அர்த்தம் என்னவென கேட்டு மத்திய உள்துறை அமைச்சகத்திற்குத் தகவல் உரிமை சட்டத்தில் கடிதம் எழுத, அதற்கு உள்துறை அமைச்சகம், “உங்கள் கடிதம் மத்திய பொதுத் தகவல் அதிகாரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்த வார்த்தைக்கு என்ன அர்த்தம் என எங்களுக்குத் தெரியவில்லை என பதிலளித்துள்ளது” என்றார்.

அப்படி என்னதான் வார்த்தைங்க அது? அதிர்ச்சியான பதில் வந்தது. இந்துக்களுக்காக போராட, வாதாட, பரிந்துபேச அமைப்புள்ள இந்த நாட்டில் மத்திய உள்துறை அமைச்சகத்திற்கு அர்த்தம் தெரியாத அந்த வார்த்தை ‘இந்து’.... சீனாதானா நீ எங்கிருக்கிறாய் ..

## நாலு ஜேசிபி வாங்கி நிறுத்தனும்

டீவியில போன வாரம் ‘நாயகன்’ படம் போட்டாலும் போட்டாங்க... வேலு நாயக்கர் ஸ்டைலில் “நாமும் நாலு ஜேசிபி வாங்கி நிறுத்தறோம்” என்று தொடந்து சொல்லிக் கொண்டிருந்தார் செங்கொடி சிவக்குமார். உங்க ஏரியா சந்து குறுகலா இருக்குது, அதனால் உள்ளே வரமுடியாது என கார்ப்பரேசன் ஆப்பரேட்டர் சொன்னாலும் சொன்னார், பொங்கி எழுந்து விட்டார் .

சரிங்க, நீங்க உணர்ச்சி வசப்பட்டு சொல்றதெல்லாம் இருக்கட்டும்.. நம்ம சக்திக்கு இதெல்லாம் முடியமா? என ஏரியா பசங்க கேட்க, அடுத்த வாரம் மாரியம்மன் பண்டிகை வருது. அதுல குழந்தைகள் விளையாடுறது வேணுமுன்னா நாலு வாங்கி நிறுத்தலாம் என நாலு பேரு பேச, நடப்பதை அமைதியாகக் கவனித்துக் கொண்டிருந்தார் செங்கொடி சிவக்குமார்.

இப்ப மட்டும் வக்கணையாக் கேள்வி கேட்கத் தெரிஞ்சுதுல்ல? இதை அப்பவே கேட்டிருக்கணும். கண்னை மூடிட்டு இருந்துட்டு, இப்பக் கேட்டா? எனப் பீடிகை போட்டார். தெளிவாகச் சொல்லக் கேட்ட போது அவர் விளக்கினார். சொல்லி முடிக் கையில் பாதிப் பேரு எந்திருச்சுப் போயிட்டாங்க

அப்படி அவர் சொன்ன விசயம் என்னனா? பாஜக ஆட்சிக்கு வந்தா வெளிநாட்டுல இருக்கிற கருப்புப்பணத்தை எல்லாம் மீட்டு வந்து ஒவ்வொருத்தர் வங்கி கணக்கிலும் 15 லட்சம் போடுவதாக சொன்னார்களே? அதை எப்பப் போடப் போகிறீர்கள் என பிரதமர் அலுவலகத் திடம் மத்திய தகவல் ஆணையம் உத்தரவு இட்டுள்ளது. சிங்கப்பூரில இருந்து பணம் வருது நாம இளநீ கடை போடுறோம்.. இதை மாத்த எவனாலும் முடியாது.

## இராமராஜனும் இராமராஜ்ஜியமும்

இந்த கருப்புச் சட்டைக்காரர்களுக்கு எப்பப் பார்த்தாலுல் இதே வேலை. பாஜக வை பிற்போக்குத்தனமான கட்சி என விமர்சனம் செய்வதே வேலையாப் போச்சு. இராம ராஜ்ஜியத்தைப் பற்றிப் பேசுனா, சீதையைச் சந்தேகப்பட்டு நெருப்பில் இறங்கச் சொன்ன இராமனின் செயல் நியாயமா என விவாதம் வைப்பாங்க. அதனால் தான் பாஜக தமிழ்நாட்டில் அதிரடியாக ஒருவரைக் கட்சியில் சேர்த்தியுள்ளது.. அதுவும் இராமரையும் சேர்த்து தீயில் இறங்கச் சொன்னவரை...

அட....அப்படியா என நீங்க ஆச்சரியப்பட வேண்டாம். அவர் யாரென்றால், “அதென்ன கற்பை நிருபிக்கப் பெண் மட்டும் தீயில் இறங்குவது? ஆணும் சேர்த்து இறங்க வேண்டும். அதாவது சீதை மட்டும் தீயில் இறங்கினால் அது புராணம். இராமனையும் சேர்த்து தீயில் இறக்கி புரட்சி செய்தவர் இப்ப தமிழக பாஜக வில். தன் கரகாட்டக்காரன் படத்தில் கனகாவோடு சேர்த்து இராமராஜனையும் தீயில் இறக்கிய அந்த புரட்சி இயக்குநர் கங்கை அமரனேயன்றி வேறு யார்?.....

## ஒட்டிக்க கட்டிக்க

ஆச்சரியாமாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது நடிகர் சிவக்குமாரின் அந்தப் பேச்சைக் கேட்டு, ஏற்கனவே கோவையில் நடந்த உலகத்தமிழ் மாநாட்டில் அனைவரும் தமிழின் பெருமை பேசிப் பொங்கிக் கொண்டிருந்த வேளையில், பொட்டில் அடித்தாற் போல் கொங்குப் பகுதியில் நிலவும் தீண்டாமை வடிவமான இரட்டைக்குவளை பற்றி மேடையில் போட்டுடைத்தவர் அதன் தொடர்ச்சியாக,

நடிகர் சிவக்குமாருக்கு 75 வயதாகிறது. இதையொட்டி இன்று சென்னையில் அவர் எழுதிய இரு நூல்கள் வெளியீட்டு விழா நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்தார் சிவக்குமார். அப்போது அவர்களிடையே சிவக்குமார் பேசுகையில் உற்சாகத்துடன் காதல் குறித்துப் பேசினார்.

“பல ஜோடிகளை சேர்ப்பதும் நீங்கள்தான் (பத்திரிகையாளர்கள்), பிரிப்பதும் நீங்கள்தான் . என் பையனுக்குக் கூட நீங்கதான் கல்யாணம் பண்ணி வச்சீங்க (சூர்யா -ஜோதிகாவைச் சொல்கிறார்). கெமிஸ்ட்ரி நல்லாருக்கு, ஜோடிப் பொருத்தம் நல்லாருக்குன்னு எழுதுனீங்க. அவங்க ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிட்டு இப்போ நல்லாருக்காங்க, சந்தோஷமா இருக்காங்க.

இன்னும் பத்து வருஷத்தில் பெற்றோர் பார்த்து செய்து வைக்கும் அரேன்ஜ்ட் மேரேஜே இருக்காது. எல்லாமே காதல் கல்யாணமாதான் இருக்கும். தாராளமா காதல் கல்யாணம் பண்ணிக்குங்க. பண்ணிட்டு 40-50 வருஷம் சேர்ந்து வாழுங்க. அப்போதுதான் அது காதலுக்குக் கிடைத்த வெற்றியாக இருக்கும். சேர்ந்து வாழ்வதைப் பொறுத்தே காதலும் வெற்றி அடையும். உங்கள் மூலமாக அனைவரையும், இளைஞர்களை கையெடுத்துக் கும்பிட்டுக் கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து காதல் கல்யணம் பண்ணிக்கங்கப்பா. பண்ணிட்டு நல்லா இருங்கப்பா” என்று கூறினார் சிவக்குமார்.

சிவக்குமாரின் மகாபாரதம், இராமாயணச் சொற்பொழிவுகளைச் சிலாகித்துப் பேசும் கொங்கு மண்டலத்துப் பெருசுகள், இந்தப் பேச்சையும் கவனியுங்கள். சிந்தியுங்கள். ஊர் ஊராய்ப் போய் இராம்ராஜ் காட்டன் வேட்டிக்கடை திறக்கும் சிவக்குமார் சொல்கிறார். இராம்ராஜ் வேட்டியும் சொல்கிறது நாமும் சொல்கிறோம். இது கோடுஅடித்து கட்டும் காலமில்லை, வெல்குரோ காலம். ஒட்டிக்கோ கட்டிக்கோ.



சமூகநீதிக்கட்சி

# விருதுகள் வழங்கும் விழா சமூகநீதி விருதுகள் 2016



தந்தை பெரியார் விருது –
இதழியலாளர் ப.திருமாவேலன்,
புரட்சியாளர் அம்பேத்கர் விருது –
எழுத்தாளர் வே.மதிமாறன்,
மாமேதை மார்க்ஸ் விருது –
தோழர் செந்தில் இளந்தமிழகம்,
மாமேதை இராவ்சாகிப் எல்.சி. குருசாமி விருது –
ஆசிரியர். கனகராஜ் பூலே கல்வி மையம்
மகாத்மா பூலே விருது –
தோழர் தாமரைக்கண்ணன் காட்டாறு இதழ் குழு,
ஏகலைவன் விருது –
மாரியப்பன் பாராஒலிம்பிக் தங்கப்பதக்க வீரர்,
வீரத் தாய் குயிலி விருது –
தோழர் மகேசு காஞ்சி மக்கள் மன்றம்,
சிறந்த சமூக விழிப்புணர்வுக்கான புத்தக விருது –
மௌனத்தின் சாட்சியங்கள் – தோழர்.சம்சூதின் ஹீரா,
மதுரைவீரன் வரலாறு – தோழர். இராயப்பன்
சமூகநீதிக்கான இசைக் கலைஞர் விருது –
பறை இசைக் கலைஞர் தோழர்.சக்தி, நிமிர்வு கலைக்குழு
ஆகியோருக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

ஆதித்தமிழர் பேரவையின் நிறுவனர் தோழர் அதியமான், திராவிடர் கழக வடசென்னை மாவட்டப் பொறுப்பாளர் வழக்கறிஞர் தோழர் குமாரதேவன், பெரியார் திராவிடர் கழக ஒருங்கிணைப்பாளர் தோழர் கா.சு.நாகராசு ஆகியோர் விருதுகளை வழங்கிச் சிறப்பித்தனர். நவம்பர் 7 ஆம் நாள் நடைபெற்ற இவ்விழவை சமூகநீதிக் கட்சியின் நிறுவனர் வழக்கறிஞர் தோழர் பன்னீர்செல்வம், தலைவர் வெள்ளமடை நாகராசு, பொதுச்செயலாளர் சத்தி இராஜேந்திரன், தலைமை நிலையச் செயலாளர் ரோசன், கோவை மாவட்டப் பொறுப்பாளர் ஃபெரோஸ் உள்ளிட்டோர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.



இந்துத்துவ - பார்ப்பன - பன்னாட்டுக் கூட்டுக்கொள்ளை

# கருப்புப்பணம்:

அதி அசுரன்

2014 ஆம் ஆண்டு நடந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்தில், நரேந்திர மோடி அவர்கள், “வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் 80 லட்சம் கோடி கருப்புப் பணத்தை மீட்ப்போம். அதன் மூலம் ஒவ்வொரு இந்தியருக்கும் 15 லட்ச ரூபாய் கொடுக்க முடியும்” என்று கூறியிருந்தார்.

தேர்தலில் வென்று, 2014 மே மாதத்தில் பிரதமராகப் பொறுப்பேற்றார். 2015 மே 26 ல், THE BLACK MONEY (UNDISCLOSED FOREIGN INCOME AND ASSETS) AND IMPOSITION OF TAX ACT, 2015 என்ற சட்டத்தைக் கொண்டு வந்தார்.

2015 செப்டம்பர் வரை அச்சட்டத்தின் கீழ், 638 இந்தியர்களிடமிருந்து 6500 கோடி ரூபாய் மீட்கப்பட்டுள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார். அதில் 45 % வரிகள் போக சுமார் 3700 கோடி ரூபாய் இந்தியாவுக்கு வெள்ளைப்பணமாக மீட்கப்பட்டதாக நிதி அமைச்சர் அருண் ஜேட்லி அறிவித்தார்.(1)

கருப்புப்பண மீட்புப் பிரச்சனையில் பா.ஜ.க வும், மோடி அரசும் மக்களுக்கு எண்ணற்ற தவறான தகவல்களைக் கூறியுள்ளன. பல ஏமாற்று நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றன.

1. வெளிநாடுகளில் 80 இலட்சம் கோடி ரூபாய் அளவுக்குக் கருப்புப்பணம் இருப்பதாகச் சொன்னதே பெரும் தவறு. அந்த அளவுக்கு இருக்க வாய்ப்பே இல்லை. அதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்கிறார் தமிழ்நாட்டைச் சேர்ந்த பொருளாதார வல்லுனர் அருண்குமார் தவே. கடந்த 20 ஆண்டு களாக, வெளிநாடுகளில் இருந்த கருப்புப்பணத்தின் பெரும்பகுதி பல்வேறு வழிகளில் இந்தியாவுக்குத் திரும்ப வந்துவிட்டது என்றும் கூறுகிறார்.(2)

பல்வேறு விதங்களில் இந்தியாவுக்கு வந்துவிட்ட, கருப்புப்பணத்தை இனிமேல் மீட்போம் என்று மோடி அறிவித்தது மிகப்பெரும் மோசடி.

2. இந்தியா முழுவதும் 8.11.2016 இரவு 12 க்கு மணிக்கு மேல், 500, 1000 ரூபாய் நோட்டுக்கள் செல்லாது. புதிதாக 500, 2000 ரூபாய் நோட்டுக்களை அறிமுகப்படுத்தப் போகிறோம் என அறிவித்தார். கருப்புப்பணத்துக்கு எதிரான துல்லிய நடிவடிக்கை இது என பா.ஜ.க. வும், மோடி ஆதரவுப் பிரபலங்களும் அறிவிப்புகளை வெளியிட்டு வருகின்றனர். இது அடுத்த மோசடி. இரண்டையும் சற்று விளக்கமாகப் பார்ப்போம்.

## இரட்டை வரித்தவிர்ப்பு ஒப்பந்தம் –
**Double Taxation Avoidance Agreement – DTAA**

இந்தியாவில் உலக மயமாக்கல் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட்ட 1991 க்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே, 1965 லிருந்தே பல நாடுகளுடன் இந்தியா இரட்டை வரித் தவிர்ப்பு என்ற (*Double Taxation Avoidance Agreement – DTAA*) ஒப்பந்தத்தைச் செய்து வருகிறது. 1965 ல் ஆஸ்ட்ரியா வுடன் *Agreement between the Republic of India and the Republic of Austria for the avoidance of Double Taxation with respect to taxes on income - Notification No. G.S.R.588,dtd 5.4.1965* என்ற ஒப்பந்தம் போடப்பட்டது.(3)

இதைத் தொடர்ந்து 90 களுக்கு முன்பே எகிப்து, மலேசியா, மொரீஷியஸ், அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் இந்த இரட்டை வரித்தவிர்ப்பு ஒப்பந்தங்கள் போடப்பட்டன. இன்றைய நிலையில் 85 நாடுகளுடன் இந்த *Double Taxation Avoidance Agreement – DTAA* நடைமுறையில் உள்ளது.

இந்த ஒப்பந்தத்தின்படி ஒரு வெளிநாட்டில் உள்ள ஒரு பன்னாட்டு நிறுவனம் அல்லது ஒரு போலி நிறுவனம் மொரீஷியஸில் தனது தொழிலைப் பதிவு செய்து கொண்டு, அந்த நாட்டில் ஒரு அலுவலகத்தையும், வங்கிக்கணக்கையும் மட்டும் வைத்துக்கொண்டு, இந்தியாவில் தொழிலை நடத்தலாம். இந்தியாவில் அந்தத் தொழிலுக்குரிய எந்த வரியையும் செலுத்தத் தேவையில்லை.

இந்த முறையைச் சரியாகச் செயல்படுத்திக் கருப்புப்பணத்தை மீண்டும் இந்தியாவிலேயே முதலீடு செய்வதற்கு வசதியாக - பனாமா நாட்டில் மொசாக் பொன்சேகா (*MOSSAC FONSECA*) என்ற நிறுவனம் இயங்குகிறது. கடந்த 04.04.2016 ல் *Panama Leaks* என்ற பெயரில் இந்த *MOSSAC FONSECA* நிறுவனத்தின் நாடுகடந்த ஊழல்கள் வெளிவந்தன. *International Consortium of Investigative Journalists* என்ற புலனாய்வுப் பத்திரிகையாளர்கள் அமைப்பு இந்த கருப்புப்பண ஊழலை வெளிக்கொண்டு வந்தது.(4)

*MOSSAC FONSECA* வில் இந்தியாவிற்குச் சொந்தமான கருப்புப்பணத்தைச் செலுத்தி விட்டால், அந்நிறுவனம் *Double Taxation Avoidance Agreement – DTAA* ஒப்பந்தம் உள்ள 85 நாடுகளில் ஏதாவது ஒரு நாட்டில் ஒரு போலி நிறுவனத்தைப் பதிவு செய்து, அதன் வழியாக இந்தியாவுக் குள்ளேயே சட்ட ரீதியாகவே கருப்புப்பணத்தை முதலீடு செய்யும். கருப்புப்பணம் வெள்ளையாகி விடும். 1977 லிருந்து 2015 வரை இந்த நிறுவனம் கருப்புப்பண மோசடிகளை நடத்திவருகிறது.

*Double Taxation Avoidance Agreement – DTAA* மற்றும் *MOSSAC FONSECA* மூலமாக பல இலட்சம் கோடி கருப்புப்பணம் சட்டப்பாதுகாப்புடன் வெள்ளைப் பணமாக்கப்பட்டு, பதுக்கல்காரர் களிடமே மீண்டும் சென்று, பல ஆண்டுகள் கடந்துவிட்டன.

## பங்கேற்புப் பத்திரம் –
**Participatory Notes & Foreign institutional investors (FII)**

செபி என்ற *Securities and Exchange Board of India – SEBI* இந்திய அரசு அமைப்பு, இந்தியாவில் பங்குச்சந்தையை நிர்வகித்து வருகிறது. இந் நிறுவனம் 1992 ஆம் ஆண்டில், இந்தியப் பங்குச் சந்தைகளில் அந்நியர் ஒருவர் நேரடியாக முதலீடு செய்து, இலாபம் சம்பாதிக்கலாம் என்ற விதியைக் கொண்டு வந்தது (*Foreign institutional investors (FII)*. இந்தப் பங்கேற்புப் பத்திரம் மற்றும் *FII* மூலமாக முதலீடு செய்பவர்கள் தங்கள் பெயரையோ, தங்கள் நிறுவனத்தின் பெயரையோ, தங்கள் உண்மையான முகவரியையோ வெளியிட வேண்டிய கட்டாயம் இல்லை. செபி அது குறித்துக் கேள்வி கேட்காது என்று அந்த விதி கூறுகிறது. இதன் வழியாக 1992 லிருந்தே கருப்புப்பணம் இந்தியப் பங்குச்சந்தையில் முதலீடு செய்யப்பட்டு, கருப்புப்பணம் வெள்ளை யாக்கப்படுகிறது. இந்தியாவிற்கு வந்துள்ள நேரடி அந்நிய முதலீட்டில் 48% இந்தப் பங்கேற்புப் பத்திரம் மற்றும் *FII* வழியிலேயே இயங்குகிறது.

இப்படிப் பல்வேறு வழிகளில் கருப்புப் பணத்தை வெள்ளைப்பணமாக மாற்றிக்கொள்ளும் வசதியைக் கடந்த 1965 லிருந்தே செயல்படுத்தி வருகின்றன இந்திய அரசுகள். 1991 க்குப் பிறகு இவை அதிகமாகி, மோடி ஆட்சியில் உச்சத்தை அடைந்துள்ளன. உண்மை இவ்வாறு இருக்க, 80 இலட்சம் கோடி கருப்புப்பணம் வெளிநாட்டில் இருப்பதாகவும், அதில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 15 இலட்சம் தரப்போவதாகவும் அறிவித்தது மிகப் பெரிய ஏமாற்று வேலை.

**கருப்புப்பணப் பார்ப்பனரும், கருப்புப்பண மீட்பர்களும்**

2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், இந்திய மருத்துவக் கழகத்தின் (MCI) தலைவராக இருந்த, குஜராத்தைச் சேர்ந்த பார்ப்பனர் கேதான் தேசாய் ஊழல் வழக்கில் சி.பி.அய். யால் கைது செய்யப் பட்டார். அவரிடமிருந்து 1800 கோடி ரூபாய் கருப்புப் பணமும், 1500 கிலோ கருப்புத் தங்கமும் கைப்பற்றப்பட்டன. மேலும் சுமார் 2500 கோடி ரூபாய் அளவுக்கு அவரிடம் கருப்புப்பணம் இருக்கும் என்றும் சி.பி.அய். கூறியது. அந்த வழக்கில் கைது செய்யப்பட்டு சிறை சென்றார். பதவியும் பறிக்கப்பட்டது.(5)

ஜாமீனில் விடுதலை ஆன அந்தப் பார்ப்பனக் கருப்புப்பண ஊழல்வாதி 2013 ஆம் ஆண்டே குஜராத் பல்கலைக்கழகத்தின் செனட் உறுப் பினராகத் தேர்வு பெற்றார். குஜராத் பல்கலைக்கழக செனட்டில் புதிதாகப் பல உறுப்பினர்களைச் சேர்த்து, புதிய உறுப்பினர்களின் வாக்கு வழியாக செனட்டுக்குத் தேர்வு செய்யப்பட்டார். அப்போது குஜராத்தின் முதல்அமைச்சர் நரேந்திர மோடி ஆவார்.(6)

2014 ஆம் ஆண்டு நவம்பரில் கேதான் தேசாயின் மகள் திருமணம் குஜராத்தில் மிகவும் ஆடம்பரமாக நடத்தப்பட்டது. அந்த விழாவில் சிறப்பு விருந்தினராக, பா.ஜ.க. வின் தேசியத் தலைவர் அமித்ஷா பங்கேற்றார்.

பனாமா லீக்ஸில் வெளியான கருப்புப்பண பணக்காரர்கள் பட்டியலில் அடையாளம் காணப் பட்டவர்கள் அனைவரையும் தண்டித்தே தீருவோம் என இப்போது முழங்கும் பா.ஜ.க. அரசின் நிதிஅமைச்சரான அருண் ஜேட்லி, 2015 ல் தனது மகளின் திருமணத்தில் சிறப்பு விருந்தினராக, இந்தக் கருப்புப்பண முதலையை அழைத்துச் சிறப்பித்தார். (7)

இப்போது 2016 ஆம் ஆண்டு அக்டோபரில் அகில உலக மருத்துவக் கழகத்திற்குத் (WMC) தலைவராக பா.ஜ.க. ஆதரவு கருப்புப்பணக்காரர் கேதான் தேசாய் தேர்வு செய்யப்பட்டுள்ளார். (8) இவர்கள் தான் கருப்புப் பணத்தை ஒழிக்கப் போகிறார்களாம்.

**500 க்குத் தடை என்ற நாடகம்**

பனாமா லீக்ஸ் என்ற பெயரில் 04.04.2016 ல் ICIJ அமைப்பு வெளியிடப்பட்ட பெரும் கருப்புப் பணக்காரர்கள் பட்டியலில் மோடியின் நெருங்கிய நண்பர்களான குஜராத்தின் அதானி குடும்பம் இடம் பெற்றுள்ளது. கௌதம் அதானியின் அண்ணன் வினோத் அதானி, இந்தியாபல்ஸ் என்ற ரியல் எஸ்டேட் நிறுவனத்தின் சமீர் கேலாட், டி.எல்.எஃப். நிறுவன உரிமையாளர் குஷால் பால் சிங், இந்தி நடிகர் அமிதாப்பச்சன், ஐஸ்வர்யாராய் உள்பட பல இந்தியப் பெருங்கருப்புப் பணக்காரர்கள் பனாமா லீக்ஸில் அம்பலமாகியுள்ளனர். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியவர் மோடி. ஆனால், அவற்றை நோக்கி நமது கவனம் திரும்பக்கூடாது அதேசமயம் தனக்குக் கருப்புப்பண மீட்பர் என்ற பிம்பமும் தேவை என்று யோசித்த மோடி அரசு நடத்திய நாடகம் தான் 500, 1000 செல்லாது என்ற அறிவிப்பு.

**கருப்புப்பணம் என்றால் என்ன?**

அரசின் வருமான வரிக்கணக்கில் வராத பணம் கருப்புப் பணம் எனப்படுகிறது. அரசிற்கும், மக்களுக்கும் பயன்படாத பணத்தையும் கருப்புப் பணம் என்றுதான் சொல்லமுடியும். அதன்படி, இந்தியாவில் கோவில்களில் கணக்கில் வராமல் உள்ள ஆயிரக்கணக்கான டன் தங்கம், வைரம், வைடூரியங்கள், உண்டியல் என்ற பெயரில் வரும் தினசரி வருமானம் என அனைத்துமே கருப்புப் பணம் தான்.

**கோவில் தங்கத்தை நகைச்சந்தைக்குத் திருப்ப வேண்டும்**

இந்திய அரசின் வர்த்தகம் மற்றும் தொழிற்துறையின் கேபினட் அமைச்சர் நிர்மலா சீதாராமன்,

> "கடந்த சில ஆண்டுகளில் தொழிற்துறை மற்றும் வர்த்தகத்தில் பற்றாக்குறை நிலவுவதற்கு தங்க இறங்குமதி 30 % காரணமாக உள்ளது"

என்று தெரிவித்துள்ளார். பா.ஜ.க. அரசாங்கம் மட்டுமல்ல கடந்தமுறை ஆட்சியில் இருந்த அரசும் இதையே கூறியது. காங்கிரஸ் ஆட்சியின் நிதி அமைச்சர் ப.சிதம்பரம் கடந்த 16.07.2013 அன்று ஜெய்ப்பூரில் செய்தியாளர்களிடம்,

> "இந்திய மக்கள் ஓராண்டுக்கு தங்கம் வாங்குவதை நிறுத்தினால் இந்திய ரூபாயின் மதிப்பு உயரும். 3 இலட்சம் கோடி ரூபாய் அன்னியச் செலாவணி கையிருப்பாகக் கிடைக்கும்"

என்று அறிவித்தார். எனவே முதலில் கோவில் களில் வீணாக முடங்கியுள்ள கருப்புத் தங்கத்தை மக்களின் பயன்பாட்டுக்குத் திருப்பவேண்டும். அணி கலன்களுக்காகத் தங்கத்தை இறக்குமதி செய்து இந்திய நாட்டின் பொருளாதாரத்தை வெளி நாட்டுக்குக் கொட்டிக் கொடுப்பதைவிட, கோவில் களில் கொட்டிக் கிடக்கும் தங்கத்தை வெளிக் கொணர்ந்து நகைச்சந்தையில் விற்பனைக்கு விடலாம்.

திருவிதாங்கூர் மன்னர் பரம்பரையின் பராமரிப்பில் இருந்த திருவனந்தபுரம் பத்மநாபசாமி கோவிலில் உச்சநீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட கணக்குத் தணிக்கை அதிகாரி வினோத்ராய் தலைமையிலான குழுவினர் ஆய்வு நடத்திபோது அக்கோவிலில் உள்ள இரகசியப் பெட்டகங்களில் 1 இலட்சம் கோடிக்கும் அதிகமான தங்க, வைர நகைகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

பத்மநாபசாமி கோவில் போன்ற ஒரு கோவிலிலேயே 1 இலட்சம் கோடி ரூபாய்க்கு மேற் பட்ட மதிப்பிலுள்ள தங்க, வைரங்கள் இருக்கு மானால், குருவாயூர் கிருஷ்ணன் ஆலயம், திருப்பதி வெங்கடேசுவரர் கோவில், பழனி முருகன் கோவில், சீரடி சாய்பாபா கோவில், மும்பை சித்திவிநாயகர் கோவில், காஷ்மீர் வைஷ்ணவி தேவி கோவில், அமர்நாத் கோவில், உத்ரகாண்ட் கேதார்நாத் கோவில், மதுரை மீனாட்சி அம்மன் கோவில், சிதம்பரம் நடராஜர் கோவில், திருச்சி ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோவில், காசி விஸ்வநாதர் கோவில், பூரி ஜெகந்நாதர் கோவில், மதுரா கிருஷ்ணன் கோவில் போன்ற பெருங்கோடீசுவரக் கோவில் களில் முடங்கியுள்ள தங்கங்களின் மதிப்பை நம்மால் கணக்குப் போட்டுக்கூடப் பார்க்க முடியாது. கருப்புப்பணத்தை ஒழிக்க நினைப்பவர்கள் கோவில் களில் கைவைத்தால், அந்நியச்செலாவணியும் மிஞ்சும். கருப்புப்பணமும் மீட்கப்படும்.

**தங்க, வைர நகைகள் செல்லாது**

பிரதமர் மோடி கடந்த 06.11.15 ல், "தங்கம்

> தொடர்பான ஆக்கபூர்வமான, புதுமையான திட்டங்களை நாம் தொடங்கி இருக்கிறோம். இது ஒரு மிகப்பெரிய தொடக்கம் ஆகும். இந்தியாவில் 20 ஆயிரம் டன் தங்கம் எந்தப் பயன்பாடும் இன்றி முடங்கிக் கிடக்கிறது.

அதனால்தான் இந்தியா ஏழை நாடாக இருக்கிறது. சில சரியான நடவடிக்கைகளை எடுத்தால் இந்தியா ஏழை நாடாக இருக்க வேண்டிய நிலைமாறும்.'' என்று உரை யாற்றினார்.

தங்க நகைகளைத் திருமணங்களின்போது பெண்ணுக்கு வரதட்சணையாக அளிப்பது என்பது இந்துப் பார்ப்பனப் பண்பாட்டின் அடையாளம். சமுதாயத்தின் அடித்தட்டில், கடைசி நிலையில் வாழும் குடும்பமாக இருந்தாலும், திருமணத்தின் போது பெண்ணுக்கு சுமாராக 10 பவுன் ( 80 கிராம்) தங்கம் வரதட்சணையாகக் கொடுப்பது வழக்கமாக உள்ளது. நடுத்தர மக்கள் சராசரியாக 200 கிராமிலிருந்து 8 கிலோ வரை நகைகளைப் போடு கின்றனர்.

தலைமுறை, தலைமுறையாக இந்தத் தங்கம் கொள்ளுப்பாட்டி, பாட்டி, அம்மா, மகள், பேத்தி என பல தலைமுறைகளைக் கடந்து சென்று கொண்டிருக்கிறது. இவை பெரும்பாலும் கணக்கில் வராத கருப்புத்தங்கங்களே ஆகும். கருப்புப் பணத்தை ஒழிக்க வேண்டுமானால், முதலில், இந்தத் தங்க, வைர நகைகள் செல்லாது. அரசிடமும் ரிசர்வ் வங்கியிடமும் மட்டுமே தங்கம் இருக்க வேண்டும் என அறிவிக்க வேண்டும்.

தங்கத்தை அரசுக்குத் திருப்பிக் கொடுக்கும் பெண்ணுக்கு உயர்கல்வி வரை அரசு பொறுப் பேற்கும் என அறிவிக்க வேண்டும். தங்க, வைர நகைகள் அணிவதை கடும் குற்றமாக அறிவிக்க வேண்டும். அப்படி அறிவித்தால், கோவில் தங்கங்களை நகைச்சந்தைக்குப் பதிலாக, நேரடியாக ரிசர்வ் வங்கிக்கே அனுப்பிவிடலாம். மக்களிடம் நகைகளாக நடமாடும் சுமார் 20 ஆயிரம் டன் தங்கமும் அரசிடம் சேரும்.

கருப்புப்பணம் மிக எளிமையாக வெள்ளை யாக மாற்றப்படுவதற்கு *Double Taxation Avoidance Agreement – DTAA, Participatory Notes & Foreign institutional investors (FII)*, போன்ற வாய்ப்புகளை உருவாக்கி வைத்துவிட்டது இந்திய அரசு. *MOSSAC FONSECA* போன்ற நிறுவனங்களின் கருப்புப்பண ஊழல் பட்டியலில் இடம்பெற்றவர்கள் மீது மோடி அரசு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை. ஏற்கனவே கேதான் தேசாய் போன்ற கருப்புப்பணப் பதுக்கல்காரர்களைக் காப்பாற்றி யவர்கள்தான் பிரதமர் மோடியும், பா.ஜ.க தலைவர் அமித்ஷாவும்.

**வர்ணாசிரமம் ஒழிய வேண்டும்**

“இந்த நாட்டுச் செல்வம் வெளியில் போகின்ற தென்பதை அடியோடு நிறுத்தப்பட்டுப் போவதுடன் வெளிநாட்டுச் செல்வங்கள் எல்லாம் நமது நாட்டுக்கே வருவதாக வைத்துக் கொண்டாலும், இன்றைய வருணாச்சிரம முறையும், மத சம்பந்தமான கடவுள் சடங்குகளின் முறையும் இப்படியே இருக்கும் வரை மேற்கண்ட, அதாவது பாடுபடாமல் சோம்பேறியாய் வாழ உரிமை யுள்ளவனும், பணக்காரனாக உரிமையுள்ளவனும், உத்தியோகம் பார்க்க உரிமையுள்ளவனும், பொதுஜனப் பிரதிநிதியாக உரிமையுள்ளவனும் தான் இப்போதையை விட இன்னும் அதிகமாகக் கொள்ளையடிக்கவும், போக போக்கியங்கள் அனுபவிக்கவும், கஷ்டப்படுபவர்களை பட்டினி கிடப்பவர்களை இன்னும் அதிகமாய்க் கொடுமை செய்யவும் அருகதை உடையவர்களாவார்களே தவிர, ஒரு நாளும் இந்தியாவிலின்று பொருளாதாரத்தால் கஷ்டப் படும் ஏழைமக்கள், பட்டினி கிடப்பவர்கள் என்கின்றவர் கள் யாதொரு விதத்திலும் சீர்பட முடியவே முடியா தென்பதை உணருங்கள்.''(8)

– தோழர் பெரியார்,

**இந்தியாவின் பெரும் தொழில் அதிபர்கள் - இந்து மதத்தை அடிப்படையாகக் கொண்ட பாபா ராம்தேவ், ரவிசங்கர் போன்ற சுதேசித் தொழில் அதிபர்கள் - பார்ப்பனக் கருப்புப்பணத் திமிங்கிலங்கள் - பன்னாட்டு வணிக நிறுவனங்கள் - பன்னாட்டு நிறுவனங்களின் பார்ப்பன நிர்வாகிகள் - இந்துமத அரசியல்வாதிகள் என்ற கூட்டுக் கொள்ளை அணி இந்தியாவில் கருப்புப் பணத்தை ஒழிக்காது. இந்தியப் பொருளாதாரத்தைச் சுரண்டி, அவற்றைக் காவிப் பணமாக மாற்றி, தமது ஆதிக்கங்களைத் தொடர எதையும் செய்யும்.**

**சான்றுகள்:**


1 .02.10.2015 Indian Express
2. BBC 05.10.15
3.http://www.incometaxindia.gov.in/DTAA/Old%20Treaties/108690000000000129.htm
4. https://panamapapers.icij.org
5. http://m.deccanherald.com 9.11.2016
6. Times of india 18.02.2013
7. PBT INDIA on 14.12. 2015 / http://www.pbtindia.com/archives/2775
8. News18, Dinamani 22.10.2016
9. குடி அரசு – சொற்பொழிவு – 05.07.1931








பிரபாகரன் அழகர்சாமி

தாய்மதம் திரும்பிய டாக்டர் சட்வா சாக்யா அவர்களுடன் ஒரு உரையாடல்

# “இந்துச் சமூகத்தை சீர்திருத்துவது எங்கள் கடமையும் அல்ல; நோக்கமும் அல்ல!”

**1956 ம் ஆண்டு அக்டோபர் 14 ம் தேதி, மகாராஷ்டிர மாநிலத்தின் நாக்பூரில், இந்து மதத்தில் இருந்து வெளியேறி பௌத்த மதத்திற்கு மாறினார் தோழர் அம்பேத்கர். அவருடன் சேர்ந்து அந்த நிகழ்வில் 6 லட்சம் மக்கள் பௌத்தத்தைத் தழுவினர். அந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு நடந்து 60 ஆண்டுகள் ஆகிறது. இதை நினைவுகூறும் வகையில் கடந்த அக்டோபர் 16 ம் தேதி சென்னையில் 47 மருத்துவர்கள் தங்களுடைய பூர்வீக மதமான பௌத்த மதத்துக்குத் திரும்பியிருக்கின்றனர்.**

பேராசிரியர் தோழர் டாக்டர் சத்யபால், தலித்முரசு ஆசிரியர் தோழர் புனிதப்பாண்டியன், மருத்துவர் தோழர் தாயப்பன், மருத்துவர் புதுக்கோட்டை ஜெயராமன், மருத்துவர் காமராஜ் ஆகியோர் நிகழ்வில் பங்கேற்றனர். நிகழ்வில் "நான் ஓர் இந்துவாகச் சாக மாட்டேன்" என்ற தோழர் அம்பேத்கர் அவர்களின் நூல் வெளியிடப்பட்டது. தலித்முரசு ஏடு, தோழர்அம்பேத்கரின் மதமாற்ற உரைகள் அனைத்தையும் தொகுத்து இந்நூலை வெளியிட்டுள்ளது.

(160 பக்கங்கள் கொண்ட இந்நூலின் விலை ரூ150. சென்னையில் தலித்முரசு அலுவலகத்தில் நூல் கிடைக்கும். முகவரி: தலித் முரசு, S5, மகாலட்சுமி அப்பார்ட்மெண்ட்ஸ், 26/13 குளக்கரைச் சாலை, நுங்கம் பாக்கம், சென்னை. 600034.)

இந்து மதத்திற்கு எதிராக நடக்கும் எந்த ஒரு நிகழ்வும் காட்டாறு குழுவுக்கு ஒரு பெரும் விழாதான். அந்த அடிப்படையில் மருத்துவர்களின் மதமாற்ற நிகழ்வை வரவேற்கிறோம். வாழ்த்துகிறோம். மகிழ்ச்சியடைகிறோம்.

பௌத்த மதத்திற்குத் திரும்பிய இந்த நிகழ்வு குறித்தும், தோழர் அம்பேத்கர் பௌத்த மதத்தைத் தேர்ந்தெடுத்ததன் காரணங்கள் குறித்தும், இன்றைக்கு மதமாற்றத்திற்கான தேவைகள் குறித்தும் நம்முடைய கேள்விகளை, இந்த நிகழ்வை ஒருங்கிணைத்த மக்கள் மருத்துவர் அணியினைச் சேர்ந்த, அரசு மருத்துவமனையில் பணிபுரியும் மயக்கவியல் நிபுணர் **டாக்டர் சட்வா சாக்யா என்ற ஜானகிராமன்** அவர்களிடம் உரையாடினோம்.

இந்த உரையாடலில் டாக்டர் சட்வா சாக்யா அவர்கள் கூறியுள்ள கருத்துக்களில் சிலவற்றில் நாம் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருக்கிறோம். இந்த உரையாடலின் தொடர்ச்சியாக அவை பற்றிய கூடுதல் தகவல்களை டாக்டர் சட்வா சாக்யா அவர்களிடமும், மதமாற்றத்தில் அக்கறையுள்ள தோழர்களிடமும் கேட்டுப் பெற்று வெளியிடுவோம். இந்த உரையாடலை ஒரு ஆக்கப்பூர்வமான விவாதமாக எடுத்துச்செல்ல விரும்புகிறோம். எனவே இந்த உரையாடலை வரவேற்கும் கட்டுரைகளையும், விமர்சனம் செய்யும் கட்டுரைகளையும் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

**– காட்டாறு**

**‘தாய் மதம் திரும்புவோம்’ என்ற பெயரில் இந்து அமைப்புகள், இஸ்லாமியர்களாகவும், கிறிஸ்தவர்களாகவும் வாழும் மக்களை இந்து மதத்திற்கு மதம் மாற்றி வருகின்றன. இப்போது இந்துக்களாக உள்ளவர்களுக்கு, ‘தாய்மதம்’ எது? சற்று விளக்கமாகக் கூறங்கள்.**

‘இந்து’ என்கிற வார்த்தையே முகமதியர்கள் வந்து நமக்குக் கொடுத்த பெயர்தான் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். சிந்து நதிக்கரைக்கு இந்தப் பக்கம் வாழ்ந்தவர்களைப் பெயரளவில் வேறுபடுத்திக்காட்ட இஸ்லாமிய மன்னர்கள் கொடுத்த பெயர்தான் இந்து என்பது. அதற்கு முன்பு இந்துமதம் என்ற ஒன்று கிடையவே கிடையாது. இங்கு மக்கள் ஜாதிரீதியாகப் பிரிந்திருந்தனர். அது சதுர்வர்ண முறை. அதுதான் Social Civil code ஆக, அதாவது சமூகச் சட்டமாக இருந்தது. இதில் முக்கியமாக நாம் கவனிக்கவேண்டியது என்னவென்றால், இப்போது இந்தியாவில் பட்டியல் சாதியினர் என்கிற பெயரில் அறியப்படுகிற மக்கள் யார் என்கிற கேள்விதான் அது. இந்த ஒரு கேள்வியை நாம் திரும்பத் திரும்ப ஆராய்ந்தாலே, இந்த ஒட்டுமொத்த பிரச்சனைக்குமான தீர்வுகளும் கிடைத்துவிடும்.

இது மிகவும் நியாயமான தர்க்கப்பூர்வமான கேள்வி. இந்தியா முழுக்க ஒவ்வொரு கிராமத்திலும்,

எப்படி ஒரு குறிப்பிட்ட பிரிவினர் மட்டும் ஊரைவிட்டு ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளனர். இது எப்படி Uniform ஆக நடந்தது என்கிற கேள்வி மிக மிக முக்கியமான கேள்வியாக இருக்கிறது.

இப்போது ஒரு ஊரில் நூறுபேர் இருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். ஒருநாள் திடீரென அதில் பத்துப்பேரை அழைத்து, இனி நீங்களெல்லாம் ஊரைவிட்டு வெளியேதான் வாழவேண்டும் என்றும், மலம் அள்ளுதல் போன்ற வேலைகளைத்தான் செய்யவேண்டும் இனி, என்று சொன்னால், அதை அந்தப் பத்துப்பேர் ஒப்புக்கொண்டிருக்கப் போகிறார்களா என்றால், ஒப்புக்கொண்டிருக்கமாட்டார்கள்.

இன்னொன்று, அந்தப் பத்துப்பேரை அவர்கள் எப்படி அடையாளம் கண்டு, இந்தந்த பத்துப்பேர்தான் என்று முடிவுசெய்திருப்பார்கள்? இந்தக் கேள்விகளெல்லாம் மிக முக்கியமான கேள்விகளாக இருக்கின்றன. இந்தியா முழுவதும், ஒவ்வொரு கிராமத்திலும், எப்படி ஒரு குறிப்பிட்ட பிரிவினர் ஊருக்கு வெளியே உள்ளனர் என்கிற கேள்வி மிக முக்கியமான பெரிதும் பேசப்படாத கேள்வியாக உள்ளது. இதைப்பற்றி யாருமே சமூகத்தில் பேசுவது கிடையாது. இதைச் சிந்தித்த ஒரே ஆள் டாக்டர் அம்பேத்கர் மட்டும்தான்.

டாக்டர் அம்பேத்கர் இந்தக் கேள்விகளை ஆராய்ந்து இதற்கே மூன்று நான்கு புத்தகங்களை எழுதியிருக்கிறார். முதல் கேள்வியே நீங்கள் யார்? என்பதுதான். அவர் பல ஆய்வுகளைச் செய்து, பல அறிஞர்களின் நூல்களைப் படித்து, சீனா உள்ளிட்ட பல நாடுகளுக்குப் பயணம் செய்து தன் ஆய்வு முடிவுகளை வெளியிட்டிருக்கிறார். இதுவரை மறுப்புகள் எதுவும் இல்லாத அந்த ஆய்வுகள் என்ன சொல்கிறது என்றால், ஆரியர்கள் இந்தியாவில் நிலைபெற்றபிறகு, இங்குச் சதுர்வர்ண முறையை Civil Code ஆக, அதாவது சமூகச் சட்டமாக ஆக்குகிறார்கள்.

அதை எப்படிச் செய்கிறார்கள் என்றால், இங்குள்ள மன்னர்களை முதலில் ஒப்புக்கொள்ளவைப்பதன் மூலம் செய்கிறார்கள். தங்களிடம் உள்ள வேதம், கடவுள் எங்களிடம் தந்தது. இதைப் படிப்பதற்கான உரிமை எங்களிடம் மட்டும்தான் உள்ளது. நீங்கள் யாரும் படிக்கக் கூடாது. இந்த வேதத்தில் என்ன உள்ள தென்றால், நாங்கள் எல்லாம் பிராமணர்கள், மற்றவர்களைச் சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் என்று பிரிக்கவேண்டும். இந்த முறையின்படி, இந்தந்த பிரிவினர்களெல்லாம், இந்தந்த வேலைகளைதான் செய்யவேண்டும். நாங்கள் உயர்வானவர்கள் மற்றவர்கள் தாழ்வானவர்கள் என்று சொல்லி இந்தச் சமூகச் சட்டத்தைக் கொண்டுவருகிறார்கள். மக்கள் இந்த நான்கு வர்ணங்களின் அடிப்படையில் பிரிக்கப்படுகிறார்கள்.

கி.மு. 5 ஆம் நூற்றாண்டில் புத்தர் பிறக்கிறார். புத்தர் மன்னர் பரம்பரையில் பிறந்தவர். அவர் நடைமுறையில் இருக்கும் சதுர்வர்ண முறைக்கு எதிராகப் பிரச்சாரம் செய்கிறார். மனிதர்கள் அனைவரும் சமம், இங்குச் சூத்திரன் - பார்ப்பனன் என்று எதுவும் கிடையாது, எல்லோரும் சமமானவர்கள்தான். ஆண் - பெண் வேறுபாடு எதுவும் கிடையாது. பெண்கள் மீது தீட்டு என்று எதுவும் கிடையாது, ஆணும் பெண்ணும் சமம்தான் என்கிற கருத்துகளைப் பிரச்சாரம் செய்திருக்கிறார். வெறுப்புக் கூடாது அன்புதான் வேண்டும் என்று பிரச்சாரம் செய்கிறார். எல்லாமே பார்ப்பன சமூகச் சட்டத்திற்கு எதிரான கருத்துகளாக இருக்கின்றன.

மக்கள் இந்தக் கருத்துகளால் கவரப்பட்டு, புத்தரைப் பின்பற்ற தொடங்குகிறார்கள். அவர் அங்கங்கு புத்த சங்கங்களை ஆரம்பிக்கிறார். அதன்மூலம் புத்த பிக்குகளை உருவாக்கி இந்தக் கருத்துகளைப் பரப்புகிறார். மவுரியப் பேரரசில் தோன்றிய அசோகர் புத்த மதத்தை ஏற்கிறார். அவர் புத்த மதத்தை ஏற்றுக்கொண்டபிறகு, புத்தமதம் சமூகச் சட்டமாக மாறுகிறது. பார்ப்பன சமூகச் சட்டமான 'சதுர்வர்ணம்' என்பது நீக்கப்பட்டு, 'சமத்துவம்' என்பது சமூகச் சட்டம் ஆகிறது.

பார்ப்பனர்களுடைய உயர்வுநிலை தகர்கிறது. மவுரியப் பேரரசு காலத்தில் புத்தமதம் வேகமாகப் பரவுகிறது. புத்தபிக்குகள் பல நாடுகளுக்கும் சென்று மதத்தைப் பரப்புகிறார்கள். அம்பேத்கர் ஒரேவரியில் என்னசொல்கிறார் என்றால், இந்தியாவின் பொற்காலம் என்றால் அது மவுரியப்பேரரசின் காலம்தான் என்கிறார். கி.மு 5 ஆம் நூற்றாண்டில் இருந்து கி.பி 2ஆம் நூற்றாண்டு வரை, கிட்டத்தட்ட 700 ஆண்டுகள் புத்தமதம் சட்டமாகவும், புத்தக் கலாச்சாரமும் இங்கிருந்திருக்கிறது. கி.பி 2 ஆம் நூற்றாண்டில் ஒரு சதிச்செயல் நடக்கிறது.

மவுரியப் பேரரசில், புஷ்யமித்திர சுங்கன் என்கிற பார்ப்பனன் படைத்தளபதியாக இருக்கிறான். அவன் மன்னரைக் கொன்றுவிட்டு ஆட்சியைபிடித்து, மீண்டும் சதுர்வர்ணத்தைச் சமூகச்சட்டமாக அறிவிக்கிறான். அரசர் என்ன மதமோ, அந்த மதம்தான் மக்களிடமும் திணிக்கப்படும் என்பதுதான் உலகவரலாறு. அதே வரலாறுதான் இங்கேயும். புத்த பிக்குகளைக் கொன்று, புத்தர் சிலைகளைச் சிதைத்து உருமாற்றுவது, புத்த விகார்களைப் பார்ப்பனக் கோயில்களாக மாற்றுவது என்று புத்த மதத்தை வேட்டையாடுகிறார்கள். அப்போது புத்த மதத்தைப் பின் பற்றிய மக்களுக்கு ஒரு சிக்கல் ஏற்படுகிறது. நிறையப் பேர் சதுர்வர்ணத்தை ஏற்றுக் கொண்டார்கள், அவர்கள்தான் தற்போது உள்ள இந்துக்கள் ஆவார்கள்.

சதுர்வர்ணத்தை ஏற்கமறுத்த, பார்ப்பன உயர்வுநிலையை ஏற்க மறுத்த, பசுமாடு புனிதம் என்பதை ஏற்க மறுத்த, சடங்கு யாகம் போன்ற மூடநம்பிக்கைகளை ஏற்க மறுத்த, உறுதியான பவுத்தர்களும் இருந்தனர். சுங்கனுடைய அரசு அவர்களைப் பெருவாரியான மக்களிடம் இருந்து பிரித்து ஊரைவிட்டு வெளியேற்றுகிறது. பெருவாரியான மக்கள் செய்கின்ற வேலைகளைச் செய்ய அனுமதிக்காமல், இழிவான வேலைகளைச் செய்ய

நிர்பந்திக்கப்படுகிறார்கள். அவர்கள் மீது தீண்டாமை கற்பிக்கப்படுகிறது. இதுதான் தற்போது இந்துக்களாக இருப்பவர்களுடைய சுருக்கமான வரலாறு.

**தாங்கள் புத்தமதத்தைத் தழுவியதற்குக் காரணம் புத்தம் நமது தாய் மதம் என்பதற்காக மட்டுமா? எதற்காக இந்து மதத்தைவிட்டு வெளியேற வேண்டும்?**

இந்த முடிவை எடுப்பதற்கு ஒன்றுக்கும் மேற்பட்ட காரணங்கள் உண்டு. முதலில் நாங்கள் பாபாசாகேப் அம்பேத்கரின் சீடர்கள்.அப்படித் தான் எங்களை நாங்கள் அடையாளப் படுத்திக் கொள்ள விரும்புகிறோம். டாக்டர் அம்பேத்கர் புத்த மதத்தைத் தழுவினார். அதனால் நாங்கள் கண்மூடித் தனமாகக்கூடப் புத்தமதத்தைத் தழுவினோம் என்றுகூட இதை வைத்துக் கொள்ளலாம். அது ஒரு பக்கம் இருக்கட்டும். இதற்கு என்ன காரணம் என்று பின்னால் சொல்கிறேன்.

இப்போது தீண்டாமை என்பது எங்கள் மேல் இருக்கிறது. அது எதனால் இருக்கிறது என்பதற்கு நான் ஏற்கனவே சொன்ன வரலாற்றுப் பின்னணிதான் காரணமாக இருக்கிறது. எதனால் நாங்கள் தீண்டத்தகாதவரானோம், எதனால் தீண்டாமையை இந்துக்கள் எங்கள் மீது கடைப் பிடிக்கிறார்கள் என்றால், நாங்கள் அவர்களுடைய கலாசாரத்தையே மறுத்து, அவர்களுடைய சித்தாந் தத்தையே நாங்கள் ஒதுக்கியதால்தான் அவர்கள் எங்களை ஒதுக்கிவைத்து நாங்கள் தீண்டத்தகாதவர் என்றானோம்.

பிறகு சுங்கன் காலத்திற்குப் பிறகு நான்கு வர்ணங்கள் என்பது ஐந்து வர்ணம் ஆகிறது. எப்படி யென்றால், இந்த மாதிரி ஊரைவிட்டு ஒதுக்கி வைத்தவர்களையெல்லாம் அவர்ணா, அதாவது வர்ணங்களுக்கு அப்பாற்பட்டவர்கள் என்று சொல்லப்பட்டவர்களையும் ஒரு வர்ணமாக்கினார் கள்.

இதில் இந்த இடைநிலைச் சாதியினருக்கு ஒரு வகை *Psychological Cushion Effect* ஒன்றை அதாவது உளவியல் மகிழ்ச்சியை இந்தத் தீண்டத்தகாதவர்கள் கொடுக்கிறார்கள். எப்படியென்றால், இப்போது உள்ள பிற்படுத்தப்பட்டவர்களிடம் போய் நீங்கள் பிராமணர்களுக்குக் கீழேதான் என்று சொல்லி பிராமணர்கள் அவர்களை நம்பவைக்கவேண்டும். அதற்கு, வெறுமனே நீங்கள் பிரமணர்களுக்குக் கீழேதான் என்று சொன்னால் அவர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அதை அவன் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றால், அவனுக்குக் கீழே ஒரு ஆளை அவனிடம் காட்டவேண்டும்.

அப்படிக் காண்பித்து, உனக்குக் கீழே அவன் இருக்கிறான், எனக்குக் கீழே நீ இருக்கிறாய் என்று சொன்னால், ஒரு வகையில் அது அவனுக்கு ஒரு உளவியல் மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. இந்த உளவியல் மகிழ்ச்சிதான், கிட்டத்தட்டத் தீண்டா மையை இந்தியாவில் 1800 வருடங்களாகக் காப்பாற்றி வந்திருக்கிறது. இந்த உளவியல் மகிழ்ச்சியைப் பிற்படுத்தப்பட்ட யாரும் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை 1800 வருடங்களாக. இவன் நமக்குக் கீழேதான் என்பதையும், இவன் நம்மைக் கண்டால் கும்பிடவேண்டும் என்பதையும், இவன் நம்மைப் பார்த்தால் வேட்டியை இறக்கி விடவேண்டும் என்பதையும், செருப்பைக் கையில் எடுத்துச்செல்ல வேண்டும் என்பதையும், இது போன்ற உளவியல் மகிழ்ச்சியை அவன் விட்டுக் கொடுக்கத் தயாராயில்லை. இது ஒரு *Mob Mentalityahf* அதாவது குழு மனப்பான்மையாக இருக்கிறது

பிற்படுத்தப்பட்டவனுக்கு இந்த அமைப்பை அப்படியே காப்பாற்றவேண்டிய அவசியம் இருக்கிறது, அது அவனுக்கு ஒரு வாழ்வியல் கடமையாகவே இருக்கிறது. அதாவது, பட்டியல் சாதியினருக்கும் பிற்படுத்தப்பட்டவனுக்கும் இடையே இருக்கும் இடைவெளியைக் காப்பாற்ற வேண்டியது பிற்படுத்தப்பட்டவனுக்கு ஒரு வாழ்வியல் கடமையாகவே ஆகிவிடுகிறது. அப்படிக் காப்பாற்றிக் கொண்டிருந்தால்தான் அவன் பிற் படுத்தப்பட்டவனாகவே இருக்க முடியும். இல்லை யென்றால் அவனும் இவனும் ஒன்றாகி விடுவான். இது மிகவும் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விசயம்.

இதுதான், பிற்படுத்தப்பட்டவனைத் தனக்கு மேலே பிராமணர்கள் இருக்கிறார்கள் என்பதை ஒப்புக்கொள்ள வைக்கிறது. தனக்குக் கீழே யாரும் இல்லையென்றால், இயல்பாகவே அவன் தனக்கு மேலேயும் யாரும் இல்லை என்பதையும் ஒப்புக் கொள்வான்.

இப்போது உள்ள பட்டியல் சாதியினர், தீண்டத்தகாதவர்களாக இருப்பவர்கள் இந்து மதத்தில் இருந்து வெளியேறுவதன் மூலமாக, பிற்படுத்தப்பட்டவர்களுக்குக் கீழே இங்கு யாரும் இல்லை என்கிற நிலையை உருவாக்குகிறோம். அப்படி ஒரு நிலையை உருவாக்கினால், இந்த மொத்தக் கட்டிடமும் விழுந்துவிடும். தனக்குக் கீழே யாரும் இல்லை என்கிற நிலையேற்பட்டால், பிற்படுத்தப்பட்டவர்கள் இயல்பாகவே பார்ப்பன உயர்வுநிலையை மறுப்பார்கள்.

ஜாதி என்பதும், தீண்டாமை என்பதும், தீண்டாமையைக் கடைபிடிக்கவேண்டும் என்பது ஒரு *Social Learning.* யாரும் தனியாக ஒரு சாதி இந்துவுக்கும், பிராமணருக்கும் அதையெல்லாம் சொல்லிக் கொடுப்பதல்லை. சமூகத்தில் இருந்தே ஒரு குழந்தை அதைக் கற்றுக்கொள்கிறது. சமூகம் என்றால் இங்கிருப்பதெல்லாம் இந்துச் சமூகம்தான். சமூகத்தில் இருந்து கற்றுக்கொள்வது என்றால் அது மறுபடியும் இந்துமதத்தில் இருந்து கற்றுக் கொள்வது என்பதுதான் அதன் பொருள். மதம் என்பதுதான், சாதி இந்துவுக்கும் பிராமணருக்கும், ஜாதியையும் தீண்டாமையையும் கடைபிடிப்பதற்கு ஒரு பலத்தைக் கொடுக்கிறது. பட்டியல் சாதியின ரெல்லாம் உன் மதமே இல்லை என்கிற நிலை உருவாகிறபோது, இந்த மொத்த அமைப்புமே தகர்ந்துவிழும்.

**மதமாற்றம் கூடுதலாக வேறு என்ன பயன்களைத் தருகிறது?**

இந்தியாவில் ஒரு வருடத்திற்கு, *National Crime Records Bureau* கொடுத்திருக்கும் புள்ளி விபரங்களின் படி, இரண்டு லட்சம் குற்றங்கள் பட்டியல் சாதியினரின் மீது நடத்தப்படுகிறது. இவை பதிவு செய்யப்பட்டவை மட்டுமே. பதிவு செய்யப் படாதவை இதைவிட மூன்று நான்கு மடங்கு இருக்கும். கிட்டத்தட்ட குறைந்தது ஐந்து லட்சம் வன்முறை குற்றச்செயல்கள் ஒரு குறிப்பிட்ட பிரிவினர் மீது இந்தியாவில் நடக்கிறது.

ஆனால், இது உலகத்தில் வேறு யாராலும் கவனிக்கப்படுவதில்லை. ஏன் இது மற்றவர்களால் கவனிக்கப்படாமல் இருக்கிறது என்றால் இது வெறும் ஒரு குடும்பச்சண்டை போலதான் பார்க்கப் படுகிறது. இந்து மதத்திற்கு உள்ளே இருக்கும் ஒருவன் இன்னொருவனை அடிக்கிறான் என்பது, இந்து மதத்திற்கு உள்ளே நடக்கும் பிரச்சனையாகப் பார்க்கப்படுவதால், யாரும் இதைப் பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை.

இந்த மதமாற்றம் என்ன செய்யுமென்றால், இந்தியாவில் உள்ள முப்பதுகோடி பட்டியல் இன சாதியை சேர்ந்த மக்களும் புத்த மதத்திற்கு மாறிவிடுவார்களேயானால், இந்தியாவில் உள்ள எழுபது கோடி இந்துக்கள், இங்குள்ள சிறுபான்மை யினரான புத்த மதத்தைச் சேர்ந்தவர்கள் மீது வருசத்துக்கு இரண்டு லட்சம் வன்முறைகளைச் செய்கிறார்கள் என்பதை யாரும் ஏற்றுக்கொள்ளப் போவது கிடையாது.

அது உலகப்பிரச்சனையாகிவிடும். இந்துக்கள் புத்தமதத்தின் மீது எத்தனை வன்முறைகள் செய்யமுடியும்? இன்று நடப்பதுபோல இரண்டு லட்சம் வன்முறைகள் செய்யமுடியுமா? மூன்று லட்சம் வன்முறைகள் செய்ய முடியுமா? அது ஒரு பெரிய பிரச்சனையாகப் பார்க்கப்படும். அவ்வளவு முக்கியமான பிரச்சனை இன்று உலகத்தில் யாராலும் கவனிக்கப்படவில்லை என்றால் அதற்குக் காரணம் இது ஒரு குடும்பத் தகறாராக இருப்பது தான்.

புருசன் பொண்டாட்டியை அடிப்பது போன்ற ஒரு மனநிலைதான் சாதி இந்துக்கள் மனதில் இருக்கிறது. என் பொண்டாட்டியை நான் அடிக்கிறேன் உனக்கு என்னடா? என்கிற எண்ணத்தில்தான் அவன் இவளை அடிப்பதைத் தான் தன்னுடைய வாழ்க்கையின் கடமையே என்கிற ஒரு நினைப்புதான் இங்கு இருக்கிறது. மதமாற்றத்தின் மூலமாக, இன்னொரு மதத்தவனைத் தன் மதத்தைவிடத் தாழ்வானவனாகக் கருத முடியாது, அவன் மீது வன்முறையை எளிதாக நடத்தமுடியாது. அப்படி நடந்தால் அது உலக ளவிலான பிரச்சனையாகப் பார்க்கப்படும்.

**ஜாதியற்ற சமுதாயம் படைக்க இராமானுஜர், சுவாமி சகஜானந்தர் போன்ற தலைவர்களைப் போல இந்து மதத்தைச் சீர்திருத்தலாமே?**

சீர்திருத்தலாம். ஆனால் அதை யார் செய்ய வேண்டுமென்றால், இந்த மதத்தினால் பயன் பெற்றவர்கள்தான் செய்யவேண்டும். இந்து மதத்தைச் சீர்திருத்தவேண்டும் என்பது நியாய மானதும்கூட. எந்த ஒரு வீணாப்போனதையும் சீர்திருத்தவேண்டும் என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் அதைச் செய்யவேண்டியது இந்த மதத்தினால் பயனடைந்தவர்கள்தானே தவிர, இந்த மதத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் அல்ல.

நாங்கள் இந்த மதத்தினால் பாதிக்கப் பட்டவர்கள், அதனால் நாங்கள் வெளியே போகிறோம். இதை டாக்டர் அம்பேத்கர் மிகத் தெளிவாக சொல்லியிருக்கிறார். *"Reforming Hindu society is neither our field of action nor our aim"* என்று ஒரே வரியில் சொல்லிவிட்டார். அதாவது, "இந்துச் சமூகத்தை சீர்திருத்துவது எங்கள் கடமையும் அல்ல நோக்கமும் அல்ல."

**பௌத்த மதத்தில் பிரிவுகள் உள்ளதா? அதில் தாங்கள் முன்வைக்கும் பௌத்த மதம் எந்தப் பிரிவை சேர்ந்தது?**

பிரிவுகள் என்பது இயற்கையானது. எடுத்துக் காட்டாக மருத்துவத்துறைக்குள்ளும் நிறையப் பிரிவுகள் உள்ளன. மதத்தில் மட்டுமல்ல உலகம் முழுவதும் பிரிவுகளால் நிரம்பியவைதான். மனிதனுடைய வசதிக்காகப் பிரிவுகள் உருவாகிறது. மனிதனுடைய இயல்பான பரிணாம வளர்ச்சி யினால் பிரிவுகள் இயல்பாகத் தோன்றுகிறது. பிரிவுகளால் நமக்கு எந்தப் பிரச்சனையும் கிடையாது. பிரிவுகளுக்குள் பாகுபாடுகள் வரும்போதுதான் அது நமக்குப் பிரச்சனையாகிறது.

புத்த மதத்தில் பிரிவுகள் உள்ளது. அவை இயல்பான பிரிவுகள். உதாரணத்திற்கு, போதி தர்மர் இங்கிருந்து சீனா சென்று புத்த மதத்தைப் பரப்புகிறார். அவருடைய பரப்புரையால் புத்த மதத்திற்கு மாறியவர்கள் 'ஷையோலின்' என்கிற ஒரு பிரிவை இயல்பாக உருவக்குகிறார்கள். இலங்கைக்கு வேறு ஒரு பிக்கு போகிறார், அவருடைய பரப்புரையை ஏற்றுக்கொண்டவர்கள் அங்கு வேறு ஒரு பிரிவாகிறார்கள். ஆனால் இந்தப் பிரிவு களுக்குள் எந்தவிதமான சண்டையோ, முரண் பாடுகளோ, அடிதடியோ நடப்பதில்லை. ஷியா - சன்னி பிரிவுகளுக்கு இடையிலான போர் போன்ற முரண்பாடுகள் புத்த மதப் பிரிவுகளுக்கு இடையில் எங்கும் இல்லை.

நாங்கள் முன்வைக்கும் புத்தமதத்தை 'நவயனா' என்கிற பெயரில் அழைக்கிறோம். டாக்டர் அம்பேத் கர்தான் இதை ஏற்படுத்தியவர். மஹாயானா, ஹீனயானா என்று இரண்டு பிரிவுகள் ஏற்கனவே இருக்கிறது. டாக்டர் அம்பேத்கர் 'நவயனா' என்பதை இவையிரண்டும் அல்லாத புதிய ஒன்றாக அறிவித்திருக்கிறார். அதற்கு முக்கியக் காரணம், அந்த இரண்டு பிரிவுகளின் மீது ஏதாவது பிரச்சனை வந்தால் அது இந்த நவயனா பவுத்தத்தைப் பின்பற்றுபவர்களைப் பாதித்து விடக்கூடாது என்பதுதான்.

நவயனா பவுத்தத்திற்கு என்று டாக்டர் அம்பேத்கர் தனியாக ஒரு புத்தகத்தை எழுதியிருக்கிறார். புத்தமும் தம்மமும் (*Buddha and his Dhamma*) என்பது அதன் பெயர். இதற்கான ஆராய்ச்சிக்காகவே அவர் பாலி மொழியெல்லாம் கற்றுக்கொண்டார். அதில் முக்கியமாக என்ன சொல்லியிருக்கிறார் என்றால், எதிர்காலத்தில் புத்தமதத்தை யார்வேண்டுமானாலும் இந்தியாவில் மீண்டும் சிதைத்துவிடமுடியும். அப்படி அந்தச் சிதைவில் இருந்து காப்பாற்றுவதற்காக, இந்தப் பிரிவை உருவாக்கி, இந்தப் பிரிவின் மதப் புத்தகம் என்பது 'புத்தமும் தம்மமும்' என்பதுதான், வேறு எதையும் பின்பற்றதாதீர்கள் என்று டாக்டர் அம்பேத்கர் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

பிற்காலத்தில் பார்ப்பனர்களாலோ அல்லது வெளிநாட்டுப் படையெடுப்பின் காரணமாகவோ அல்லது வேறு ஏதோ ஒரு காரணத்தினாலோ இதில் ஒரு திரிபு ஏற்பட்டு, இந்தப் புத்தமதமே வீணாகி விடக்கூடாது, இந்தியாவில் இந்தக் குறிப்பிட்டப் பிரிவினர் பாதிப்புக்கு உள்ளாகிவிடக்கூடாது என்பதற்காக நவயனா என்கிற புதிய பிரிவினை அம்பேத்கர் உருவாக்கினார். மற்ற பிரிவினருடன் வேறு எந்த முரண்பாட்டின் காரணமாகவும் இது உருவாக்கப்படவில்லை.

**பௌத்த மதம் பரவலாகப் பின்பற்றப்படுகிற சீனா, இலங்கை, பர்மா போன்ற நாடுகளில் பின்பற்றப்படும் பௌத்த மதத்திற்கும், தாங்கள் முன்வைக்கும் பௌத்த மதத்திற்கும் ஏதேனும் வேறுபாடுகள் உள்ளதா?**

பெரிய வேறுபாடுகள் எதுவும் இல்லை. ஏற்கனவே பதில் சொன்னதுபோல இது ஒரு தனிப் பிரிவுதான். இந்தியாவில் டாக்டர் அம்பேத்கர் முன்வைத்த அரசியல்ரீதியான காரணங்களுக்காக புத்தமதத்தைத் தழுவியவர்கள் என்கிற அடையாளத்திற்காக 'நவயனா' என்கிற ஒன்று ஏற்படுத்தப் பட்டிருகிறது.

**நடைமுறையில் புத்தமதத்தை பின்பற்றுகிற வழிமுறைகளில் ஏதும் வேறுபாடுகள் கிடையாதா?**

உண்மையில், புத்த மதத்தில் நீங்கள் நினைப்பது போன்ற பெரிய வழிமுறைகள் எதுவும் கிடையாது. புத்தமதம் பற்றி எளிமையாகக் கூறுவதென்றால், எது சரியானதோ, எது பகுத்தறிவுக்கு உட்பட்டதோ, எது அறிவியல் பூர்வமானதோ அதை ஏற்றுக்கொண்டு பின்பற்றுங்கள் என்பதுதான். இதுதவிர பஞ்சசீலக் கொள்கை என்று சொல்லப்படுகிற ஐந்து கொள்கைகள் உள்ளன. அவை, திருடாதே, பொய்சொல்லாதே, முறையற்ற காமம் கொள்ளாதே, மது அருந்தாதே, கொல்லாமை ஆகிய ஐந்து கொள்கைகள்.

பவுத்தத்தின் அடிப்படைக் கருத்து என்பது, ஒரு மனிதன் அவனுடைய அறிவை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். அவனால் அவனுக்கும் மற்றவர்களுக்கும் எந்தத் துன்பமும் வரக்கூடாது. சமூகத்தில் மனிதர்களிடையே வெறுப்புகள் ஏதுமற்ற சுமூக உறவு நிலவவேண்டும்.

**தமிழர்களிடையே புத்தமதம் குறித்துப் பேசும்போது, இலங்கையில் உள்ள புத்தமதம் குறித்தும், அங்குள்ள புத்தபிக்குகள் குறித்தும் நாம் பேசவேண்டியிருக்கிறது. இலங்கை இனபிரச்சனையில் அங்குள்ள புத்தமதமும் புத்த பிக்குகளும் பெரும்பாலும், சிங்கள இனவாதப் போக்கிற்கு ஆதரவாகவே இருந்திருப்பதாக நாம் பார்க்கிறோம். இது குறித்து உங்களுடைய கருத்து என்ன?**

இலங்கை இனப் பிரச்சனையை இந்தியாவில் உள்ள பட்டியலின மக்களுடைய அரசியலோடு இணைத்துப் பேசுவது ஒரு பெரிய மோசடி. மனித வரலாற்றில், அதாவது மனித இனம் தோன்றி வாழத்தொடங்கிய காலத்தில் இருந்து இன்றைக்கு வரைக்கும், தோராயமாக ஐயாயிரம் போர்கள் இதுவரை நடந்திருக்கிறது. இந்தப் போர்களில் பெரும்பாலான போர்களுக்கு ஒரு மத அடிப்படை இருக்கிறது. ஒரே மதத்தைச் சேர்ந்தவர்களுக் குள்ளேயும் போர்கள் நடந்திருக்கிறது. இப்படி நடந்த ஐயாயிரம் போர்களில், இந்தக் குறிப்பிட்ட இலங்கை இனப் பிரச்சனையை ஒரு குறிப்பிட்ட மதத்துடன் இணைத்துப்பார்ப்பது என்பது ஒரு மோசடி. முதலில் இது ஒரு இனப்பிரச்சனை. அதை மதத்துடன் இணைத்துப் பார்ப்பது தவறு.

இரண்டாவதாக, அப்படியே இந்தப் பிரச்சனையை மதத்துடன் இணைத்துப் பார்ப்பவர்களிடம் எனக்கு ஒரு கேள்வி இருக்கிறது. நீங்கள் சிங்களவர்களை பவுத்தர்களாகப் பார்க்கிறீர்கள் என்றால், தமிழர்களை இந்துக் களாகதான் பார்க்கிறீர்களா? நீங்கள் சிங்களவர் களை சிங்கள மொழி பேசுகிறவர்களாகப் பார்த்தால்தான், தமிழர்களைத் தமிழ்மொழி பேசுகிறவர்களாகப் பார்க்கமுடியும். சிங்களவர் களுக்கு ஒரு அளவு கோலும் தமிழர்களுக்கு வேறொரு அளவுகோலும் வைத்துக் கொள்ள முடியாது.

மூன்றாவது விசயம்தான் ரொம்பவும் முக்கியமானது. அதைதான் நான் ஆற்றாமையோடு பதிவு செய்ய விரும்புகிறேன். இந்த இலங்கை இனப்பிரச்சனை என்பதே ஏறத்தாழ 35 அல்லது 50 ஆண்டுகளாக இருக்குமா? எவ்வளவு பேருடைய பிரச்சனை? தோராயமாக ஒரு 25 அல்லது 50 லட்சம் தமிழர்களுடைய பிரச்சனையாக இருக்குமா?. ஆனால் இந்தியாவில் உள்ள பட்டியல் சாதியினருடைய பிரச்சனை என்பது 1800 வருடகாலப் பிரச்சனை 35 கோடி மக்களுடைய பிரச்சனை. அதாவது, 1800 வருடகால 35 கோடி மக்களுடைய பிரச்சனை என்பது அளவிலும் அமைவிலும் (*Quantity and Quality*) மிகப் பெரியது. இதை இலங்கை இனப்பிரச்சனையோடு ஒப்பிடவே முடியாது. நியாயமான எவர் ஒருவரும் இந்திய தலித் மக்களுடைய பிரச்சனையையும் இலங்கை இனப்பிரச்சனையையும் ஒப்பிடவே மாட்டார்கள்.

இந்திய தலித் மக்களுடைய பிரச்சனையோடு ஒப்பிடும்போதும் இலங்கை இனப்பிரச்சனை என்பது *Negligible* அதாவது புறக்கணிக்கத்தக்கது. இந்தியாவில் உள்ள ஒவ்வொரு தீண்டத்தகாதவரும்

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிடமும் தீண்டமையால் பாதிக்கப்படுகிறான். பல இடங்களில் அதைச் சொல்ல முடிகிறது, பல இடங்களில் அது சொல்லவே முடியாத நவீன தீண்டாமையாக இருக்கிறது. இந்த 35 கோடி மக்களுடைய, 1800 ஆண்டுகளாக இருக்கிற பிரச்சனைக்கு டாக்டர் அம்பேத்கர் தன் வாழ் நாளையே அர்பணித்து ஒரு தீர்வை முன்மொழி கிறார்.

இது மொழிகளைக் கடந்த ஒரு பிரச்சனை. தமிழ்த்தேசியம் என்பதெல்லாம் இதற்குள் வரவே வராது. ஒரு மனிதர் இதற்காக அராய்ந்து ஒரு தீர்வை முன்வைக்கிறார். அதற்கு வலுவான பல காரணங் களும் இருக்கிறது. வரலாற்றுரீதியாகப் பார்த்தால் கூட நாங்கள் பவுத்தர்கள்தான் என்கிற காரணம் உட்பட.

அப்படியிருக்கும் போது, இலங்கைப் பிரச்சனையை நாங்கள் குறைத்து மதிப்பிடுகிறோம் என்று நினைக்க வேண்டாம். இலங்கை என்கிற சின்ன நாட்டில் அதிகப்பட்சம் ஒரு 50 லட்சம் மக்களுடைய 50 ஆண்டுகாலப் பிரச்சனையோடு ஒப்பிட்டு, எங்களுடைய முழுமையான விடுதலை யையே மறுக்கிறீர்கள் என்பது ஒரு மிகப் பெரிய அநியாயம் என்று நான் சொல்வேன். இன்னும்கூடக் கடுமையான வார்த்தைகளை இங்கு நான் பயன்படுத்த விரும்புகிறேன்.

**பௌத்த மதத்திற்கான வேதநூல் அல்லது புனித நூல் என்பது என்ன? பௌத்த மதத்தின் இறைக் கோட்பாடு என்ன? வழிபாட்டு முறைகள் யாவை? மதவிழாக்கள் / பண்டிகைகள் என்பவை என்னென்ன? அவற்றில் பின்பற்றவேண்டிய சடங்குகள் என்னென்ன?**

வேதநூல் என்றோ புனிதநூல் என்றோ எதுவும் கிடையாது. வழிகாட்டு நூல் என்று உள்ளது. அது டாக்டர் அம்பேத்கர் எழுதிய ‘புத்தமும் தம்மமும்.’ தமிழில் மொழிபெயர்த்திருப்பவர் பெரியார்தாசன். பௌத்தத்தில் புனிதம் என்கிற கருத்தாக்கமே கிடையாது.

இறைக்கோட்பாடு என்றால், பொளத்தம் அடிப்படையில் கடவுள் மறுப்பை முதன்மையான கருத்தாக்கமாகக் கொண்ட ஒரு மதம். இன்னும் சரியாகப் பொளத்தர்களுடைய மொழியில் சொல்வ தென்றால், Agnostic என்று சொல்லவேண்டும். அதாவது கடவுள் உண்டு, இல்லை என்பது குறித்துக் கவலையில்லாதவர்கள் என்று பொருள்.

ஏன் கவலையில்லாதவர்கள் என்பதற்குக் குறிப்பிடத்தகுந்த காரணம் உள்ளது. நாளைக்கே கடவுள் வரலாம், அதற்கான வாய்ப்புகளையும் நாங்கள் மறுக்கவில்லை. இதுவரை வரவில்லை, வந்ததாக யாரும் நிருபிக்கவில்லை. இப்படிப் பார்ப்பதுதான் ஒரு அறிவியல்பூர்வமான பார்வை யாகவும்கூட இருக்கும். அதாவது எதையும் ஏற்பதும் மறுப்பதும் அறிவியல் அனுகுமுறைகிடையாது. எதையும் ஆராய வேண்டும். புத்தமதமும் அதைதான் வலியுறுத்துகிறது. கடவுள் இருக்கிறார், இல்லை என்பது குறித்து எங்களுக்குக் கவலையில்லை. யாராவது நிருபிக்கத் தயாராக இருந்தால் நிருபியுங்கள். இதுவரை யாரும் நிருபிக்கவில்லை அதனால் இதுவரை நாங்கள் நம்பவில்லை.

கடவுளை மறுத்ததன் மூலமாக அவருடைய அவதாரங்களை மறுக்கிறோம். ஆசி பெற்றவர்கள், புனிதர்கள் போன்றவற்றை மறுக்கிறோம். உருவ வழிபாட்டை மறுக்கிறோம். கடவுளுக்குப் பலியிடுவதை மறுக்கிறோம். யாகம் வளர்ப்பது போன்ற மூடநம்பிக்கைகளை மறுக்கிறோம். பகுத்தறிவையும், மனிதன் தன்னுடைய அதிகபட்ச அறிவை பயன்படுத்தவேண்டும் என்பதைதான் வலியுறுத்துகிறோம்.

வாழ்வியல் என்று பார்த்தால், புத்த மத ரீதியான வாழ்வியல் என்று தனியாக எதுவும் இல்லை. புத்தர் படத்திற்கு மலர் தூவுவது போன்ற நிகழ்வுகள் இருக்கிறது. அதை நீங்கள் பெரியார் சிலைக்கு மாலை போடுவது போன்ற ஒரு நிகழ்வாகப் புரிந்துக்கொள்ளவேண்டியதுதான். எங்களுடைய மதமாற்ற நிகழ்வு நடந்த போதுகூட மூன்று புத்த பிக்குகள் வந்திருந்தனர்.

அதில் ஒருவர் வெளிநாட்டில் இருந்துகூட வந்திருந்தார். அவர்கள் அனைவருமே திரும்பத் திரும்ப நான்கைந்து முறை சொன்ன செய்தி என்னவென்றால், புத்தர் கடவுள் இல்லை, புத்தர் கடவுள் இருக்கிறார் என்று சொல்லவும் இல்லை, புத்தர் கடவுளுடைய தூதுவரும் இல்லை. இந்த மதத்தின் பிக்குவாக இருப்பவர்களே இதை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி சொல்கிறார்கள். இது இந்துமதம் போன்ற ஒன்றாக மாறிவிடக்கூடாது என்பதில் கவனமாக இருக்கிறார்கள். எனவே இதில் குழப்பங்கள் ஏற்பட வாய்ப்பில்லை.

பண்டிகைகள் என்று பார்த்தால், இந்தியாவில் நவயனா பௌத்தர்கள் கொண்டாடும் பண்டிகைகள் என்று சில உண்டு. ‘புத்த பூர்ணிமா’, ‘அம்பேத்கர் பிறந்த நாள்’, ‘அம்பேத்கர் பௌத்தம் தழுவிய நாள்’ (அக்டோபர் 14) என்பவை உள்ளிட்ட சில பண்டிகைகள் உண்டு.

**தலித்துகள் எந்த மதத்தையும் ஏற்றுக்கொள்ளாத நாத்திகர்களாக இருக்கலாமே? நாத்திகர்களாக இருப்பதைவிடப் புத்த மதத்திற்கு மாறுவதை எப்படி ஒரு முழுமையான தீர்வாக நீங்கள் சொல்கிறீர்கள்?**

இந்தியாவில் இருக்கும் பட்டியல் சாதி யினருக்கு நாத்திகராக இருப்பது உதவுமா என்றால், ஒரு சதவிகிதம்கூட உதவாது. நான் தனிப்பட்ட முறையில் என்னுடைய வாழ்க்கையில் கடந்த 10 வருடங்களாக முழு நாத்திகராக இருக்கிறேன். நூறு சதவிகிதம் கடவுள் இல்லை என்பதை நம்புகிறேன். பல ஆய்வுகளைப் படித்து, பல தத்துவங்களைப் படித்து கடவுளை மறுத்து பத்து வருடங்களாக வாழ்கிறேன். ஆனால் தீண்டாமை ஒழிப்பில் இது எந்த வகையிலும் எனக்கு உதவவில்லை.

இந்தியாவில் உள்ள எந்தப் பட்டியல் சாதி யினருக்கும் உதவாது. ஏன் உதவாது என்றால், நீங்கள் நாத்திகராக இருந்தால் இந்து நாத்திகர், முஸ்லிம்

நாத்திகர், கிருத்தவ நாத்திகர் என்கிற அடையாளம்தான் கிடைக்கும். சவுதி அரேபியாவில் கூட மூன்று சதவிகிதம் நாத்திகர்கள் இருக்கிறார் களாம். அந்த அடையாளம் எந்த வகையிலும் உதவாது.

எது தீண்டாமையை ஒழிக்கவல்லது என்றால், நீங்கள் வேறு ஒரு மதக்காரராக உங்களை அடையாளப்படுத்திக் கொள்வதுதான் தீண்டா மையை ஒழிக்கவல்லது. கடவுள் இருக்கிறாரா இல்லையா என்பது ஒரு தீண்டத்தகாதவருக்கு ஒரு கேள்வியே கிடையாது. அவருடைய வாழ்கையில் அந்தக் கேள்வியே கிடையாது அது நோக்கமும் கிடையாது. இந்தியாவில் ஒரு தீண்டத்தகாதவருக்கு அவருடைய வாழ்க்கையில் நோக்கம் என்ன வென்றால், தீண்டாமையில் இருந்து வெளியே வருவதுதான் முதல்நோக்கம், கடவுள் இருக்கிறாரா இல்லையா என்பது இரண்டாவதுதான். இந்த அடிப்படையில் இருந்து பார்க்கும்போது, நீங்கள் இந்து மதத்தைச் சார்ந்தவர் அல்ல, வேறு மதத்தைச் சார்ந்தவர் என்று நிறுவும்போதுதான், உங்கள் மீது உள்ள தீண்டாமை மறையும். அது எப்படி மறையும் என்பது குறித்து முந்தைய பதில்களில் பேசியிருக் கிறோம்.

அதேசமயம் இந்தியாவில் உள்ள பிற்படுத்தப் பட்டவர்கள் நாத்திகர்களாக இருக்கலாம், இருக்கவேண்டும். அதை நான் வரவேற்கிறேன். அதுதான் காலத்தின் தேவையும். தந்தை பெரியாரை நாம் மதிக்கிறதுக்குக் காரணமும் அதுதான். ஏனென்றால் பிற்படுத்தப்பட்டவருக்கு இந்து மதத்தைப் புணரமைக்கவேண்டிய எந்தத் தேவையும் கிடையாது. தங்களுக்குக் கீழே தீண்டத்தகாதவர் என்கிற ஒருவர் இருக்கும்போது, அந்த உளவியல் மகிழ்ச்சியிலேயே தங்களை ஆண்டபரம்பரை என்று சொல்லிக்கொண்டு வாழ முடியும்.

அதையெல்லாம் அவர் மறுத்திருக்கிறார். தான் ஆண்டபரம்பரை இல்லை, அனைவரும் சமம் என்று சொல்லியிருக்கிறார். பிற்படுத்தப்பட்டவன் நாத்திகராக இருக்கமுடியும், இருக்கவேண்டும், இந்துமதத்தைச் சீர்திருத்தும் வேலையை அவன் செய்யவேண்டும், அதில் அவர்கள் வெற்றிபெற முடியுமா முடியாதா என்பது வேறு பிரச்சனை. வெற்றிபெற முடியாது என்று நாங்கள் கருதுகிறோம். ஆனால் அந்தச் சீர்திருத்த நடவடிக்கைகளைப் பிற்படுத்தப்பட்டவர்களால்தான் செய்யமுடியும், பட்டியல் சமூகத்தினரால் அது முடியாது, அது எங்களுக்குப் பயனற்றது.

**பெரியார் பௌத்தக் கருத்தியலுக்கு ஆதரவாளர்தான், அதேசமயம் ஒரு காலக்கட்டத்தில் தீண்டாமைக் கொடுமைகளில் இருந்து விடுபடுவதற்கு, முஸ்லிம் மதத்திற்குக் கூட்டம் கூட்டமாக மாறுங்கள் என்று அவர் சொல்லியிருக்கிறார். தீண்டாமை ஒழிப்பு என்கிற ஒரு காரணத்திற்காக முஸ்லிம் மதத்திற்கு மாறுவதை அவர் ஆதரித்து வரவேற்றுப் பேசியிருக்கிறார். தலித்துகள் முஸ்லிம் மதத்திற்கு மாறுவது குறித்து உங்கள் கருத்து என்ன?**

மதமாற்றம் என்கிற கருத்தளவில், பட்டியலின மக்கள் எந்த மதத்திற்கு மாறிக்கொள்வதையும் நாங்கள் வரவேற்கிறோம். அதை நாங்கள் தடுப்பது கிடையாது. ஆனால் அதேசமயத்தில், இதை இன்னும் ரொம்பவும் கூர்மைபடுத்தி டாக்டர் அம்பேத்கர் கொடுத்த அறிவின்படி யோசிக்கும் போது, புத்தமதம் தான் இந்த நாட்டிற்குச் சரியானதாக இருக்கமுடியும். இரண்டாவதாக, நீண்டகால நோக்கில் பார்க்கும்போது, உலகம் முழுக்கக் கடவுள் மறுப்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டுதான் இருக்கிறது. குறிப்பாக ஐரோப்பாவிலும், ஸ்கேண்டிநேவியன் நாடுகளிலும் அதிகரிக்கிறது.

ஏன் அங்குக் கடவுள் மறுப்பாளர்களின் எண்ணிக்கை அதிகமாகிக்கொண்டிருக்கிறது என்றால், அங்கு மனித வளர்ச்சிக் குறியீடு (*Human development index*) அதிகமாக இருகிறது. அதாவது அங்கே பெரும்பாலானவர்கள் பொருளா தாரத்திலும், வாழ்க்கை தேவைகளிலும் தன்னிறைவை அடைந்து விட்டார்கள். இயல் பாகவே அவர்களுக்குக் கடவுள் தேவை யில்லாதவராகிவிட்டார். அதுபோல, உலகம் முழுவதும் மனித இனம் ஒரு காலத்தில் நாத்திகத்தையும் பகுத்தறிவையும் நோக்கி போகத்தான் போகிறது.

அப்படி ஒரு சூழல் வரும்போது, அப்போது அந்த மதம் அதை ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கவேண்டும். பகுத்தறிவை ஏற்றுக்கொண்ட, அறிவியலை ஏற்றுக்கொண்ட, மூடநம்பிக்கைகளை மறுக்கிற ஒரு மதமாக இருக்கவேண்டும். அப்படி ஒரு தொலைநோக்குச் சிந்தனையில், டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கரின் அறிவாற்றலின்படி யோசிக்கும்போது, புத்தமதத்தைதான் நாங்கள் வலியுறுத்துகிறோம். ஆனால், தீண்டாமை ஒழிப்பிற்கு மதமாற்றம் உதவும் என்கிற வகையில் ஒரு தலித் எந்த மதத்திற்கு மாறுவதையும் நாங்கள் தடுப்பதுகிடையாது.

**அம்பேத்கர் வழிகாட்டியபடி புத்தமதத்தைப் பின்பற்றிய இலட்சக்கணக்கான மக்கள் இந்துமதப் பண்பாடுகளுக்கு எதிராக, மாற்றுப் பண்பாட்டுப் பழக்க வழக்கங்களை வாழ்வியலாகப் பின்பற்றி வருகிறார்களா?**

நிச்சயமாகப் பின்பற்றி வருகிறார்கள். அம்பேத்கர் புத்தமதத்தைத் தழுவியபோது இலட்சக் கணக்கானவர்கள் அவருடன் புத்தமதத்தைத் தழுவி னார்கள். ஆனால் 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப் பின்படி பார்த்தால், 92 லட்சம்பேர் இந்தியாவில் புத்தமதத்தைப் பின்பற்றுகிறவர்களாக இருக்கிறார்கள். இவர்களில் ஆகப்பெரும்பான்மை யானவர்கள் அம்பேத்கரை பின் தொடர்ந்து புத்த மதத்திற்கு மாறியவர்கள்தான். அவர்களில் பெரும்பாலானோர் அம்பேத்கரின் சொந்த மாநிலமான மகாராஷ்டிராவை சேர்ந்தவர்கள்தான். அவர்கள் அன்றாட வாழ்க்கையில் முழுக்கவே பௌத்தர்களாகவே வாழ்கிறார்கள். மகாராஷ்

டிராவில் பௌத்தர்கள் சாதி இந்துக்களுக்குக் கடுமையான சவாலை தினந்தோறும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**அம்பேத்கர் காட்டிய பௌத்தத்தை வாழ்வியலாக ஏற்ற மக்களை, இந்து மதம் விதித்துள்ள அனைத்து பண்பாட்டு நடவடிக்கைகளுக்கும் மாற்றான பண்பாட்டு நடவடிக்கைகளைக் கடைபிடிக்கச்செய்ய, அம்பேத்கருக்குப் பிறகு இருந்த அம்பேத்கரிஸ்ட்டுகள் மற்றும் அம்பேத்கர்வழி பௌத்தமதத் தலைமைகள் எடுத்துக் கொண்ட முயற்சிகள் என்ன?**

டாக்டர் அம்பேத்கர் நம்மால் கற்பனைசெய்ய முடியாத அளவுக்கு ஒரு அறிவாளி அவர். அவருடைய வாழ்நாளில் 25,000 புத்தகங்களை அவர் படித்திருக்கிறார். அவரால் கைப்பட எழுதப்பட்டது மட்டுமே 40,000 பக்கங்கள் அளவுக்கு இருக்கிறது. அவர் மறைந்த பிறகு அவர் எழுத்துக்களை புத்தகமாகக்கொண்டு வருவதற்கு 20வருடங்கள் ஆகி விட்டது. தமிழில் அவற்றைக் கொண்டு வருவதற்கு அதன்பிறகு ஒரு 20வருடங்கள் ஆகிவிட்டது.

அதற்கு முன்னால் வரை யாரும் இங்கு அம்பேத்கரைப் பெரிதாகப் படிக்கவில்லை. அது வரை அம்பேத்கருக்குச் சிலை வைத்து அவரைத் தலைவராக ஏற்றுக்கொண்டவர்கள் நிறைய உண்டு. ஆனால் கருத்துகள் பெரிதாகப் போய்ச் சேரவில்லை. ஆனால் 1991 க்குப் பிறகுதான் தமிழில் புத்தகங்கள் வருகிறது. 91க்கு பிறகு அதை முழுமையாகப் படித்துப் புரிந்துக்கொண்டவர்கள் என்பதும் குறைவாகதான் இருக்கிறார்கள்.

இந்தக் கால அளவே 2016 வரை நம்மை இழுத்துக்கொண்டுவந்துவிட்டது. இதில் யாரும் கருத்துப் பரவாமல் தடுத்துவிட்டார்கள் என்றோ, உதவாத கருத்து என்றோ, அம்பேத்கர் தவறு செய்துவிட்டார் என்றோ இவை பரவாமல் இல்லை. முழுமையாக இந்தக் கருத்துகள் போய்ச் சேருவதற்கு இன்னும் 200 வருடங்கள்கூட ஆகலாம்.

வழக்கமான மற்ற இயக்கங்களைப்போலதான் இதையும் பரவலாக முன்னெடுக்கவேண்டும். பௌத்த மதமாற்றம் என்பது ஒரு அரசியல் இயக்கம்தான். மத இயக்கம் கிடையாது. தலித் அரசியல் கட்சிகளும் இதை முன்னெடுக்க வேண்டும். அன்னை மாயாவதி இதை முன்னெடுக்கிறார். புத்தமத மாநாடுகளை நடத்துகிறார். அவருடைய கட்சியினர் பலர் மதம் மாறிக்கொண்டிருக்கிறார்கள். அவரே புத்த மதத்திற்கு மாறப்போவதாக அறிவித்திருக்கிறார்.

அரசியல் தலைவர்கள் முன்னெடுக்கிறார்களோ இல்லையோ, மக்கள் தன்னெழுச்சியாக இதை முன்னெடுப்பார்கள் என்பதுதான் டாக்டர் அம்பேத்கரின் வெற்றி. நாங்கள் 47 மருத்துவர்கள் பௌத்தம் தழுவியது எந்த அரசியல் கட்சித் தலைவர்களையும் அழைக்காமல் அவர்களுடைய வழிகாட்டுதல் இல்லாமல், தன்னெழுச்சியாக நாங்களே அம்பேத்கரை படித்து விவாதித்து முடிவெடுத்து நாங்களே குழுவாக மதம் மாறியது தான். இது மாதிரியான நிகழ்வுகள் தொடர்ந்து நடக்கும்.

**தாழ்த்தப்பட்ட மக்கள் இஸ்லாமுக்கோ, கிறிஸ்தவத்திற்கோ மாறினாலும் அந்த மதங்களிலும் தீண்டாமைக் கொடுமைகள் தீர்ந்தபாடில்லை. இந்து மத நோயின் தாக்கத்தால், இந்தியாவில் மட்டும் மேற்கண்ட மதங்களிலும் ஜாதியப் பாகுபாடுகள் முற்றாக ஒழியவில்லை. அதுபோலப் புத்த மதத்திற்கு மாறிய தாழ்த்தப்பட்ட மக்களின் நிலை என்ன? அவர்களுக்குத் தீண்டாமை வன்கொடுமைகள் நடப்பதில்லையா? ஜாதியப் பாகுபாடுகள் இருப்பதில்லையா?**

முதலில் இஸ்லாம் பற்றிப் பேசுவோம். இஸ்லாம் மதத்துக்கு மாறிய தலித்துகள் தீண்டாமையை அனுபவிக்கிறார்கள் என்பதை நான் நேரடியாக மறுக்கிறேன். எங்காவது மிக அரிதாக நடக்கலாம். ஆனால் அது எந்தக் காலத்திலும் முஸ்லிம் மதத்தில் நிலைபெறாது. அவர்கள் ஜாதி என்றில்லை, நாடு, இனம் போன்றவற்றையே கடந்துவிடுகிறார்கள். அவர்களுடைய மதம் சகோதரத்துவத்தை வலியுறுத்துகிறது. அதனால் அங்குத் தீண்டாமை இருக்கிறது என்பதை நான் முற்றிலும் மறுக்கிறேன்.

இரண்டாவதாக, கிருத்துவ மதம் குறித்துப் பார்ப்போம். கிருத்துவ மதம் என்பது 1800க்குப் பிறகுதான் இந்தியாவில் பரவலாக வளர்ந்திருக்கிறது. இந்துக்களாக இருந்து கிருத்துவ மதத்திற்கு மாறியவர்கள், இன்னும் அங்குபோய் இந்து பழக்க வழக்கத்தைப் பின்பற்றுகிறார்கள். கிருத்துவ மதத்தில் தீண்டாமை நிலைபெற முடியுமா என்றால், முடியாது. ஏனென்றால் அதற்கு அங்கு ஒரு மதக் கட்டமைப்பு இல்லை. பைபிளிலும் அதற்கு இடமில்லை.

எடுத்துக்காட்டாக, ஒரு சர்ச்சுக்குள் பட்டியல் சாதியினர் செல்ல முடியாத நிலை இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அந்த மக்கள் போய் தங்களை அனுமதிக்கச் சொல்லி முறையிடுகிறார்கள், இங்கு முறையிட்டு அனுமதி பெற முடியவில்லை என்றால் போப்பாண்டவர் வரை சென்று முறையிடுவார்கள். போப் அனுமதிக்கச் சொல்லித்தான் ஆணையிடமுடியும், ஏனென்றால் தீண்டாமைக்கு ஆதரவான மதக் கட்டமைப்பு அவர்களிடம் இல்லை. எனவே,காலப்போக்கில் இதெல்லாம் அங்குத் தகர்ந்தேயாகவேண்டும்.

இரண்டாவதாக, போப்பாண்டவருக்கு அடுத்த நிலைக்குவரை பட்டியல் சாதியை சேர்ந்த ஒருவர் போயிருக்கிறார். மூன்றாவதாக முக்கியமான ஒரு விசயம், முத்துகுமார் என்று ஒரு பட்டியல் சாதியை சேர்ந்தவர் இருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். முத்துகுமார் மதம்மாறி மைக்கேல் அகஸ்டியன் ஆகிவிடுகிறார் என்று வைத்துக்கொள்வோம். கிருத்துவ மதத்திற்குள் அவர் ஒரு தலித் கிருஸ்டியனாக அறியப்படலாம். கிருத்துவ மதத்திற்குள் அவருக்குப் பிரச்சனை இருக்கலாம், நான் அதை மறுக்க வில்லை. ஆனால் இந்துக்கள் அவரைத்தீண்டத்தகாதவனாகப் பார்க்கமுடியாது.

அதுபோலவே, புத்தமதத்திற்குள்ளே தீண்டாமைக்கு இடமே கிடையாது. ஆனால் புத்தமதத்திற்கு மாறியவர் மீது இந்துக்கள் நடத்தும் வன்கொடுமைகள் சிலகாலம் தொடரலாம். அது இரண்டு மதங்களுக்கு இடையிலான பிரச்சனையாகத்தான் பார்க்கப்படவேண்டும். ஒரு மதத்தினர் இன்னொரு மதத்தினர் மீது நடத்தும் வன்முறையாகத்தான் அதை பார்க்கவேண்டும்.

**எதிர்காலத்தில், பண்பாட்டுத் தளத்தில், இந்து மதத்திற்கு எதிராகத் தங்களது நடவடிக்கைகள், செயல்பாடுகள், திட்டங்கள் என்ன?**

இந்து மதத்திற்கு எதிரான நடவடிக்கை என்பது இந்த இடத்தில் சரியான வார்த்தை கிடையாது. இந்து மதத்தில் இருந்து வெளியேறி, பூர்வீக பௌத்த கலாச்சாரமான பகுத்தறிவு கலாச்சாரத்தைக் கட்டமைப்பது என்பதுதான் நோக்கம்.

**புத்த மதத்திற்கு மாறுவதால் இடஒதுக்கீடு உரிமைகளுக்கு ஆபத்து வருமா?**

ஆபத்து எதுவும் வராது. சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் ஆட்சியில் இருக்கும்போது ஒரு சட்டத்திருத்தம் கொண்டுவந்திருக்கிறார். அதாவது, சீக்கிய மதத்திற்கும், புத்த மதத்திற்கும் ஒரு பட்டியல் சாதியினர் மாறினாலும், அவருக்கு உரிய பட்டியல் சாதியினருக்கான இடஒதுக்கீடு உரிமைகள் தொடரும் என்கிற சட்டதிருத்தம் அது.

- தொடரும்

அட்டைப் புகைப்படம்: R.r.Srinvasan

# திராவிடர் பண்பாட்டு நாட்காட்டி 2017




காட்டாறு வெளியிடும், "திராவிடர் பண்பாட்டு நாட்காட்டி 2017". இந்த ஆண்டு நாட்காட்டியின் மய்யக் கருத்து: திராவிடர் பண்பாட்டுத் தளத்தில் "முடிவெடுக்கும் மகளிர்".

கல்வி, தொழில், நட்பு, காதல்ஏற்பு, காதல்மறுப்பு, மணம் முடித்தல், மணம் முறித்தல், மறுமணம், சொத்து, குழந்தை மறுப்பு, கம்பேனியன், தனித்துவாழ்தல், கூட்டுக்குடும்ப மறுப்பு, இருபால் சமையல் (Co Cooking), குலத்தொழில் மறுப்பு, குலதெய்வ வழிபாடுமறுப்பு, மதவிழாக்கள் மறுப்பு, மதச்சடங்குகள் மறுப்பு - இவை போல வாழ்வில் நாம் சந்திக்கும் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் சுயமாக முடிவெடுத்துச் செயல் படுத்திய பெண்கள் / அதைப் புரிந்து கொண்டு, ஒத்துழைப்பும் கொடுத்த ஆண்கள் - இவை தான் 2017 ஆம் ஆண்டு நாட்காட்டியின் அடிப்படை.

பெண்கள் அவரவர் வாழ்வை அவர்களே நிர்ணயித்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தைப் பரப்புவதே எமது நோக்கம். திராவிடர் பண்பாட்டுத் தளத்தில் முடிவெடுக்கும் நிலையிலுள்ள பெண்களை அறிமுகப்படுத்துங்கள். அவர்கள் தான் நாட்காட்டியில் நமக்கு முன்மாதிரிகளாக இடம்பெறுவார்கள்.

மக்களுக்கு அறிமுகமானவர்கள், பிரபலமானவர்கள், அமைப்புகளின் முக்கியப் பொறுப்பாளர்களைத் தவிர்த்து, எளிய தோழர்களை - எளிய மனிதர்களை அறிமுகப் படுத்துங்கள்.

நாட்காட்டி நன்கொடை 50 ரூபாய்.

தொடர்புக்கு: இராவணன், 97868 89325 eMail: kaattaaru2014@gmail.com

## வீர வணக்கம்

# மை. சேசுமேரி



அன்பே
நீ என்னோடு
வாழ்ந்த காலம்
குறைவானதே
என்றாலும்
என்னோடு நீ பயணித்து
இந்த சாதி மத சனாதனத்தை
அழித்தொழிக்கும் பணிக்கே
உன்னை அர்ப்பணித்தாய்
என்ற நன்றி உணர்வோடு
இராண்டாம் ஆண்டில்
வீர வணக்கம் செலுத்துகிறேன்






நவம்பர் 13 முதல் 15 வரை பாம்செஃப் அமைப்பின் தேசிய மாநாடும், நவம்பர் 16, 17 ஆகிய நாட்களில் பாம்செஃப் அமைப்பின் போராட்டங்களுக்கான முன்னணி அமைப்பான பாரத விடுதலை முன்னணி (பாரத் முக்தி மோர்ச்சா) யின் 6 வது தேசிய மாநாடும் வெற்றிகரமாக நடந்தேறியது. போபாலில் பாரத மிகுமின் நிறுவனத்தின் ஜம்பூரி திடலில் மாநாடு நடைபெற்றது.





photos: palladam Vadivel

Owner and Publisher by : S.Vijayaragavan 99762 56821
Editor: C.Ragavan
# 103/104, Nethaji Road, M.C.Complex, Pollachi. 642 001
Kaattaaru2014@gmail.com